

கல்கி
KALKI
4.6.1961
30



உங்கள் ஆடைகள் எப்பொழுதும்
உன்னிப்பாக கவனிக்கப்படுகிறது
ஆர்ட்லின் துணியில் தைத்த ட்ரௌஸர்கள் உங்களை எப்பொழுதும் கவர்ச்சியுடன் விளங்கச் செய்கிறது. பின்னியின் ஆர்ட்லின் சுருக்கம்விழாமலும், உருக்குலையாமலும் நீண்ட நாள் உழைக்கவல்லது.
பின்னியின்
ஆர்ட்லின்
உங்களுக்குத் தேவையான பின்னி அணிகளை இந்த அடையாளம் காணப்படும் அனுமதி பெற்ற கடைகளிலிருந்து கண்ட்ரோல் விலைக்கே வாங்கவும் ⟶
WE STOCK
QUALITY FABRICS
BINNY & CO. (MADRAS) LTD.
பக்கிங்ஹாம் & கர்நாடிக் கம்பெனி லிமிடெட்
உரிமையாளர்: பின்னி & கம்பெனி (மதராஸ்) லிமிடெட்
JWT-BC-AN-1221a

கல்கி பொருளடக்கம்

பிலவ, வைகாசி 22 ❋ ஜூன் 4, 1961

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



சிகரெட் உற்பத்திக்கான ஆள்பலம், நிதி, பொருள் நிறைவு ஆகிய எல்லாமே வசதிகள் நம் நாட்டுக்கு உள்ளன. எனினும் பாரதத்திலே, சிகரெட்டுத் தொழில் தனக்குரிய உயர்நிலையை இன்னும் எய்த முடியவில்லையென்றால், அது இந்திய மூலதனம் சுணங்கிப்போயிருக்கிறது என்பதனாலோ, அல்லது தேர்ச்சிவாய்ந்த தொழிலினம் இல்லாமையாலோ அல்ல. ஆனால் இந்தியாவில் வாணிபக் கூட்டுறவு அமைத்த அந்நியர்களின் ஏகபோக உரிமையாட்சியினால்தான்.

புகையிலையின் வரலாறு... 9



பனாமா


ஒரு நல்ல சிகரெட்—
இறுதிவரை இன்பமூட்டுவது

பம்பாய்—57.

பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.

GT 709 TM

Greens' Advtg.



மலர் 20 | தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 44

ஏமாற்றும் வாதம்

'தேர்தலில் காங்கிரஸ் தோற்கடிக்கப்பட்டு விட்டால் திட்டவேலைகள் நிறைவேற்றப்படாமல் போய் விடுமென்றும், இதனால் எல்லாம் விரயமாகி விடுமென்றும், திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட வேண்டுமானால் காங்கிரஸைப் பலப்படுத்த வேண்டுமென்றும் திரு காமராஜ் கேட்டுக் கொண்டார். நட்டாற்றில் குதிரையை மாற்றுவது ஆபத்தானதென்றும் எச்சரித்தார். காங்கிரஸ் சர்க்கார் தம் வேலையைப் பாதியில் விட்டு விட்டு ஓடிவிட முடியாதென்றார்.' — *தினமணி 27-5-61*

திட்டம் காங்கிரஸ் வகுக்கவில்லை. தேசத்தில் உள்ள பல துறை நிபுணர்கள் சேர்ந்து, முந்தைய பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இருந்த நிபுணர்கள் வகுத்து வைத்து விட்டுச் சென்றுள்ள திட்டங்களின் ஆதாரத்தில் ஒரு புதுத் திட்டம் வகுக்கிறார்கள். பொது மக்களின் ஆதரவு பெற்று வந்த கட்சியினர், இந்தத் திட்டத்துக்கு ஆகும் செலவை, மக்களிடமிருந்து வரியாகவும், கடனாகவும், அந்நியக் கடனாகவும் பெறுகிறார்கள். அதனால் காங்கிரஸ்தான் திட்டம் வகுத்தது; காங்கிரஸ்தான் அமுல் நடத்த வேண்டும்; மற்றவர்கள் அமுல் செய்ய மாட்டார்கள் என்று சொல்லுவது பேதைமை.

திட்டம் என்பது கட்சித் திட்டமல்ல; தேசியத் திட்டம். எந்தக் கட்சி பதவிக்கு வந்தாலும் முந்தைய சர்க்கார் நிறைவேற்றி வந்த திட்டங்களை நடத்திக் கொண்டுதான் வரவேண்டும். முந்தி பதவியிலிருந்த கட்சி வாங்கியுள்ள உள்நாட்டு வெளிநாட்டுக் கடன்களை இன்று பதவிக்கு வந்துள்ள கட்சி திரும்பக் கொடுக்கத்தான் வேண்டும். இன்று அமெரிக்கா இந்தியாவுக்குக் கடன்தர முன் வருகிறது என்றால், நேருஜியையோ, நிதி மந்திரி மொரார்ஜியையோ பார்த்தல்ல. பாரத மக்களைப் பார்த்துத்தான் அவர்கள் கடன்தர முன் வருகிறார்கள். பாரத மக்கள் ஜனநாயகப் பண்பில் தேர்ச்சி பெற்று விட்டார்கள்; அரசாங்க பீடத்தில் கட்சிகள் மாறினாலும், தேசம் வாங்கிய கடனைத் திருப்பித் தரும் நாணயமும், நேர்மையும் இந்திய மக்களுக்கு உண்டு என்று உணர்ந்துதான் மேலை நாடுகள் நமக்குக் கடன்தர முன் வருகின்றன. இதை நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

காங்கிரஸ் ஆட்சி மாறி, சுதந்திரக் கட்சி பதவிக்கு வந்தாலும் வேறு எந்தக் கட்சி பதவிக்கு வந்தாலும், தேசம் ஏற்றுக் கொண்டுள்ள பொறுப்புக்களை விட்டுவிட முடியாது.

பிரிட்டனில் சோஷலிஸ்ட் கட்சி பதவிக்கு வந்தவுடன் சில தொழில்களைத் தேச உடைமையாக்கிற்று. நான்கு ஆண்டுகள் பதவியிலிருந்து அந்த ஆட்சி போய், தொழில்களைத் தேச உடைமையாக்குவதில் நம்பிக்கையில்லாத கன்ஸர்வேடிவ் கட்சி பதவிக்கு வந்தது. அதனால், தொழிற் கட்சி தேச உடைமையாக்கிய தொழில்களைக் கலைத்து விட்டதா, என்ன! இல்லை. கன்ஸர்வேடிவ் கட்சி இன்றும் நிலக்கரித் தொழிலை நடத்திக் கொண்டுதான் இருக்கிறது. நஷ்டம் தந்து வந்த எஃகுத் தொழிலைத்தான் கைவிட்டு விட்டது!

அதேபோல் நாளை சுதந்திரக் கட்சி பதவிக்கு வந்தாலும் வேறு எந்தக் கட்சி வந்தாலும் இன்று சர்க்கார் ஏற்று நடத்தி வரும் பல ஸ்தாபனங்களின் லாப நஷ்டங்களைச் செவ்வனே ஆராய்ந்து நாட்டு மக்களுக்கு லாபம் தரத்தக்க வகையில் நடத்தத்தான் வேண்டும். செவ்வனே நடத்தப்பட்டு வரும் சர்க்கார் ஸ்தாபனங்களைக் கலைக்காமல் நடத்திக் கொண்டுதான் போக வேண்டும்.

ஆனால் இன்று சென்னை நகரின் திருஷ்டிப் பரிகாரமாகவும், பொதுமக்களுக்குப் பெருந் தொல்லையாகவும் இருந்து வரும் பஸ் நிர்வாகத்தைத் தனியார் உடைமையாக்கப் பார்க்கும். அப்படிச் செய்து பொது மக்களுக்குச் சுகாதார வசதியுள்ள பஸ்கள், எந்த ஸ்டாண்டில் நின்றும் ஐந்து நிமிஷங்களுக்குள் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று தனி முதலாளிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கும்.

திட்டம் காங்கிரஸ் திட்டமல்ல. அது தேசியத் திட்டமாதலால் எந்தக் கட்சி பதவிக்கு வந்தாலும் அதைப் பொது மக்களுக்குப் பெரும் லாபமும் வசதியும் கிடைக்கும்வகையில் நிறைவேற்றத்தான் பார்க்குமே தவிர கைவிடாது. திட்டத்தில் பொதுமக்களுக்கு லாபமின்றி யிருக்கும் காங்கிரஸின் பத்தாம் பசலி பகட்டுப்பகுதிகளைத்தான் கைவிடும்.

அடுத்த தேர்தலில் பாரத மக்கள், காங்கிரஸ் கட்சியைத் தோற்கடித்து, புதுக் கட்சியை ஆட்சிப் பீடத்தில் அமர்த்தினால் நட்டாற்றில் குதிரையை மாற்றுவதாகாது.

திரு காமராஜ் சொல்வது, வெறும் தேர்தல் யுக்திப் பிரசங்கம். ஐந்தாண்டுத் திட்டமும், பத்தாண்டுத் திட்டமும், பதினைந்தாண்டுத் திட்டமும் போட்டுக் கொண்டே போய் அதனால் என்றென்றைக்கும் காங்கிரஸ் கட்சியே ஆட்சியிலிருக்க வேண்டும் என்று வாதிப்பது பொய் வாதம். அந்த வாதம் நியாயமாக இருப்பின் அரசியல் நிர்ணயச் சட்டத்தை மோசடியாக நிராகரிக்கவே திட்டங்கள் போட்டதாக முடியும். எந்த நாட்டிலும் அவ்வப்போது ஆட்சியிலிருக்கும் கட்சியினர் சில வேலைகளையும் திட்டங்களையும் ஆரம்பிப்பார்கள். அதனால் அக்கட்சியினரையே ஒவ்வொரு தேர்தலிலும் திரும்ப ஆட்சிக்கு அனுப்ப வேண்டும் என்பதில்லை. திரு காமராஜ் அவர்களுடைய வாதம் ஜனநாயகத்துக்கு நேர்விரோதமான வாதம்.

திரு ராமமூர்த்தியின் நாடகம்

இலங்கைத் தமிழர்கள் தங்களது நியாயமான கோரிக்கைக்காக மிக அமைதியான முறையில் இயக்கம் நடத்தி உலக மக்களின் பாராட்டைச் சம்பாதித்திருக்கிறார்கள். இலங்கைப் போலீசாரும், ராணுவத்தினரும் பல கொடுமைகள் நிகழ்த்தி யிருக்கிறார்கள். இயக்கத் தலைவர்கள் அனைவரும் சிறைப் படுத்தப் பட்டிருக்கிறார்கள். இருப்பினும் இலங்கைத் தமிழர்கள் அமைதியான முறையில் இயக்கம் நடத்தி வருவது, அவர்களுக்கு அவ்விஷயத்திலுள்ள தீவிர உணர்ச்சியையே காட்டுகிறது!

உண்மை நிலை இப்படியிருக்க, தமிழ் நாட்டிலிருந்து, இலங்கைக்குச் சென்று விட்டு வந்த கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகரான திரு ராமமூர்த்தி வெளியிட்டுள்ள அறிக்கை அபாண்டமானதாக இருக்கிறது. இலங்கைத் தமிழர்கள் கிளர்ச்சி, வெளி நாட்டுத் தூண்டுதலின்மீது நடக்கிறது என்றும், உள்நாட்டு ஆட்சியைக் கவிழ்க்கச் செய்யும் சதியென்றும் பிதற்றியிருக்கிறார்.

பெடரல் கட்சித் தலைவர் திரு செல்வநாயகம் அவர்களின் உயரிய பண்பையும், அந்தரங்கசுத்தியையும், இன்று இலங்கை ஆளும் கட்சியினரே பெரிதும் மதிப்பவர்கள். அதுமட்டுமின்றி இலங்கைப் பெடரல் கட்சித் தலைவர்கள் இம்மொழி விஷயமாக இன்று நேற்றல்ல, பல ஆண்டுகளாகவே போராட்டம் நடத்தி வருபவர்கள். யாழ்ப்பாணத் தமிழர்களின், கிழக்கு மாகாணத் தமிழர்களின் அன்பையும் மதிப்பையும் பெற்றவர்கள். அப்படிப்பட்டவர்களுக்கு மாசு கற்பிக்கும் வகையில் திரு ராமமூர்த்தி பேசியிருப்பது வருந்தத்தக்க விஷயமாகும்.

போன மூச்சில் திரும்பிவந்து விட்டார் திரு ராமமூர்த்தி. அதனால் இலங்கை சிங்களக் கம்யூனிஸ்ட் கட்சியினரையும் அரசாங்க மந்திரிகளையும் தவிர வேறு யாரையும் சந்தித்துப் பேசக்கூட அவருக்கு நேரமில்லை. இவர் சென்ற வேளை பெடரல் கட்சித் தலைவர்கள் சிறையில் இருந்திருக்கிறார்கள். அவர்களைக் கலந்து பேசியிருக்கவும் முடியாது.


சென்னையில், சர்வ கட்சி கூட்டம் நடத்தி இலங்கைவாழ் தமிழர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்த போது, இந்தியக் கம்யூனிஸ்ட்டுகள் ஆதரவு தந்தார்கள்.

ஆனால் இதற்குச் சிங்களக் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து கண்டனம் வரவே, தமிழ் நாட்டுக் கம்யூனிஸ்ட்டுகள் போக்கு மாறி விட்டது. எந்த நாட்டுக் கம்யூனிஸ்ட்டுகளாயினும் எல்லாரும் ஒரே சாதி என்பதற்கு இது ஓர் உதாரணம்.

திரு ராமமூர்த்தி ஏற்கனவே மனத்தில் முடிவு செய்து கொண்டதை, சிங்களக் கம்யூனிஸ்ட்டுகள் போதித்த முடிவை, வெளியிட இலங்கை போய்விட்டு வந்ததாக ஒரு நாடகம் நடத்தியிருக்கிறார்.

செய்தி தெரியுமா?

சாமா


சம்மிட்
ஜூன் 3
இலங்கை சர்க்காரைக் கவிழ்க்கவே இலங்கைத் தமிழர்கள் கிளர்ச்சி நடத்துகிறார்கள்!
கம்யூனிஸ்ட் ராமமூர்த்தி
உலக அபிப் பிராயம்
இலங்கைத் தமிழர்கள்
வகுப்பு வாதத்தை வெட்டிக் களைவோம்!
கேரள முஸ்லீம் லீக்
டில்லி முஸ்லீம் அரசியல் மகாநாடு
தி.க
காங்கிரஸ்

அதிகாரத்தின் கொடுங்கோன்மை

காங்கிரஸ் ஆட்சியாளர்களுடைய அதிகார போதையின் அட்டகாசத்திலும் அட்டூழியத்திலும் சிக்கிக்கொண்டு தவிக்கும் தனி மனிதனுடைய உரிமைகள் எந்தெந்தவழிகளில் பறிக்கப்படுகின்றன என்பதை உள்ளங்கை நெல்லிக்கனி போல் எடுத்துக் காட்டுகிறது சமீபத்தில் பத்திரிகையில் வெளியான ஒரு செய்தி. இச்செய்தி குறிப்பிடும் சம்பவம் பாரதப் பிரதமர் நேருஜியின் சொந்த ராஜ்யமாகிய உத்தரப் பிரதேசத்தில் நிகழ்ந்தது.

திரு மஹாபீர் பிரசாத் சுக்லா என்பவர் உத்தரப் பிரதேச அரசாங்கத்தின் ரெவின்யூ இலாக்கா மாஜி உப-மந்திரி. மந்திரி என்ற முறையில் தமது குடியிருப்புக்காக ஒரு பெரிய பங்களாவை வாடகைக் கட்டுப்பாட்டு அதிகாரியின் உதவியினால் 1953 ம் ஆண்டில் அமர்த்திக் கொண்டார். இந்தப் பங்களாவின் சொந்தக்காரர் ஒரு பெரிய குடும்பி. பதினான்கு பேர்கள் அந்தக் குடும்பத்திலுள்ளார்கள். அவர்கள் எல்லாம் தனித்தனியாக நாலு வெவ்வேறு வீடுகளில் வாடகை கொடுத்துக் கொண்டு வசிக்கின்றனர். தம்முடைய வீட்டில் தாமே வசிக்க அனுமதிக்க வேண்டுமென்றும் வீட்டைக் காலிசெய்து விடும்படி அமைச்சருக்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்றும் சொந்தக்காரர் குடியிருப்புக் கட்டுப்பாட்டு அதிகாரியிடம் மனுக் கொடுத்தார். தவிரவும் கோர்ட்டிலும் அமைச்சருக்கு எதிராகப் பிராது கொடுத்தார். மந்திரியை வெளியேற்ற 1953 ம் ஆண்டிலேயே உத்தரவும் பெற்று விட்டார். ஆனால் அமைச்சர் சுக்லா வீட்டைக் காலி செய்யாததுடன் வாடகைக் கட்டுப்பாட்டு அதிகாரியை அதிகார பலத்தினால் தம் வயப்படுத்திக் கொண்டு, அதே வீட்டை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி காரியதரிசியின் குடியிருப்புக்காக, 1957ல் மாற்றிக் கொண்டார். சில நாட்களுக்குப் பின்னர், அவரைக் காலி செய்யச் சொல்லி, கட்டுப்பாட்டு அதிகாரியின் உதவியுடன் தகாத முறையில் மறுபடியும் தமக்கே அவ்வீட்டை மாற்றிக் கொண்டு விட்டார். சொந்தக்காரர் வீடு தமக்கு வேண்டுமென்று காட்டிய உண்மைக் காரணங்களையெல்லாம் 'கட்டுக்கதை' என்று விசாரணையின்றியே தள்ளுபடி செய்து விடும்படியும் அமைச்சர் ஏற்பாடு செய்து விட்டார். இதன் விளைவாக 1953லிருந்து இன்று வரையில் அமைச்சர் சுகமாகப் பங்களாவில் வாழ்ந்து வருகிறார். சொந்தக்காரர் தமது 14 பேர் குடும்பத்துடன் நாலு தனி வீடுகளில் கிடந்து தவிக்கிறார். தமது சொந்த வீட்டில் தாம் வசிக்க முடியாமல் வருஷங்கள் ஏழு ஓடிவிட்டன. கோர்ட்டும் கையுமாக அலைந்தழிகிறார்.

அலஹாபாத் உயர்நீதி மன்றத்தில் இவ்வழக்கை விசாரித்த நீதிபதி வீட்டைக் காலி செய்யும்படி திரு சுக்லாவுக்கு உத்தரவு பிறப்பித்தார். அவருடைய தீர்ப்பில் காணப்படும் வாசகம் சர்க்கார் கவனிக்கத்தக்கது.

> ''அரசியல் சட்டத்தில்' இந்தியப் பிரஜை என்ற சொற்றொடர் வெறும் அலங்கார வார்த்தைகள் அல்ல. சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காகவும், அதிகார வர்க்கத்தினிடமிருந்து ஏற்படும் கொடுங்கோன்மைகளிலிருந்து காப்பாற்றவும் உறுதி கூறும் வார்த்தைகள். ஒரு சாதாரண பிரஜை தனது உரிமைகளுக்காகவும் சொத்தின் பாதுகாப்புக்காகவும் வன்மையுள்ள எதிரிகளுடன் போராடும்போது, சட்ட நுணுக்கங்களிலும் முறைகளிலும் மனத்தைச் சிதற விடாமல், சொந்தக்காரர்களுக்கு அவர்களுடைய சொத்தை வாங்கிக் கொடுப்பதிலேயே நீதி மன்றங்கள் கவனம் செலுத்த வேண்டும். இந்த வழக்கு இவ்வுண்மைக்கு ஓர் எடுத்துக்காட்டு''

என்று அவர் கூறியுள்ளார்.

இந்த ஹைகோர்ட்டு தீர்ப்பானது அமைச்சரின் நேர்மைக் குறைவையும் அரசாங்க அதிகாரிகளின் நடத்தையையும் பற்றி ஆதாரத்துடன் கண்டித்திருக்கிறது. இம்மாதிரி சம்பவங்களும் கொடுமைகளும் வெளி வராமல் அமுங்கிக் கிடப்பவை இன்னும் எவ்வளவோ! இத்தகைய சம்பவங்கள் மலிந்து கிடக்கும் ஓர் ஆட்சியைப் பதவியில் மேலும் வைத்திருப்பது மக்களின் நன்மைக்கு ஏற்றதல்ல.

அதிக ஜ்யேஷ்ட அமாவாசையாகிய 13 - 6 - 1961 வரையில் கூட்டாகவோ, தனித் தனியாகவோ, விஷ்ணு சகஸ்ரநாமத்துடன் ஸ்ரீமந் நாராயணனுக்கு லக்ஷார்ச்சனையும், ஸ்ரீமத் பாகவத சப்தாகமும் நடத்தினால் க்ஷேமமுண்டாகும் என்ற திருவுள்ளக் கருத்தை ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராச்சாரிய சுவாமிகள் வெளியிட்டிருக்கிறார்கள்.

நேருஜியின் பிரசாரம்

ஒரிஸ்ஸா நாட்டில் காங்கிரஸ் பிரசாரம் செய்ய வந்த நேருஜி, தேர்தலில் எதையாகிலும் சொல்லி வெற்றி பெறுவதற்காக ராஜாக்களையும் மகாராஜாக்களையும் கண்டித்துப் பேசியிருக்கிறார். காங்கிரஸுக்கு எதிராக உள்ள கணதந்திர பரிஷத் என்ற கட்சி ராஜாக்கள் கொண்ட கட்சி என்பதற்காக நேருஜி அவ்வாறு பேசியிருக்கிறார். பாரத தேசம் சுதந்திரம் அடைவதற்கு முன்பே மைசூர் சமஸ்தானம் மின்சாரம், தொழில் ஆகிய துறைகளில் மற்றப் பிரதேசங்களைவிட முன்னணியில் இருந்தது. அதே போல் திருவிதாங்கூரிலும் ராஜாவின் ஆட்சிக் காலத்தில்தான் பல தொழில்கள் ஏற்படுத்தப்பட்டன. நூற்றுக்கு 80 சதவிகிதம் பேர்கள் கல்வியறிவு பெற்ற ராஜ்யம் என்ற பெயர் எடுத்ததும் அப்போதுதான். அதேபோல வட நாட்டிலும் பரோடா முதலிய பல சமஸ்தானங்கள் முன்னேறித்தான் இருந்தன. தேசம் விடுதலையடைந்தவுடன் பட்டேலின் பேச்சுக்கிணங்கி இந்தியாவுடன் இணைந்த ஐந்நூற்றுச் சொச்சம் ராஜாக்களது தேச பக்தியையும் தியாகத்தையும் பாராட்ட வேண்டாமா? அவர்கள் விரும்பியிருந்தால் எவ்வளவோ இடையூறுகளை விளைவித்திருக்கலாம். அப்படியெல்லாம் செய்யாமல் ஒழுங்காக நடந்து கொண்டதற்கு நேருஜியின் ஆட்சியில் இதுதான் அவர்கள் கண்ட பலன்.

என்ன காரணத்தினால் சில ராஜாக்களும் சேர்ந்திருக்கும் கணதந்திர பரிஷத் கட்சியை மக்கள் ஆதரிக்க வருகிறார்கள் என்று அரசியல் நிபுணர்கள் விசாரித்து ஆராய வேண்டுமே யொழிய, வெறும் 'வசவு' பிரயோகம் செய்வது நேர்மையாகாது. காங்கிரஸ்காரர்களின் நிர்வாக நேர்மையையும் திறமையையும் பழைய ராஜாக்களாக இருந்தவர்களின் தற்கால நேர்மையையும் திறமையையும் ஒப்பிட்டுப் பார்த்துத்தான் மக்கள் அவர்களை ஆதரித்து வருகிறார்கள். இப்படி இல்லாவிடில் பிரதம மந்திரி நேருஜியே தேர்தல் பிரசாரம் செய்ய ஒரிஸ்ஸாவுக்குப் போக வேண்டிய அவசியம் இருந்திருக்காது.

பல மாஜி ராஜாக்களும் ஜமீன்தார்களும் நன்கு படித்தவர்கள், ஆற்றல் பெற்றவர்கள், ஒழுக்கமும் தெய்வ பக்தியும் நிரம்பியவர்கள். இவர்களைப் போலவே வியாபாரிகளும். இவர்கள் எல்லாம் சட்ட சபைகளிலிருந்தால், மொத்தத்தில் தேசம் நல்ல நிர்வாகமும் முன்னேற்றமும் அடையும். ஆனால் இவர்கள் காங்கிரஸ்காரர்களின் நிர்வாகத்தில் தங்களுடைய கதி என்ன ஆகுமோ என்று பயந்து நியாயமான முறையில் முன்வராமல் இருக்கிறார்கள்.

சுதந்திர நிதி

(7-5-61 லிருந்து 24-5-61 வரை)

வி. ராமச்சந்திர பாகவதர்	1	00
டாக்டர் கே. ராமச்சந்திரன்	10	00
வி. எஸ். நாகசாமி	1	00
எஸ். கோதண்டராமன்	2	00
கே. எம். முகம்மது அப்துல்லா	1	00
டாக்டர் ஏ. வி. சுப்பிரமணியம்	10	00
என். வி. அனந்தலக்ஷ்மி-ராமமூர்த்தி	2	00
எஸ். என். சௌந்தரராஜன்	2	00
டி. கே. சுந்தரவடிவேலு	2	50
கே. ரங்கசாமி அய்யங்கார்	1	00
எஸ். பாலசந்தர்	3	00
எஸ். ராம்நாத்	1	00
எஸ். ஜெயா	1	00
லலிதா பரமேஸ்வரன்	10	00
பி. என். ரங்கசாமி அய்யங்கார்	5	00
துங்கபத்ரா அணை அன்பர்	1	05
மேல் நர்மா இளைஞர்கள்	2	00
எஸ். ஆனந்தம்	1	00
துரைவாணி நகர் அன்பர்	1	00
10-1-61 முதல் 6-5-61 முடிய	5096	90
ரூ.	5154	45

நன்கொடைகள் அனுப்பியவர்களுக்கு நன்றி. பெரியதொரு அரசாங்கத்தைத் தன் கையில் வைத்துக் கொண்டு ஆர்ப்பாட்டம் செய்யும் காங்கிரஸை எதிர்க்க இந்த நன்கொடைகள் எம்மட்டும் உதவும்? இந்த ஊக்கம் போதுமா? பெரியோர்களும் சிறியோர்களும் யோசனை செய்ய வேண்டும்.

19-5-61

சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரி


சுதந்திரக் கட்சிக்காகப் பண உதவி செய்கிறவர்கள் ஸ்ரீ ராஜாஜி C/O கல்கி காரியாலயம், சென்னை-10 என்ற விலாசத்துக்கு அனுப்பலாம்.



ஜான்ஸன்ஸ்

பேபி சோப்

... உலகம் முழுவதும் தாய்மார்களால்
நம்பப்பட்டது!



குழந்தைகளின் இளம் சருமத்திற்கென்றே
பிரசித்தியேகமாக தயாரிக்கப்பட்ட
மிருதுவான தூய சோப்

பரிசுத்தமான, வெண்மை நிறத்திலுள்ள ஜான்ஸன்ஸ் பேபி சோப் நிறைய நுரையை அளிக்கிறது, மிருதுவாக அழுக்கைப் போக்குகிறது, கழுவினால் சுலபமாக அகன்றுவிடுகிறது — சருமத்திற்கு இதமளித்து அதை மிருதுவாக்குகிறது. இந்த சோப் பச்சிளங் குழந்தையின் பட்டுப்போன்ற சருமத்திற்கென்றே பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டது.

குழந்தை பராமரிப்பு புத்தகத்தின் ஆங்கிலம் அல்லது தமிழ் பிரதியை பெறுவதற்கு உங்கள் பெயர் மற்றும் விலாசத்துடன் 25 ந. பைசா தபால் வில்லைகளையும் சேர்த்து தபால் பெட்டி 6531, டிபார்ட்மெண்ட் நெ. 44, பம்பாய் 26, என்ற விலாசத்திற்கு இன்றே அனுப்புங்கள்.

குழந்தைகளின் பரிபூர்ண பராமரிப்பிற்கு


ஜான்ஸன்ஸ் தயாரிப்புகள்

J W T - JJ 2037

பேராச்சர்யம்

ரஷ்யாவில் ஒரு மலைச் சிகரத்துக்கு, வான மண்டலத்தில் முதன் முதலில் பிரயாணம் செய்துவிட்டு வந்த திரு ககாரின் பெயரை வைத்திருக்கிறார்களாம். அந்த ருஷ்ய மலை, இந்தப் பெயரை வைத்துக் கொண்டதற்குப் பெருமை தாங்காமல் இன்னும் ஒரு முழம் வளர்ந்திருக்கும்!

ஒன்று மட்டும் ஒப்புக் கொள்ள வேண்டும். இந்தப் பெயர் வைப்பது போன்ற தொல்லை பிடித்த வேலை வேறு கிடையாது. தொல்லையைக் குறைக்க நம் முன்னோர்கள் ஒரு தந்திரம் செய்து விட்டார்கள். 'தாத்தாவின் பெயரைப் பேரனுக்கு வை, பாட்டியின் பெயரைப் பேத்திக்கு வை' என்று சொன்னார்கள். இப்படி நான்கு குழந்தைகள் இரண்டு ஆண், இரண்டு பெண்ணாக இருந்தால் அப்பா, அம்மாவின் பெற்றோர்கள் பெயர்களைக் குழந்தைகள் எடுத்துக் கொள்ளும்! 'அதற்கும் மேல் பிறந்தால் என்ன செய்வது?' என்று தெரிந்துதான் சர்க்கார் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் கொண்டு வந்து எவ்வளவோ பிரசாரம் செய்து பார்க்கிறார்கள். ஏதாவது பலனிருந்தால்தானே? 'என்ன பெயர் வைக்கிறது?' என்று மறுபடியும் குழப்பிக் கொள்ளத்தான் செய்கிறார்கள் மக்கள்.



முன்பெல்லாம், அதாவது இருபது, இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு வீட்டுக்கு வீடு தேசத் தலைவர்கள் பெயர்கள்அடிபடும். மோகன், சித்தரஞ்சன், கங்காதரன், சரோஜினி, ஜவாஹர் என்றுதான் பெயர்கள் இருக்கும். புது ஊர் தோன்றினால் தெருக்கள் பெயர்களெல்லாம் காந்தி தெரு, சரோஜினி தெரு, மோதிலால் தெரு என்றுதான் இருக்கும்! அப்போதெல்லாம் தேசத் தலைவர்களிடம் மோகமிருந்த காலம்.

இப்போது முன்பிருந்த நிலைக்கு நேர்மாறான நிலை நிலவுகிறது. மக்கள் அரசியல் தலைவர்களைப் பழிவாங்க ஆரம்பித்து விட்டனர். பெயர் வைக்கும் தொல்லையை அரசியல் தலைவர்களுக்கு ஒப்படைத்து விட்டார்கள்.

இன்று நாட்டில் எங்கேயாகிலும் பொதுக் கூட்டம் நடைபெற்றால், ஒரு கூட்டம் குழந்தைகளைக் கையில் வைத்துக் கொண்டு நிற்கிறது. தலைவருக்கு ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் தட்சிணை கொடுத்துக் குழந்தைக்கு நாமகரணம் செய்யும்படி வேண்டிக் கொள்ளுகிறார். அவர் தனக்கு வேண்டிய அரசியல் தலைவர் பெயரை வைக்கிறார்.

இந்தப் பெயர் வைக்கும் படலம் முடிந்த பிறகு தலைவர், கல்யாணம் நாமகரணம் முதலிய சடங்குகளின்போது வைதிகர்களுக்கு தட்சிணை கொடுப்பதைக் கண்டிக்கிறார்!

இது இப்படியிருக்க, சர்க்காரின் நிலை எப்படியிருக்கிறது என்று பாருங்கள்.

நாட்டு மக்களுக்குக் குடும்பக் கட்டுப்பாட்டைப் போதித்து, பெயர் வைக்கும் தொல்லையிலிருந்து விடுபடுங்கள் என்று உபதேசம் செய்யும் சர்க்கார் இன்று தானே அந்தத் தொல்லையில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறது!

பாரத சர்க்கார் இப்போது பல தொழில்களை ஏற்று நடத்துகின்றது. அதில் ஒன்று கப்பல் கட்டும் தொழில். கப்பல் கட்டி முடிந்ததும் என்ன பெயர் வைப்பது என்று தொல்லை பிறந்து விடுகிறது. இத்தொல்லையின் விளைவாக, ஜலஉஷா, ஜலகங்கா, ஜலயமுனா என்றெல்லாம் பெயர் வைத்து வந்திருக்கிறார்கள்.

சில ஆண்டுகளுக்கு முன் சென்னை சர்க்கார் ஒரு விமானம் வாங்கினார்கள். அதற்கு என்ன பெயர் தெரியுமா? காற்றுத் தேவனின் புதல்வனான ஹநுமானின் பெயரை வைத்தார்கள். சில நாட்களில் ஹநுமான் காற்றுத் தேவனுடன் கலந்து மறைந்து விட்டான்!

பம்பாயிலிருக்கும் அணுசக்தி இயந்திர ஸ்தாபனத்துக்கு நம் பிரதமர் 'அப்ஸரா!' என்ற பெயர் வைத்தார்! அணுசக்திக்கும் அப்ஸரைக்கும் என்ன சம்பந்தமோ?

சமீபத்தில் ஒரு ரஸமான செய்தி வெளி வந்தது. இந்திய சர்க்கார் புதிதாக நடத்தும் கடிகார இயந்திரசாலையில் முதல் முதல் செய்து முடித்த கடிகாரத்துக்கு என்ன பெயர் வைப்பது என்று தெரியாமல் விழித்தார்களாம். பிறகு அந்த இயந்திரசாலையின் டெலிபோன் கிளார்க்காக வேலை செய்யும் ஸ்ரீமதி சுஜாதாவின் பெயரையே வைத்துவிட்டார்களாம்! இந்தச் செய்தியைப் படித்தபோதுதான் டெலிபோன் கிளார்க்காகத் தான் இல்லாமல் போய் விட்டோமே என்று எச்சுப்பாட்டி வருத்தப்பட்டாளாம். — இப்படி விஷமக் கொடுக்கு வெங்கிட்டு சொல்லுகிறான்! நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? —எஸ்.வி.எஸ்.

பிராப்தம்



கதவைத் திறந்தவுடன் காலில் இடறியது தபால் உறையொன்று. முகம் மாறி விழுந்திருந்த அதை ஆவலுடன் அவசரம் அவசரமாக எடுத்துப் பார்த்தேன். விலாசம் எழுதியிருந்த கையெழுத்தைப் பார்த்ததும் பரந்த உற்சாகம் பறந்து போயிற்று. அசுவாரசியமாய்க் கடிதத்தைப் பிரித்துப் படித்தேன்.

நான் நினைத்த மாதிரியே கடிதம் முழுவதிலும் என் கலியாணம் பற்றித்தான் பேச்சு.

“மாம்பலத்தில் இருக்கும் வக்கீல் சந்தானத்தின் பெண் ஜானகியின் ஜாதகம் மிக நன்றாகச் சேர்ந்திருக்கிறதாம். பெண் கிளி மாதிரி இருக்குமாம். ‘நான் என்ன கண்டா, அதைப் பிடித்துப் போட்டுக் கொள்ளுவதற்கு?’ என்று குதர்க்கம் பேசாதே. பெண்ணைப் பார்த்து விட்டு மேற்கொண்டு பேச வேண்டும். ஆகையால் நீ வரும் வெள்ளிக்கிழமை பெண்ணைப் போய்ப் பார்த்து விட்டு உன் அபிப்பிராயத்தை எழுது. உன் அத்திம்பேர் ஸ்ரீமான் சந்தானத்துக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். ஸ்ரீமான் சந்தானமும் உனக்கு நேரே கடிதம் எழுதுவார். இந்தத் தடவை என் பேச்சைத் தட்ட மாட்டாய் என்று நம்புகிறேன். இம்முறையும் என்னை உதாசீனம் செய்யும் எண்ணம் இருந்தால் உனக்கு அக்காள் என்று ஒருத்தி இருக்கிறாள் என்பதை மறந்து விடு.”

தமக்கையின் கடிதத்தைப் படித்ததும் ஒரு பக்கம் அவள்மீது அனுதாபம் ஏற்பட்டது. மற்றொரு பக்கம் சிரிப்பு வந்தது. அவளைக் குறை கூறுவதும் சரியில்லை. நான் என் தாயின் வயிற்றிலிருந்து வெளிவந்து கண் திறந்த நாள் முதல் என்னைப் பேணி வளர்த்தவள் அவள். சொந்த மகனுக்குமேல் என் மேல் பற்று. நான் முப்பது வயதைக் கடந்தும் கலியாணம் செய்து கொள்ளாதது அவளுக்குப் பெரிய குறை.

கடிதத்தை உறையினுள் இட்டுவிட்டு, ‘எதுவும் நடக்க வேண்டுமென்றால் நாம் அதை மாற்றுவதற்கில்லை. விதி வழியை யாரே அறிவார்? சரி, உன் விருப்பப்படியே பெண்ணைப் போய்ப் பார்க்கிறேன்’ என்று கையில் இருந்த தபாலுக்குப் பதில் பகர்ந்து கொண்டே நாற்காலியைவிட்டு எழுந்தேன்.

வெள்ளிக்கிழமை வந்தது. ‘வரப் போகும் தலைவலியைப் பார்ப்பதற்காக லீவு தேவை’ என்ற உண்மைக் காரணத்தை லீவு மனுவில் எழுதாமல் ‘வயிற்றுவலி’ என்ற பொய்க் காரணத்தை எழுதித் தபாலில் போட்டுவிட்டு மாம்பலம் நோக்கிக் கிளம்பினேன், மாம்பலம் ஸ்டேஷனில் என்னைச் சந்திப்பதாகச் சொல்லி ஸ்ரீ சந்தானம் எழுதிய கடிதத்தை நினைவாக எடுத்துக்கொண்டு.

மாம்பலம் ரயில் நிலையத்தில் மின்சார ரயில் வண்டி நின்று விட்டுக் கிளம்பியவுடன் தான் மாம்பலம் ஸ்டேஷன் வந்து விட்டதை உணர்ந்தேன். உடனே அவ

சரம் அவசரமாக, ஓடும் ரயிலிலிருந்து குதித்து விட நினைத்து ஒன்றன்பின் ஒன்றாகக் கால்களை லாகவமாகப் பிளாட்பாரத்தில் பதிய வைத்து இறங்கத் திட்டமிட்டது வாஸ்தவம் தான். ஆனால் வண்டியின் வேகம் மீறி விட்டதே! பிளாட்பாரத்தில் குதித்த நான், பாரமாய் விழுந்து விட்டேன்.

உடலெங்கும் எக்கச் சக்கமாய் அடி. மண்டையிலிருந்து ரத்தம் கசிந்து முகமெல்லாம் வழிந்தது: முழங்கால்களிலெல்லாம் சிராய்ப்பு. வலது கையில் வலி தாளவில்லை. எலும்பு முறிந்து விட்டதோ என்ற சந்தேகம் வந்து ஆராய்கையில், கையைத் தூக்கவே முடியவில்லை. ரத்தம் அதிகமாய் வெளிப்பட்டு விட்டதால் உட்கார முடியவில்லை. அப்படியே தலை சுற்றிக் கீழே விழுந்தேன்.

கண்களைத் திறந்தபோது கட்டுகளுடன் ஒரு கட்டிலில் படுத்திருந்தது புரிந்தது. மாம்பலம் ரயில் நிலையத்துக்கு அருகில் இருக்கும் ஒரு 'நர்ஸிங் ஹோமி'ல் படுத்திருக்கிறேன் என்பது எனக்கு மருந்து வைத்துக் கட்டிய நர்ஸ் மூலம் தெரிந்தது. அருகில் சர்க்கார் இலவச ஆஸ்பத்திரி எதுவும் இல்லாத காரணத்தினால் மாம்பலம் ஸ்டேஷன்மாஸ்டர் அங்கே என்னைக் கொண்டு சேர்த்திருந்தார். அந்த மட்டும் அவருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டவன்.

டாக்டர் வந்தார்.

"நல்ல வேளை! உங்களுக்குப் பலத்த அடி எதுவும் படவில்லை. தப்பித்தீர்கள்! ஓடும் ரயிலிலிருந்து யாராவது குதிப்பார்களா? அப்படி என்ன முகூர்த்தம் தட்டுக்கெட்டுப் போய் விட்டது!" என்று கேட்டுக் கொண்டே வலிக்க வலிக்க ஓர் ஊசியைக் குத்தினார்.

அவர் என்ன கண்டார், முகூர்த்தம் என்ற ஒன்றை ஏற்பாடு செய்வதற்காகத்தான் பெண் ஒருத்தி

சங்கரசுப்பு

யைப் பார்க்கச் சென்று கொண்டிருந்தேன் என்பதை? 'பெண் பார்ப்பது' என்ற தொடர் மனத்தில் பட்டதும் எனக்கு எரிச்சல் வந்தது. ஒரு பெண்ணைப் பார்க்கப் போகும் முன் இப்படி ஒரு பெரிய விபத்து என்றால் அந்தப் பெண்ணைக் கலியாணம் செய்து கொண்ட பிறகு எவ்வளவு பெரிய விபத்தைச் சந்திக்க வேண்டி வருமோ: உடனே எனக்கு என் தமக்கை பார்த்துவிட்டு வரும்படி எழுதியிருந்த பெண்ணின் மீது வெறுப்பு ஏற்பட்டது. அந்த வெறுப்பில் நர்ஸ் கொடுத்த கசப்பு மருந்துகூடக் கசப்பாய்ப் படவில்லை.

நர்ஸ் போனதும் வாசலைப் பார்த்துப் படுத்துக் கொண்டிருந்தேன். அப்போது திடீரென்று என்னைத் திகைக்க வைக்கும்படி கால அவசரமாய் ஒரு பெண் உருவம் என் அறைக்குள் நுழைந்தது. என்னைப் பார்த்ததும் பார்க்கக் கூடாததைப் பார்த்து விட்டது போல், "ஓ. மன்னிக்கணும்! அறை தவறி வந்துவிட்டேன்" என்று தான் அறை தவறி வந்து விட்டதைத் தவறு என்று உணர்ந்து, அதற்காகத் தான் உண்மையிலேயே வருந்துவதை முக பாவத்தில் ஒரு விநாடிக்குள் காட்டிவிட்டு ஓடிப்போய் விட்டாள். மின்னல் வெட்டி விட்டு மறைந்தாற் போலிருந்தது. நான் ஒரு விநாடிதான் அவளைப் பார்த்தேன். இருந்தாலும் அந்தக் குறுகிய காலத்தில் அவள் அழகை அளந்து விட்டேன்.

நல்ல உயரம். உயரத்துக்கேற்ற உருவம். உருவத்துக்கேற்ற பருவம். பருவத்துக்கே உரித்தான ஒயில். அருவருப்படும்படியான நிறத்தோடு கூடிய அழகான முகம். அதில் அழகழகாய்ச் சீரான மூக்கு. சிதளமான கண்கள், மென்மையான காதுகள், தாமரை மொக்கே போன்ற வாய். அவள் பேசியது ஒரு சில வார்த்தைகள்தான் என்றாலும் அவள் வாயில் வரிசை கட்டியிருந்த சீரான, வெண் பற்கள் வெளியே தெரிய அவை போதுமானவையாக இருந்தன. நெற்றியின் மேலே பிரிந்த வகிடின் இரு புறமும் பிரிந்த கருநிறக் கேசம் இரு நீண்ட பின்னல்களாய்த் தொங்கிப் பின்



தலையைப் பின்னங் கால்களுக்கு இழுத்தன.

அவள் உருவத்தை வர்ணித்திதும் அவளை மறுபடியும் பார்க்க மாட்டோமா என்ற தவிப்பு வந்து விட்டது.

என் ஏக்கம் வீணாய்ப் போகவில்லை. அடுத்த நாள் காலை அந்தப் பெண் என் அறை வாசல் வழியே போனாள். போகும்போது என் அறைக்குள் பார்வையை வீசிப் பார்த்துக் கொண்டே போனாள். என்னைப் பார்த்துப் புன்னகை புரிந்து கொண்டு போனதாகப் படவே நான் அவளைப் புன்னகையுடன் பார்க்க முயன்றேன். ஆனால் அவள் அதற்குள் மறைந்து விட்டாள். அறையின் வாசலை எவ்வளவு சிறியதாய் உருவாக்கியிருக்கிறார்கள்!

மறுபடியும் அவள் தரிசனம் கிடைக்க இருபத்து நாலு மணி நேரம் தவங்கிடக்க வேண்டுமே எனத் தவித்தேன். தவிப்பு அரைமணி நேரம்தான். ஏனெனில் அரைமணி அவகாசத்துக்குப் பிறகு மறுபடியும் அவள் என் அறை வாசல் வழியே போனாள். அவளைக் கூப்பிட்டுப்

பேசி விடத் துடித்தது உள்ளம். துடித்த உள்ளத்துக்கு எள்ளத்தனையும் தைரியம் இல்லை. முன்பின் தெரியாத பெண்ணுடன் அவ்வளவு சுலபமாகப் பேசிவிட முடியுமா என்ன? ஆகவே, நான் ஒரு தீர்மானத்துக்கு வந்தேன். இன்னொரு முறை அந்தப் பெண் என் அறை வெளியே போகும்போது, டாக்டரும் நர்ஸும் அருகில் இல்லாத போது, 'டாக்டர் டாக்டர்' என்று கூக்குரலிடுவது. அது கேட்டு, ஒருவரும் இல்லாதது கண்டு அவள் ஓடி வந்து, 'என்ன வேண்டும்?' என்று கேட்கிறாளா இல்லையா என்று பார்ப்பது எனத் திட்டம் வகுத்தேன். திட்டம் சரிதான். அந்தப் பட்டாம்பூச்சி என் திட்டத்தின் வட்டத்துக்குள் சிக்குவாள் என்பது என்ன உறுதி? முயற்சி உடையார்தான் இகழ்ச்சி அடையார்களாமே!

முதல் நாள் திட்டப்படி காலை எட்டு மணியிலிருந்து அந்தப் பெண்ணின் வருகைக்காகத் தவங்கிடந்தேன். அவள் வருகை தரும் போது டாக்டரும் நர்ஸும் கூப்பிடும் தூரத்தில் இருக்கக் கூடாதே என்று வேண்டிக் கொண்டேன். அவர்கள் இருவரும் இல்லாதபோதெல்லாம் எப்படிக் கத்த வேண்டுமென்று ஒத்திகை பார்த்துக் கொண்டேயிருந்தேன்.

மணி ஒன்பதே காலுக்கு அந்த மாதரசி என் அறைப் பக்கம் வந்தாள். அவ்வளவுதான். 'ஆதிமூலமே!' எனக் கத்திற்றுமே யானையொன்று, அதைவிட உரக்க, "டாக்டர்! டாக்டர்!" என்று கத்தினேன்.

ஆஹா! என் திட்டமே திட்டம்! என் கத்தல் பொத்தலாகி விடவில்லை. அந்தப் பெண் என் அறைக்குள் எட்டிப் பார்த்து விட்டு, "இதோ, கூப்பிடுகிறேன்" என்றாள்.

"வேண்டாம்..." என்றேன். ஏன் அப்படிப் பகர்ந்தேன் என்று எனக்கு அப்பொழுது புரியவில்லை.

"இப்போது கூப்பிட்டீர்களே!" என்று இடது காதைத் தடவிக் கொண்டாள்.

சமய புத்தி பதிலைத் தயாராக வைத்திருந்தது. "தண்ணீர் வேண்டும். தாகமாயிருக்கிறது" என்றேன்.

"இதோ, நான் தருகிறேன்" என் கட்டிலருகே இருந்த வலை அலமாரி மேலிருந்த செம்பிலிருந்து தண்ணீர் எடுத்துக் கொடுத்தாள். வாங்கி வலுக் கட்டாயமாகக் குடித்தேன். அவளை, அவள் அழகையல்லவா, பருகினேன்!

"உங்களுக்கு மிகவும் நன்றி" என்று தம்ளரை அவளிடம் நீட்டினேன்.

அதை வாங்கித் தண்ணீர்ச் செம்பை மூடி விட்டு, "நான் வருகிறேன்" என்று கூறி விட்டு நகர்ந்தாள்.

"நீங்கள் இங்கே தினமும் வருவீர்களோ?"

"ஏன் நாளைக்கும் டாக்டருக்காகக் கத்துவீர்களோ.....?"

"இல்லை. நாலைந்து நாட்களாய்த் தொடர்ந்து வருகிறீர்களே என்பதனால் கேட்டேன்......"

"என் சிநேகிதி ஒருத்திக்கு உடல் நிலை சரியில்லை. அவளும் இந்த நர்ஸிங் ஹோமில்தான் இருக்கிறாள். இங்கிருந்து ஆறாவது அறை. அவளைப் பார்ப்பதற்கே தினமும் போய் வருகிறேன்."

"அடடா! அப்படியா?" என்று அநுதாபப்பட்டவன் போல் பாவனை செய்தேனே ஒழிய, நான் நர்ஸிங் ஹோமிலிருந்து கிளம்பு முன் அவள் சிநேகிதியின் உடல் நிலையில் குணம் எதுவும் காணக் கூடாதே என்று பிரார்த்தித்துக் கொண்டேன்.

"அவளுக்கு என்ன உடம்பு?"

"வயிற்றில் ஏதோ கோளாறு."

"இப்பொழுது எப்படியிருக்கிறது?"

"தேவலை. இன்னும் ஒரு வாரமாவது இங்கு இருக்க வேண்டுமாம்."

அந்த மாதிரி வாசகத்தைத்தானே நான் வேண்டி நின்றேன்!

"ஓஹோ! அதற்கென்ன? உடம்பு குணமடைவதுதானே முக்கியம்? நான் கூட இங்கு இன்னும் ஒரு வாரம் தங்க வேண்டியிருக்கும்."

"அப்படியா? உங்களுக்கு எப்படி அடிபட்டது? ஒரே கட்டுக்களாக இருக்கிறதே, பாதாதி கேச பரியந்தம்!"

"ரயிலிலிருந்து கீழே விழுந்து விட்டேன்."

ரயிலிலிருந்து கீழே விழுந்து, ஓர் ஆத்மா இன்னும் உயிருடன் இருக்கிறதே என்று வியப்புற்றது போல் ஆச்சரியம் மேலிட்டவளாய்ப் பார்த்து விட்டு, "ஆ! அப்படியா? தப்பித்தது யார் அதிர்ஷ்டமோ?" என்றாள்.

"எல்லாம் பெருமான் கிருபை."

"சரி, நான் போய் வருகிறேன்."

"சாயங்காலம் வரமாட்டீர்களா?"

"பிடில் வாத்தியார் வந்து விடுவார்."

"பிடில் சொல்லிக் கொள்கிறீர்களா?"

"ஆமாம்" என்று மொழிந்து விட்டுப் புன்னகை புரிந்து கொண்டே போனாள்.

ஏதோ புத்தகம் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தேன். அறை வாசலில் நிழல் ஆடியது. பார்வையைப் புத்தகத்திலிருந்து திருப்பினேன். அந்தப் பெண்தான் நின்று கொண்டிருந்தாள்.

"அட, சாயங்காலம் வரமாட்டேன் என்றீர்களே!"

"பிடில் வாத்தியார் ஊருக்குப் போயிருக்கிறார்...."

"ஓஹோ!"

"உங்களுக்கு உடம்பு தேவலையா?"

"உடம்புக்கென்ன? மண்டையில்தான் பலமான காயம். அது ஆற நாளாகும் போல் இருக்கிறது. இன்று தையலைப் பிரித்தனர்."

"ஆமாம், ரயிலிலிருந்து நீங்கள் எப்படி விழுந்தீர்கள்?"

"விழவில்லை. ஓடும் ரயிலிலிருந்து கீழே குதித்தேன்."

"என்ன விரக்தியோ?"

"விரக்தி இல்லை. உங்களிடம் சொன்னால் என்ன? மாம்பலத்தில் யாரோ வக்கீல் சந்தானமாம். அவர் பெண்ணைப் 'பெண் பார்க்க'த் தாம்பரத்திலிருந்து வந்தேன். மாம்பலம் ஸ்டேஷனில் நின்றுவிட்டு ரயில் கிளம்பியதும் தான் இறங்குமிடம் வந்ததையே உணர்ந்தேன். உடனே அவசரமாக இறங்க முயன்றேன். முயற்சி இங்கே கொண்டு வந்து சேர்த்திருக்கிறது!"

"பெண் பார்க்க வந்தீர்களா?" என்று கேட்டு விட்டு இலேசாகச் சிரித்தாள் அவள்.





ஓய்வுபெற்ற ஜில்லா காட்டிலாக்கா அதிகாரி ஸ்ரீ எல். ராமச்சந்திரன் அவர்கள் குமாரியும் மாயூரம், கேப்டன் வி. ஏ. சுந்தரம், பி.ஏ., எம்.பி.பி.எஸ். அவர்களின் மைத்துனியுமான டாக்டர் ஆர். ஜெயலக்ஷ்மி, பி.ஏ., எம்.பி.பி.எஸ்.க்கும் திருப்பூர் அட்வகேட் ஸ்ரீ பி. என். அனந்தநாராயண அய்யர் அவர்கள் குமாரன் பென்னுடம் மெடிகல் ஆபீஸர் டாக்டர் பி. ஏ. நாராயணமூர்த்திக்கும் சமீபத்தில் மாயூரத்தில் திருமணம் வெகு விமரிசையாக நடந்தேறியது. ஏராளமான பிரமுகர்கள் விஜயம் செய்து தம்பதிகளை வாழ்த்திச் சென்றனர். பலரிடமிருந்து ஆசிச் செய்திகளும் வந்து குவிந்தன.

பற்கள்
வெண்மைபெற

ஈறுகள்
திடமடைய

சுவாசித்தல்
ஆரோக்யமுற





ரெமி

டூத் பேஸ்ட்

(அஸுலின் கலந்தது)

பவுடராகவும் டின்களில் கிடைக்கும்

பற்களை பாதுகாக்கவும், வெண்மை தரவும் உடனடியாக ரெமி பற்பசையை உபயோகிக்க ஆரம்பியுங்கள். அதனில் கமழும் நறுமணம், உபயோகித்த பின்னும் வாயினில் நீண்ட நேரம் தங்கி ஓர்வித இன்ப உணர்ச்சியை ஊட்டுகின்றது.

RP 931

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் ரெமி தயாரிப்புகள்

இலங்கையில் கிடைக்குமிடம்: AVRA Ltd., Colombo

ரேடியோ ஸிலோன்: 41.72 மீட்டரில் "ரெமி நாடக விருந்து"
வெள்ளிக்கிழமைதோறும் மாலை 6-30 லிருந்து 6-45 வரை

"என் ஆயுளில் பெண் பார்க்கப் போனது இது தான் முதல் தடவை. அதுவும் என் தாய்க்கு மேலான நம்பிக்கையில் மனத் திருப்திக்காகச் சென்றேன். அதன் பலன் இது. ஆனால் அதுவும் ஒருவிதத்தில் நல்லதாய்ப் போயிற்று. உங்களைச் சந்திக்க முடிந்ததே! உங்கள் நட்புக்குப் பாத்திரமாகி விட்டேனே!"

"காயங்கள் குணமடைந்ததும் அந்தப் பெண்ணைப் பார்க்கப் போவீர்களல்லவா?"

"அந்தப் பெண்ணையா? நானா? பார்க்கவா? இனிமேலா? ஊஹூம்.....பெண்ணைப் பார்க்கப் போகு முன்பே ஒரு பெரிய விபத்துக்கு ஆளாக நேரிட்டது. போய்ப் பார்த்து விட்டு வந்தால் என்ன காத்திருக்குமோ?"

"அப்படியென்றால்?"

"அந்தப் பெண்ணை இனிமேல் பார்க்கப் போவதில்லை."

"உங்கள் முடிவு சரியில்லை என எனக்குப் படுகிறது. நீங்கள் ரயிலிலிருந்து குதித்து அடிபட்டுக் கொண்டால் அதற்கு அந்தப் பெண்ணா பிணை? உங்களுக்கு ஒரு கதை தெரியுமா?"

"உங்களுக்குக் கதை சொல்லக் கூடத் தெரியுமா?"


"அவசியத்துக்கு, அவசரத்துக்குத் தெரியும். ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தான். அவன் ஒருநாள் காலையில் எழுந்ததும் தன் அரண்மனைச் சாளரத்தின் வழியே வெளியே பார்த்தான். அப்போது கீழே வீதியில் சிந்தியிருந்த பட்டாணிகளைப் பொறுக்கிக்கொண்டிருந்த ஒரு பிச்சைக்காரச் சிறுவன் அவன் கண்ணில் பட்டான். அந்தச் சிறுவனும் அப்போது அரசனைப் பார்த்தான். அந்தச் சிறுவன் பட்டாணிகளைப் பொறுக்கிக் கொண்டிருந்ததைச் சுவாரசியமாய்ப் பார்த்துக் கொண்டிருந்த அரசன் கையில், திடீரென்று அடித்த காற்று சாளரக் கதவைத் தள்ளிக் காயம் உண்டாக்கி விட்டது. உடனே அரசனுக்குக் கோபம் வந்து விட்டது. சேனாதிபதியைக் கூப்பிட்டு, தான் அந்தப் பிச்சைக்காரன் முகத்தில் விழித்ததனால்தான் தனக்குக் காயமேற்பட்டது எனக்கூறி, பிச்சைக்காரச் சிறுவனை இழுத்து வரச் சொன்னான்.

"'இன்று காலை உன் முகத்தில்தான் முதலில் விழித்தேன். அதன் பலன் என் கையில் காயமேற்பட்டு விட்டது. ஆகையால் உன்னைத் தூக்கிலிடப் போகிறேன்' என்றான் மன்னன்.

"சிறுவன் சொன்னான்: 'ஆறு போவதே போக்கு, அரசன் சொல்வதே வழக்கு. இருப்பினும் நான் ஒன்று கூற விரும்புகிறேன்.'

"'என்ன?' என்று கேட்டான் அரசன்.

"'நீங்கள் என்முகத்தில் விழித்ததற்கு உங்களுக்கு ஓர் அங்கத்தில் சிறு காயமேற்பட்டது. ஆனால் உங்கள் முகத்தில் விழித்த எனக்கோ தலையே போகப் போகிறது. எது தேவலை?' என்று கேட்டான் சிறுவன்.



திருவில்லாமலையைச் சேர்ந்த திரு ராமநாத வாத்தியார் அவர்களின் ஷஷ்டியப்தபூர்த்தி வைபவம் மிக விமரிசையாகச் சென்ற மாதம் 8ந் தேதி நடந்தேறியது.

"சிறுவன் கூற்றைக் கேட்டதும் அரசன் அயர்ந்து போய்த் தான் அவசரப்பட்டு அறிவின்றிச் செய்யவிருந்த தவறுக்கு வருந்தினான். பிறகு சிறுவனிடம் மன்னிப்புக் கோரி அவனுக்குப் பொன்னும் மணியும் வழங்கினான்.

"அது போல் தானிருக்கிறது உங்கள் தீர்மானம். நீங்கள் பெண் பார்க்கக் கிளம்பினதால் உங்களுக்கு அடிபட்டது என்று நினைத்து அந்தப் பெண்ணை இனி பார்க்காதிருக்க முடிவு செய்திருக்கிறீர்கள். ஒரு பாவமும் அறியாத அந்தப் பெண்ணின் வாழ்வே இனி பாழாகிவிடுமே?"

"அடடே! அதற்குள் அந்தப் பெண்ணுக்கு நான்தான் கணவன் என்று நிச்சயம் ஆகி விட்டது போலல்லவா பேசுகிறீர்கள்!"

"யார் கண்டார்கள்? பிராப்தம் அப்படியும் இருக்கலாமே!"

"நீங்கள் ஒரு பெண்! மற்றொரு பெண்ணுக்காகப் பரிந்துபேசுவது, வாதாடுவதுஇயல்பு!"

"நான் நியாயம் பேசுகிறேன்."

"நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?"

"நீங்கள் பார்க்கவிருந்த பெண்ணைக் கட்டாயம் சென்று பார்க்க வேண்டும்."

"பார்த்தாலும் பிடிக்கும் என்பது என்ன நிச்சயம்?"

"அது பார்த்த பிறகல்லவா தெரியும்? இதோ பாருங்கள், உங்களுக்கு விபத்து ஏற்படக் காரணம் நீங்கள் பார்க்கவிருந்த பெண் என்று எண்ணியிருக்கிறீர்கள். அது தவறான எண்ணம். தவிர, ராமர் சீதையைக் கலியாணம் செய்து கொள்ளுமுன் அரக்க அரக்கியரை அழிக்க வேண்டியிருந்தது. வில்லை வளைக்க வேண்டியிருந்தது. அம்மாதிரி நீங்களும் உங்களுக்கு வாய்க்கவிருப்பவளுக்காக ஒரு விபத்தைச் சந்திக்க வேண்டியிருந்தது என்று தான் கொள்ள வேண்டும்" என்றாள் அந்தப் பெண்.

"உங்கள் பெயர் என்ன?"

"கிரிஜா."

"கிரிஜாவா?" என்று சுவாரசியம் குறையக் கேட்டேன்.

"ஏன்? நீங்கள் பார்க்கவிருந்த பெண் நான் தானோ என்று சந்தேகம் வந்து விட்டதோ? நான் பெயரைத் திரித்துச் சொல்லிவிட்டேனோ என்று நினைக்கிறீர்களோ?"

"ஊஹூம்.....அப்படியில்லை" என்று சொன்னேனே ஒழிய ஸ்ரீமான் சந்தானத்தின் பெண்

ஜானகியாய் அவள் இருக்கக்கூடாதா என்று ஏங்கினவன்தான் நான்!

''சரி, நான் விடைபெற்றுக் கொள்கிறேன். ஞாபகமிருக்கட்டும், காயங்கள் குணமானதும் அந்தப் பெண்ணைப் போய்ப் பார்த்துவிட்டு, அவளையே கலியாணம் செய்து கொள்ளுங்கள்'' என்று மொழிந்துவிட்டு என் பதிலுக்காகக் காத்திராமல் வழக்கமாகப் பிரியும்போது வழங்கும் புன்னகையைகூடத் தராமல் போய் விட்டாள்.

நான் பெருமூச்செறிந்தேன். கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமற் போய் விட்டது போல் உணர்ந்தேன். 'ஹூம்...எதற்கும் பிராப்தம் வேண்டாமா?' என்று எனக்கு நானே சமாதானம் செய்து கொண்டேன். பிறகு, மறுநாள் காலை ஜானா வந்ததும் அவள் உள்ளத்தைத் தெரிந்து கொள்வது என நிச்சயித்தேன்.


மறுநாள் காலை ஜானா வருவாள், வருவாள் என்று அவள் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தேன். காலையில் நர்ஸ் கொடுத்த காப்பியைக் கூட வேண்டாமென்று மறுத்து விட்டேன். ஜானாவின் நினைவே உள்ளத்தை நிறைத்திருந்ததால் எதுவும் பிடிக்கவில்லை. ஆனால்...? என்ன ஏமாற்றம்! அன்று ஜானா வரவில்லை. அன்று மட்டுமல்ல; அதற்கடுத்த இருநாட்களும் கூடத்தான்!

அவள் ஏன் வரவில்லை என்று எனக்குப் புரியவில்லை. 'அந்தப் பெண்ணையே போய்ப் பார்த்துவிட்டுக் கலியாணம் செய்து கொள்ளுங்கள்' என்று சொல்லிவிட்டுப் போனாளே! ஒருவேளை நான் இவளிடம் என் மனத்தைப் பறிகொடுத்துவிட்டேன் என்பதைத் தெரிந்து கொண்டு மற்றப் பெண்ணின் வாழ்வில் நான் குறுக்கிடக் கூடாது என்ற மனத்துடன் போய் விட்டாளோ என்று புரியாமல் குழம்பினேன்.


இரு தினங்கள் கழித்து என்னை 'நர்ஸிங் ஹோம்' விருந்து 'விடுதலை' செய்தார்கள். நேராக வீட்டுக்கு விரைந்தேன். வீட்டுக்குள் நுழைந்ததும் நாலைந்து கடிதங்கள் தரையில் சிதறிக் கிடந்தன; என் வருகைக்காகக் காத்திருந்தன. 'பெண்ணைப் பார்த்தாயா? பிடித்திருக்கிறதா? ஏன் கடிதமே எழுதவில்லை? உடனே பதில்போடு. இன்னும் இருதினங்களில் பதில் வராதுபோனால் நானே அங்கு வந்து எல்லாவற்றையும் முடிவு செய்து விடுவேன்.'

என் தமக்கையின் கடிதங்களுக்கு என்ன பதில் எழுதுவதெனத் தெரியாமல் திகைத்தேன். ஜானாவைப் பார்த்த பிறகு ஸ்ரீமான் சந்தானத்தின் பெண்ணைப் போய்ப் பார்க்கவே பிடிக்கவில்லை. அந்த எண்ணமே வேம்பாய்க் கசந்தது. இருந்தாலும் என் அக்காளின் மனத்தை நோகடிக்கப் பயந்தேன். ஆகையால் பெண்ணைப் போய்ப் பார்த்துவிட்டு, 'பிடிக்கவில்லை' என்று தபால் எழுதிப் போடுவதென முடிவுக்கு வந்தேன்.

அன்று மாலை சுமார் நாலு மணிக்கு வக்கீல் சந்தானத்தின் வீட்டுக்குச் சென்றேன். நான் யாரென்று தெரிவித்ததும் வக்கீல்



திருச்சி வாஸன் சில்க் ஸ்டோர்ஸ் அதிபரும் லா. தா. பிக்ஷாண்டார் கோவில் பிரபல மிராசுதாருமான ஸ்ரீ B. A. நடேசய்யர் அவர்கள் குமாரத்தி சௌ. சிவகாமிக்கும் கம்பரசம்பேட்டை ஸ்ரீ R. நடராஜய்யர் (Supervisor, Food Production, Trichi) அவர்கள் குமாரன் சிரஞ்சீவி N. பாலசுப்பிரமணியன் B. Com., (State Bank of India, Virudhunagar) க்கும் பிக்ஷாண்டார் கோவில் மணமகள் இல்லத்தில் 10-4-61 அன்று திருமணம் சிறப்பாக நடந்தது.



லா. தா. பிக்ஷாண்டார் கோவில் மிராசுதார் ஸ்ரீ B. A. சீனிவாச அய்யர் குமாரத்தி சௌபாக்கியவதி ஆனந்தவல்லிக்கும், நெய்வேலி செக்ஷன் ஆபீஸர் ஸ்ரீ N. ராம மூர்த்திக்கும் (L. C. E). மணமகள் இல்லத்தில் 10-4-61 அன்று திருமணம் சிறப்பாக நடந்தேறியது.

திகைத்துப் போனார். இருந்தாலும் சமாளித்துக் கொண்டு என்னை வரவேற்றார்.

பெண் வந்தாள், என்னை நமஸ்கரிப்பதற்கு. அவளைப் பார்த்தேன். பார்த்ததும் திடுக்கிட்டுப் போனேன். என்ன? ஜெனாவா? கண்களைக் கசக்கிக் கொண்டு மறுபடியும் பார்த்தேன். ஆமாம், அவளேதான். 'நர்ஸிங் ஹோமி'ல் என் நட்புக்கு ஆளான பெண் திலகம்தான்!

நான் திகைப்பூண்டை மிதித்தவன்போல் தடுமாறுகையில், ''பிடிலில் ஒரு கீர்த்தனம் வாசிக்கச் சொல்லட்டுமா?'' என்று வினவினார் வக்கீல்.

''வேண்டாம். நான் உங்கள் பெண்ணுடன் ஒரு நிமிஷம் தனியே பேசலாமா? அனுமதிப்பீர்களா?'' என்று கேட்டேன்.

ஸ்ரீமான் சந்தானத்துக்குப் புரியவில்லை என் பேச்சு. 'இந்தக் காலத்துப் பசங்களுக்கு நாகரிகம் நிறைய தைரியத்தைத் தந்திருக்கிறது' என்று நினைத்ததுபோல் ஒரு நிமிஷம் தயங்கிவிட்டு, ''ஓ, எஸ்! அதற்கென்ன?'' என்று சொல்லிவிட்டு வெளி வராந்தாவுக்குப் போனார். அவரை அடுத்து அங்கு கூடியிருந்த மற்ற இருவரும் போனார்கள்.

அவர்கள் போனதும் தனியே இருந்த ஜெனாவை நோக்கி, ''உங்களுக்குப் பொய் நிறைய பேசத் தெரியும் போலிருக்கிறதே! வக்கீல் தம் பெண்ணையும் தம் வழியிலேயே வளர்த்திருக்கிறார் - போலும்!'' என்றேன்.

''நான் என்ன பொய் சொன்னேன்?''

''நர்ஸிங் ஹோமில் என்னிடம் உங்கள் பெயர் ஜெனா என்று ஏன் பொய் சொன்னீர்கள்? அன்றே 'நீர் பார்க்கப்போகும் வக்கீல் சந்தானத்தின் பெண் ஞானம் நான்தான்' என்று ஏன் சொல்லவில்லை?''

''சொல்லியிருந்தால் நீங்கள் 'பார்க்கப் போவதில்லை' என்று தீர்மானித்த பெண்ணின் கதி என்னாவது? உண்மையில் நீங்கள் என் பேச்சைக் கேட்டு மனம் மாறி, முதலில் பார்க்கக் கிளம்பின பெண்ணைப் பார்க்கப் போகிறீர்களா இல்லையா என்பதை அறியத்தான் பொய் சொன்னேன். ஆனால் 'பெயரைத் தலைகீழாகச் சொல்லிவிட்டேனே என்று சந்தேகிக்கிறீர்களா?' என்று 'எங்கள் அப்பன் குதிருக்குள் இல்லை' என்றும் திறுகில் பூடகமாய்க் கேட்டேனே, அதில் நீங்கள் என்னை யாரென்று தெரிந்து கொண்டு விடுவீர்கள் என நினைத்தேன்.''

''ஓஹோ, அப்படியா! இப்போதுதான் புரிகிறது. ஜெனாவைத் தலைகீழாகப் படித்தால் ஞானம்!''

''இப்போது புரிகிறதா? ஞானமும் ஜெனாவும் ஒன்றுதான்!''

''புரிகிறது'' என்று அவள் புத்தியை வியந்து கொண்டே அவளைச் செல்லமாகத் தொட விழைந்தேன்.

''அப்பாவிடம், பேசுவதற்குத்தான் அனுமதி வாங்கி யிருக்கிறீர்கள்! ஞாபகமிருக்கட்டும், அப்பா ஒரு வக்கீல்!'' என்று சொல்லிச் சிரித்துக் கொண்டே மாறாய் மறைந்து விட்டாள் என் ஞானம்.


சிக்கனமாகவே
அவள் குடித்தனம்
நடத்தினாள்...
செலவினங்களைக் கட்டுப்படுத்தி, கணவனுக்கு
அனுசரணையாக இருந்தாள் அவள். ஆயினும்
ஒரு விஷயத்தில் சற்று கவனக்குறைவாக இருந்து
விட்டாள். தான் வாங்கிய பருத்தித் துணியில்
'ஸான்போரைஸ்ட்' முத்திரை இருக்கிறதா என்பதைக்
கவனிக்கவில்லை. முடிவு! ஒரேயொரு
சலவைக்குப்பிறகு அவளுடைய புதுச்
சேலை சுருங்கிப் போய்விட்டது.
யார் கூறுவதையும் நம்பிவிடாதீர்கள்.
நீங்கள் வாங்கும் பொருள்கள் முழுப்பயனளிக்குமா
என்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள்—
லேபில் மேல்
·SANFORIZED·
என்ற முத்திரையுள்ளதா என்று பாருங்கள். உங்கள்
உடைகள் உடம்புக்குப் பொருந்தாதபடி சுருங்காது.
'ஸான்போரைஸ்ட்' என்ற பதிவு செய்யப்பட்ட டிரேட் மார்க்கின் சொந்தக்காரர்களான க்ளுயட், பீபாடி அண்ட் கோ, இன்கார்ப்பொரேடட் (வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ். ஏவில் இணைக்கப் பெற்றது) அவர்களால் இந்த விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது. இந்தக் கம்பெனியின் 'சுருங்காது' என்பதற்கான கடும் நிபந்தனைகளுக்கு உட்பட்டுத் தயாரிக்கப்படும் துணிகளில் மட்டுமே 'ஸான்போரைஸ்ட்' டிரேட் மார்க் உபயோகிக்க அனுமதிக்கப் படுகிறது.
விவரங்களுக்கு: 'ஸான்போரைஸ்ட்' சர்வீஸ்,
95, மெரீன் டிரைவ், பம்பாய்-2

நிம்மதி

சருமீன்

"எவரெக்கொள்ளிலே எந்தக் கொள்ளியா இருந்தா என்ன? புச்சா சார்ஜ்மேன் வந்திட்டாலும், கவுனரு வந்திட்டாப்பலேதான் நீ ஓடம்பே அலட்டிக்கறே!" கையிலிருந்த ஸ்பானரைக் கீழே எறிந்துவிட்டு மட்டியிடம் 'லவ்'வென்று விழுந்தான் வீரண்ணன்.

அந்தப் பகுதிக்குப் புதிய சார்ஜ்மேன் வந்திருப்பதாக அறிவித்த மட்டிக்குக் கிடைத்த பதில்தான் இது.

"என்னண்ணே சலிச்சுக்கறே? இவரு இளவட்டமாமுல்லே. கொஞ்சம் நல்லபடியாயிருக்க மாட்டாருங்களா?" என்றான் மட்டி. புதுப்பொம்மை கிடைத்த பாப்பாவுக்குக்கூட மட்டியின் மன மலர்ச்சி யிருக்குமோ என்னவோ, அவனுக்கு மட்டும் பரம திருப்தி புதிய அதிகாரி வந்திருப்பதில்.

"ஆமண்ணே, இளவட்டம்தான். உனக்குத்தான் ஒரு கழி போடப் போறாரு பாத்துக்கினே இரு" என்றான் வீரண்ணன்.

அதோ, போர்மனும் இன்னுமொருவரும் வருவது தெரிந்தது. தொப்பியும் தொந்தியுமாகக் கண்ணாடி போட்டுக்கொண்டு இருக்கும் 'போர்மன்'கூட வருபவர்தான் அந்த 'இளவட்டம்' போலிருக்கிறது. செக்கச் செவேலென்று, நீலக்கால் சட்டையும் கனத்த பூட்சுகளும் காக்கிச் சட்டையும் அணிந்திருந்த அவரது கையில் தொப்பியிருந்தது. சுருள் சுருளாக வாரி விடப்பட்ட அழகான கேசங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாகப் புரட்சி செய்து அழகுக்கு அழகு செய்து கொண்டிருந்தன. அவரது விழிகள் 'குறு குறு' வென்று நாலு பக்கமும் நோட்டம் விட்டுக் கொண்டிருந்தன.

வீரண்ணனும் மட்டியும் தங்கள் வேலையில் ஈடுபட்டிருந்தனர்.

"இதுதான் பெயிண்ட் ஷாப்...கட்டப்பட்ட ஷெல்கள் தொழிற்சாலையிலிருந்து, 'க்ரிட் பினாஸ்டிங்' அடிக்கப்பட்டு இங்கு வரும். இங்கு வர்ணம் பூசுகிறார்கள் கோச்சுகளுக்கு. இரண்டாம்முறை வர்ணம் கொடுக்குமிடம் இது. இந்த இடம்தான் நீங்கள் மேற்பார்வை செய்ய வேண்டிய இடம்" என்று வேலையின் இடத்தை அறிமுகம் செய்து வைத்தார் போர்மன்.

"மகிழ்ச்சி, சார்!" மெல்லிய புன்முறுவலுடன் பதிலளித்தார் 'இளவட்டம்.'

"அதோ பார்த்தீர்களா? இருவரும் இந்த ஷாப்பில் ரொம்ப நாட்களாக இருக்கிறார்கள். மட்டி—அவன் வெறும் அப்பாவி. அடிச்சாக்கூட அழத் தெரியாது. இன்னொருத்தன் இருக்கானே வீரண்ணன், அவன்கிட்டே நீங்க உஷாரா யிருக்கணும். யூனியன் காரியதரிசி அவன்" என்று மேலும் தொடர்ந்து கூறினார், தணிந்த குரலில்.

இருவரும் மட்டியின் அருகில் சென்று அவனது வேலையை நோட்டம் விட்டனர். "டேய், இவருதாண்டா, உன் புதுச் சார்ஜ்மேன்—சங்கரன்" என்றார் போர்மன். 'அப்படிக்களா, சாமி தண்டமுங்க." புதியவனின் பாதங்களில் விழுந்து எழுந்தான் மட்டி. இவைகளெல்லாம் பார்த்தும் பாராதவன் போல் இருந்தான் வீரண்ணன். இந்தக் கூழைக் கும்பிடென்றால் அவனுக்கு எரிச்சல்.

வஞ்சனையில்லாமல் வளர்ந்து விட்டிருந்த மட்டி, அந்தக் கம்பெனியில்தான் சிறு வயதிலிருந்தே வேலை பார்க்கிறான். கூட்ஸ்வாகன்களையும், பிரயாணிகளையும் ரயில்வேக்களுக்காகத் தயாரித்துத் தரும் அந்த வெள்ளைக்காரன் கம்பெனியில் வாகன் வாகனாகத் தன் உழைப்பைத் தருவதற்காகவே பிறந்தவன் அவன். வாட்ட சாட்டமாக, சப்போட்டாப் பழம் தின்று தின்று உருண்டை கட்டிவிட்டது போல், கை காலுடன், கரு கரு மீசையுடன் இருக்கும் அவனைப் பார்ப்பதற்குப் பயமாகத்தான் இருக்கும். போதாக்குறைக்கு இடது முண்டாவில் ஒரு வெட்டுத் தாயத்து வேறு. பயில்வானாக இருக்க வேண்டியவன் பெயிண்ட் ஷாப்பில் 'பிரஷ் தூக்கி'யாக இருக்கிறான் என்றால் நம்புவது கஷ்டம்தான். உடலில் வலு இருந்தும் ஒரு குறை அவனிடம். மண்டையில் வலு இல்லை—அவ்வளவுதான். அவன் ஒரு சித்தாளைக் குட்டிதான். அவனுக்கு மட்டும் ஒரே ஒரு ஆசை. 'பிரஷ் தூக்கி' பட்டம் அலுத்துவிட்டது. மேஸ்திரியாக ஒரு நாளாவது உத்தியோகம் பார்த்துவிட்டு ரிடையர் ஆகிவிட வேண்டும். 'உடனொத்த இசக்கிமுத்து இவனுக்குப் பிறகு ஆறு வருஷங்கள் தள்ளி வந்தவன். இன்னிக்கு மேஸ்திரியாகச் சக்கைப்போடு போடறான். ம்...ம்...எல்லாம் அந்தக் காளியாத்தா மனசிருந்தா நடக்கும். எரிநாக்கு (பார்ன்டோனுக்கு வீரண்ணன் சூட்டிய பெயர்) சார்ஜ்மேனுயிருந்து நாமத்தைச் சாத்திவிட்டுப் பூட்டான். இப்பவாவது புதிசா வந்திருக்கிறவரு – அவுரு நல்லாயிருக்கணும்...' இதப்பாசையில் ஏதேதோ எண்ணியது அவன் மனம்.

புது சார்ஜ்மேனைப் பற்றி ஒன்றும் சரியாகத் தெரியவில்லை. நல்லவன் என்றான் மட்டி. ஏமாற்றுக்காரன் என்றான் வீரண்ணன். பொதுவாகக் கெட்டிக்காரன், சூரப்புலி என்பது எல்லோரும் ஒப்புக்கொண்ட அபிப்பிராயம். ஆனால் சங்கரனின் மனம் மட்டும், தான் முன்னுக்கு வரவேண்டிய குறுக்கு வழிகளை யோசித்துக் கொண்டிருந்தது.

இச்சமயம்தான் மட்டி அவனைப் பேட்டி காணச் சென்றான்.

"என்னடாலே!"

"கவனிச்சுக்குங்க, ஐயா! உங்க தயவுதான் வேணும். பத்து வருசமா வர்ணம் அடிக்கிறேன். எனக்குக் கீழே இருந்தவனுவ மேஸ்திரியா விட்டாங்க. எனக்குத்தான் சான்ஸே கிடைக்க மாட்டேங்குது."

''ஏ மட்டி, வேலே நேரத்துலே என்னடா கூத்து? உனக்குக் காயிதம் கொடுத்து நாளாச்சல்லே.''

காயிதம் என்றதும் திரும்பி விட்டான் மட்டி. மேஸ்திரி வேலேயும் வேண்டாம். காயிதம் என்றால் அவன் அகராதியில் பிளாக் மார்க். சம்பளத்தில் வெட்டு. திரும்பிச் செல்லும் மட்டியைப் பார்த்தபடியே சிந்தனே யில் ஆழ்ந்தான் சங்கரன்.

போர்மன் சொன்னது நினைவுக்கு வந்தது. 'மட்டி மாதிரி உண்மையா உழைக்கிறவன் கிடையாது. இவனேப் பிரமோஷன் பண்ணிட்டா, அவன் இடத்தைப் பூர்த்தி பண்றது கஷ்டம். அதனுல் நமக்கும் கஷ்டம்தானே?' சங்கரனின் மனம் இப்படி எண்ணியது.

★

அப்பளத்துமாவின் வேகம் கலந்த நெடியுடன் 'கட்ரா'வில் இருந்த பெயிண்டில் 'புருசை' நன்முக முக்கி எடுத்துப் பக்கத்துச் சுவர்களுக்குப் பட்டையடிப்பதில் மூழ்ந்தான் மட்டி. இண்டு இடுக்குகளில் கவனத்துடன் பூச வேண்டும். வர்ணம் ஒரே சீராக இருக்க வேண்டும். வரிவரியாக இருக்கக் கூடாது. அந்த நெடியினூடே, மேலும், கீழும், பக்கவாட்டிலும் கைகளே அகல இழுத்து, அடிப்பதற்குள் மூச்சு வாங்கியது. ஆருக ஓடிக்கொண்டிருந்த வியர்வையின் ஓரிரு முத்துக்கள் கட்ராவில் இருந்த வர்ணத்தில் விழுந்து அத்துடன் கலக்காமல் தனியாக நின்றன. வேலேயைச் சுளுவாக்குவதற்கு 'வொயிட் ஸ்பிரிட்'டை வர்ணத்துடன் கலக்கும் வழக்கம் அவனுக்குக் கிடையாது.

'' ஏ மட்டீ, எம்மாத்தூரம் இருக்கு, உன் மேஸ்திரி வேலே யெல்லாம் ?'' என்றபடியே மருது வந்தான் அங்கே.

'' வீரண்ணே! சமாசாரம் தெரியுமில்ல ? நம்ம பாக்டரிலே, ' இன்செண்டிவ் ' கொண்டு வரானுமல்ல! புது சார்ஜ்மேன் புதுத் திட்டம் போல் இருக்குது '' என்றான் அவன்.

'' இன்செண்டிவா, அப்படீன்னு ?''

'' ஆமாண்டா, இனிமே நீ இரண்டு ஆள் வேலே செய்யணும் ஒரே நாளிலே. அதுக்காவ கூடக் கொஞ்சம் துட்டு போனசாகத் தருவானுவ.'' மேலும் விளக்கினான் மருது.

'' தேவலாமேடா மருது '' என்று இழுத்தான் வீரண்ணன்.

'' நல்லாச்சொன்னியே. கூடன்னுஎம்புட்டுத் தெரியுமா ? முப்பது நயா பைசா தருகிருனுவளாம், ஒராள் வேலே கூடச் செய்யறதுக்கு.''

வீரண்ணனுக்கு ஆத்திரம் பொங்கியது. ''இரண்டு ரூபாய்க் கூலிக்காரன் இரண்டே கால் ரூபாயிலே இரண்டு ஆள் வேலேயைச் செய்யணுமாமே !''

'' டேய், எவனுவது வர்ண டப்பாவைத் தொட்டிங்களோ, ' இன்செண்டிவ் 'னுட்டு, தொலேச்சிப்பிடுவேன் தொலேச்சு. ஏ மட்டீ, உனக்கும் தாண்டா இது'' என்றான் வீரண்ணன் கோபத்தோடு.

சங்கரனுக்கு முதல் தோல்வி. அதுவும் வீரண்ணன் காரணமாக.

அவனது இன்செண்டிவ் திட்டம் பேப்பரளவில் இருந்தது. மாமூல் வேலேயைத் தவிர ஒரு துரும்பைக்கூட அசைக்கவில்லே தொழிலாளர்கள்.

'' எந்த மட்டும் சார் இருக்கு உங்க புதுத் திட்டமெல்லாம் '' என்று போர்மன் சங்கரனேக் கேட்டபோது அவனுக்குப் பேச நாவெழவில்லே.

ஆனல் அடுத்த நாளே மட்டி பிரஷைத் தூக்கியபோது வீரண்ணன் அசந்துவிட்டான். மட்டி 'இன்செட்டிவ்' வேலே செய்யப் போகிருனும். வீரண்ணன் எவ்வளவோ தடுத்துப் பார்த்தான். மட்டியின் மரமண்டையிலே ஏறினுல்தானே? ''டேய் கொலே விழும்டா'' என்ருன் அவன்.

'' வந்து பாருங்கடா எவனுச்சும் எங்கிட்டே '' என்று முண்டாவைக் காட்டி முறைத்த மட்டியை என்ன செய்யமுடியும் ?

மட்டி செய்வான். இரண்டாள் என்ன, மூனுள் வேலேகூட ஒரு நாளில் மடமட என்று செய்வான். போனசு வேணுமென்பதும் அவசியமில்லே. நாய்க்கும் எலும்புத் துண்டு போடுவது போல, 'ஆறுமாசம் இன்செண்டிவ் வேலே செய்தால் மேஸ்திரி வேலே' என்று சங்கரன் ஆசைகாட்டி விடவே மட்டி அதில் மயங்கிவிட்டான்.

'' வேணுமுடா, தொழிலாளிகளேப் பகைச்சுக்காதடா'' என்று சொல்லிப் பார்த்தான் மருது. மசியவில்லே மட்டி. ஏன் மசியவேணும், மேஸ்திரி வேலே அவனுக்குக் காத்திருக்கும்போது?

அதிக வேலே செய்யாதவர்களுக்கு எச்சரிக்கை வந்தது. மட்டிக்கும் உபத்திரவம் வந்தது. அவன் வேலே செய்யும்போது, 'போல்ட்' ஒன்று அவன்மேல் வந்துவிழுந்தது. ரத்தம் ஒழுகும் கையை மருந்து போட்டுக் கட்டிவிட்டு ஒரு கையால் தொடர்ந்து வேலேயைச் செய்தான் அவன். இதுபோல் எத்தனேயோ, கம்பி, கல் எல்லாம் போல்டின் வழியைப் பற்றின.

' என்னடாயிது. மேஸ்திரீன்னு சும்மாவா ? கொஞ்சம் கூடத்தான் உழைக்கணும். ஏதோ உடம்பிலே தெம்பு இருக்கிறவரைக்கும் உழைச்சுட்டுப்



போவோம். அடிக்கும் உதைக்கும் பயந்தால் கட்டுமா?' என்று மட்டி வேலை செய்தான்.

மேஸ்திரி வேலை வந்து விட்டதாகவே அவனுக்கு நினைப்பு..சங்கரனும் '' ஏ மேஸ்திரி! '' என்று கேலியாக அழைக்கும்போது, சொர்க்கத்துக்கே போவது போலிருக்கும் அவனுக்கு.

மாதங்கள் உருண்டோடி விட்டன. சங்கரன் தன் பாட்டைக் கவனித்துக் கொண்டானே ஒழிய மட்டியை லட்சியம் செய்வதேயில்லை. மட்டிக்குக்கூடச் சங்கரனது வார்த்தையில் நம்பிக்கை குறைய ஆரம்பித்தது. ஏழு எட்டு மாதங்கள் ஆகியும் மேஸ்திரி வேலை கிடைக்காமற் போகவே, 'மதில்மேல் பூனை' விவகாரம் பிடிக்காமல் மட்டி சங்கரனின் அறைக்குள் சென்றான்.

'' எங்கேடா வந்தே ?''

'' ஆறு மாசத்துக்கப்புறம் பிரமோசன் தர்றதாச் சொன்னீங்களே, ஐயா!''

'' ஏதோ கொடுத்து வைத்ததைக் கேட்பது போலல்லவா கேட்கிறே? போடா போ '' என்று கூறிவிட்டுத் தன் வேலையில் மூழ்ந்து விட்டான் அவன். இடிந்து போய் விட்டான் மட்டி. வீரண்ணனுக்குச் சேதிவெட்டியதும் டைரக்டருக்கு அப்பீல் எழுதச் சொன்னான். மட்டி கருங்காலி ஆனதை அவன் மனத்தில் வைத்துக் கொள்ளவில்லை. சகதொழிலாளிக்கு உதவுவதையே குறிக்கோளாகக் கொண்டவன் வீரண்ணன். இதையெல்லாம் பொருட்படுத்துவானா? சங்கரன் காதுக்கு எட்டிய சமாசாரம் தெரியாது மட்டிக்கு.

அன்று...

'கட்ரா' எனப்படும் வர்ண டப்பாவைக் கொண்டு வந்து தன்னிடம் வைத்துக் கொண்டது முதல் மடமடவென்று இழுத்துத் தள்ளிக் கொண்டிருந்தான் மட்டி. பக்கத்துச் சுவர், வழி, கதவு, கூரை என்று வர்ணத்தை இழுத்து அடித்துக்கொண்டே வந்தான். ஆயிற்று. இரண்டு மூன்று வாகனங்கள்கூட வெளியே அனுப்பியாகிவிட்டது. நான்காவது வாகனே வர்ணமடிக்கும்போது சங்கரன் அங்கு வந்து சேர்ந்தான் விஸ்காமீட்டருடன். அவன் வந்ததைக் கவனிக்கவில்லை மட்டி.

''எத்தனை நாளா இந்த வழக்கம்?'' என்று சங்கரன் உறுமியபோது பதறினான் மட்டி. வர்ணத்தின் தரத்தை அளக்கும் விஸ்காமீட்டரின் முன் இருபத்தைந்து 'விஸ்காசிடி' காட்டிக் கொண்டிருந்தது. நாற்பது இருந்தாலல்லவா வர்ணம் தரமுள்ளதாகும்?

''சாமி! என் குடியைக் கெடுத்துட்டானுவளே பாவிக. பெயின்ட் கலக்கும்போது நல்லா இருந்திச்சுங்களே!'' அழவே ஆரம்பித்து விட்டான் மட்டி.

''என்னடா, மாய்மாலம்? எவண்டா உன் வர்ணத்தில் வொயிட் ஸ்பிரிட்டைக் கலப்பவன்?'' சங்கரன் போய்விட்டான்.

மாலை வீட்டுக்குச் செல்லும்போது,''இதைப் பிடி லே...'' என்ற குரல் கேட்டது. போர்மனின் பியூன்தான். அவன் கொடுத்தது, ''காகிதம்''. எது வேண்டாமென்று இருந்தானோ, அது அவனைத் தேடி வந்துவிட்டது. சம்பளத்திலும் இருபது ரூபாய் வெட்டு.


மேஸ்திரி வேலை கேட்டதற்காக இந்தத் தண்டனே! இந்தப் புண்ணியம் கட்டிக் கொண்டவன் சங்கரன்.

மறுநாள் வேலைக்கு வந்தபோதே மட்டிக்கு அயர்வு அதிகமிருந்தது. தான் பட்ட கஷ்டம் விழலுக்கு இறைத்த நீராக மாறியவயிற்றெரிச்சல் அவன் நெஞ்சைப் பிழிவதாக இருந்தது. வேண்டா வெறுப்பாக 'புருசை'ச் சாயத்தில் தோய்த்து எடுத்தான். மேலே தூக்கும்போது வர்ணத்தில் ஒரு சொட்டு அவன் நாசித் துவாரத்தில் புகுந்துவிட்டது. 'லொக்' கென்று இருமினான். வீரண்ணன் அச்சமயம் அந்தப் பக்கம் வந்தான்.

'' என்ன அண்ணே ! இருமறே!''

எரிச்சல் வந்தது மட்டிக்கு. '' அட, போவேய்! உன் வேலையைப் பார்த்துக்கிறு!'' என்றான்.

மட்டி ஏன் இப்படிப் பேசுகிறான்? என்றும் இப்படி இருக்க மாட்டானே அவன். வீரண்ணனுக்குத் திகைப்பாக இருந்தது. ''நான் பொறவு வரேன், அண்ணாச்சி!'' அவன் போய் விட்டான். அவனுக்குத் தெரியுமா முதல்நாள் நடந்த நாடகம்? மட்டியால் அரை மணி நேரம்தான் வேலை செய்ய முடிந்தது. அவன் தலையில் ஏதோ பெரிய பாறாங்கல்லை வைத்து அழுக்குவது போலிருந்தது. 'வாக'னின் அடித்தட்டில் வர்ணம் பூசும்போது சக்கரத்தினருகில் மயங்கி விழுந்து விட்டான் அவன். பக்கத்தில் வேலை



செய்து கொண்டிருந்தவர்கள் அவனை ஓரிடத்தில் படுக்க வைத்து முதலுதவி கொடுத்தனர். இதற்குள் ஒருவன் சங்கரனிடம் ஓடிச் சென்று விஷயத்தைச் சொன்னான். அவன் அலட்சியமாக, "எங்கிட்டே ஏண்டா வர்றீங்க! லீவு வேணும்னு போட்டுட்டுப் போகச் சொல்லு. ஒருநாள் சம்பளத்தை 'கட்' செய்துக்கிறேன்" என்று சொல்லி விட்டான். அவன் கண்கள் ஆடிட்டர்களின் ரிபோர்ட்டைப் படிப்பதில் ஈடுபட்டிருந்தன.

மட்டி, சுயநினைவில்லாமல் இரண்டு நாட்கள் கிடந்தான். அவனை வந்து பார்த்த டாக்டர் அவனது நோயின் பயங்கரத்தை எடுத்துக் கூறினார். அதோடு மருந்து வாங்கப் பெரிய லிஸ்டு ஒன்றையும் எழுதிக் கொடுத்தார்.

மருந்து வாங்கப் பணத்துக்கு எங்கே செல்வது? வீரண்ணன் பிரமித்தான். மட்டியின் பிடிப்புப் பணம் அவனே வந்தால்தான் கிடைக்கும் என்று போர்மன் கூறிவிட்டார். வீரண்ணனின் கலக்கத்தைக் கண்ட சக தொழிலாளிகள் அவனுக்குத் தைரியம் ஊட்டினர்.

"நாங்க இருக்கும்போது நீ ஏனண்ணே கவலைப் படறே? எல்லாரும் கலெக்சன் செஞ்சு தர்றோம். போர்மன் பணம் கருமாதிக்குத் தான் வரும்" என்று சொன்னதைச் சங்கரனைப் போலல்லாமல் செய்கையில் செய்தும் காட்டிவிட்டனர் தொழிலாளர்கள்.

மாலைக்குள் இருநூறு ரூபாய் சேர்ந்து விட்டது. மட்டியின் நிலைமை மணிக்கு மணி மோசமாகிக் கொண்டே வந்தது. சோகமே உருவெடுத்த வீரண்ணன், அவன் அருகில் அமர்ந்திருந்தான். அவன் நாடியைப் பார்த்த டாக்டர் இன்னும் நாற்பத்தெட்டு மணிக்கு மேல் உயிர் தாங்காது என்று கூறிவிட்டார்.

மருது சொன்னான்: "ஆடிட்டர்களின் ரிபோர்ட்டை டைரக்டர்கள் கூட்டத்தில் ஏற்றுக் கொண்டு விட்டார்களாம். பெயிண்ட் ஷாப்பில் மட்டும் ஏகப்பட்ட லாபமாம். அதில் 'இன் சென்டிவ்' திட்டத்தின் பங்கு அறுபதினாயிரம் ரூபாயாம். சங்கரனின் திறமை தான் காரணமாம். எனவே அவனுக்குப் பதவி உயர்வு கிடைத்துவிட்டது. சங்கரன், இனிமேல் பெயிண்ட் ஷாப்பின் போர்மன்."

அன்று மாலையே போர்மனின் பியூன் மற்றுமொரு விஷயத்தை வீரண்ணனிடம் சொல்லி விட்டுப் போனான். மறுநாள் தொழிற்சாலைக்கு விடுமுறை. போர்மன் சங்கரனுக்கு 'குண்வண்ட்' ஹோட்டலில் பாராட்டு விழா. மானேஜிங் டைரக்டரின் அழைப்பிதழ் யூனியன் காரியதரிசிக்கும் வந்திருந்தது.

அழைப்பிதழைப் பார்த்த வீரண்ணன் வறட்சிப் புன்முறுவலொன்றை உதிர்த்துவிட்டான். உழைப்பாளியொருவன் தன் அதிக உழைப்பின் விளைவால் உயிருக்கு மன்றாடுகிறான். அவன் உதிரத்தின் பயனை அனுபவித்த மேற்பார்வையாளனுக்குப் பதவி உயர்வு. பாராட்டு விழா. என்ன உலகம்?

நேரம் செல்லச் செல்ல...மட்டியின் நாடி தளர்ந்தது. ஜன்னி கண்டது. பிதற்ற ஆரம்பித்து விட்டான்.

"டேய் வீரா, எனக்கு மேஸ்திரி வேலை கிடைச்சுருச்சிடா! என் கஷ்டத்துக்குப் பலன் கிடைச்சிருச்சிடா! இனிமேல் நான் 'புருக தூக்கி'யில்லே. டேய் யாருடா அங்கே மடையனுவ. வேலையைக் கவனிக்காமெ வெட்டிக் கதை பேச" என்று உரக்கச் சத்தம் போட்டான் மட்டி.

அடுத்து ஓர் இருமல். பயங்கரமான இருமல். கோழையைக் காரித் துப்பினான். அத்துடன் வந்தது அவன் நெஞ்சின் உதிரம். மறு நிமிஷம் மயக்கம் போட்டுவிட்டான். இதற்குள் ஒருவர் பின் ஒருவராகத் தொழிலாளிகள் அங்கு வந்துவிட்டனர். மட்டியின் நிலைமையைச் சுட்டிக்காட்டி அவர்களை அமைதியாக இருக்கச் சொன்னான் வீரண்ணன்.

டாக்டரும் வந்து விட்டார். அவனைப் பார்த்து விட்டு வேறொன்றும் சொல்லாது வெளியே போய்விட்டார். மட்டி மெள்ளக் கண் விழித்தான்.

"வீரா!" என்று அழைத்தான்.

வீரண்ணன் அருகில் வந்தான். "எமன் வந்து விட்டான் வீரா!" என்றான் மட்டி. அவன் முகத்தில் ஒரு கலக்கம். குறை நிறைவேறாத கலக்கம். என்ன தோன்றியதோ என்னவோ? வீரண்ணன் தன் கிழிந்த காக்கிச் சட்டையின் உட்பையில் கைவிட்டு அந்த மடித்த அழைப்பிதழை வெளியே எடுத்தான்.

"மட்டியண்ணே! உனக்குப் பிரமோசன் கிடைச்சிடுச்சி. நீ மேஸ்திரியாயிட்டே. உடம்பெல்லாம் குணமானதும் நீ வந்திரு. இதைப் பாரு ஆடரு. போர்மன் ஆளு இஸ்பெசலா கொண்டு வந்தான்" என்றான்.

"நிசமாவா?" என்றான் மட்டி.

இருந்தாலும் அவநம்பிக்கை அவன் கண்களில் நிழலாடியது.

வீரண்ணனை அவனுக்குத் தெரியும். பிறருக்காகப் பாடுபடுபவன் அவன். தனக்கு ஆறுதலாகத்தான் இப்படிச் சொல்கிறான் என்று எண்ணிக் கண்களை மூடிக் கொண்டான்.

நிம்மதியான பெருமூச்சு ஒன்று வந்தது. ஆனால் மூடிய கண்கள் பிறகு திறக்கவேயில்லை!

கூத்தனூர் சரஸ்வதியம்மன் லட்சார்ச்சனை


'ஞானவித்தகம் தரித்த செங்கை விமலை'யும் அமலையுமான கலைவாணிக்குத் தனிக் கோயில் இருப்பதே கூத்தனூரில்தான். கூத்தனூர் சரஸ்வதிக்குத் தமிழிடத்தில் பெரு நேயம். ஒட்டக்கூத்தருக்குக் கவித்துவம் நல்கி, தான் வதியும் பதிக்கே அவர் பெயரைப் பெற்ற தேவி அவள். சென்ற 19-4-61 லிருந்து அக்கலைத் தெய்வத்துக்கு லட்சார்ச்சனை நடைபெற்று வருகிறது. பொருளுதவி செய்ய விரும்பும் பக்தர்கள் **லட்சார்ச்சனைக் கமிட்டி, கூத்தனூர். பூந்தோட்டம் வழி, தஞ்சை ஜில்லா** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

'டெட்டால்'



வெட்டுக்காயம்

பரவாமல் காக்க உதவும்.



வெட்டுக்காயமோ, சிராய்ப்போ ஏற்பட்டால் உடனே டெட்டாலைத் தடவுங்கள். காற்று, தண்ணீர், நீங்கள் கையாளும் சாமான்கள் இவைகளில், வியாதியை பரவச் செய்யக்கூடிய, கண்ணுக்குத் தெரியாத, விஷக் கிருமிகள் மறைந்து வாழ்கின்றன. அவை, திறந்து வைக்கப்படும் காயத்தில் சுலபமாக நுழைந்து விடுகின்றன. அசட்டை செய்யாதீர்கள்—உலகத்திலேயே, மிகவும் நம்பிக்கை வாய்ந்த கிருமி நாசினி 'டெட்டால்,' காயம் பரவுதலிலிருந்து உங்களைப் பாதுகாக்க உதவுகிறது. 'டெட்டால்' விஷக், கிருமிகளை கொல்லக்கூடியது. இருந்தாலும் மெக்கு தீங்கு விளைவிக்கக் கூடியதல்ல.

JWT AEL 3499

அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட் (இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது)



திருமூலர் தவமொழி

ராஜாஜி - சோமு

8

திருமூலருடைய வாக்கு தவத்திலிருந்து பிறந்த வாக்காகும். மூவாயிரம் ஆண்டுகள் அரச மரத்தின் அடியில் தவமிருந்து, ஆண்டுக்கு ஒரு பாடலாக மூவாயிரம் பாடல்களை மொழிந்தருளினார் என்று சைவ சமய வரலாறுகள் கூறும்.

பெரிய புராணத்தில் திருமூலருடைய வாழ்க்கையின் சரிதை சொல்லப்பட்டிருக்கிறது. திருக்கயிலாய மலையில் சிவனருள் பெற்றுத் திகழ்ந்த தவயோகியரில் ஒருவர், தம்முடைய பழைய நண்பரான அகஸ்தியரைக் காண்பதற்காகப் பொதிகை மலையை நோக்கிப் புறப்பட்டார். வழியிலுள்ள பல தலங்களையும் சென்று வணங்கி விட்டுத் திருவாவடுதுறைக்கு வந்து சிவதரிசனம் செய்து, சாத்தனூர் என்னும் சிற்றூருக்கு வந்த போது, அங்கே ஒரு பெரிய புல்வெளியில் பசுக்கள் மந்தையாக நின்று புலம்புவதைக் கண்டார். பசுக்களுக்கு அருகிலே சென்று பார்த்த போது, அவற்றை மேய்த்துக் கொண்டிருந்த ஆயன் இறந்து கிடப்பதையும், ஊமைப் பசுக்கள் அந்த உடலை மோந்து மோந்து கண்ணீர் வடிப்பதையும் கண்டார். முனிவருடைய உள்ளம் கருணையால் உருகியது. உடனே தம்முடைய உடலை ஒரு மரத்திலே மறைத்து வைத்து விட்டுப் 'பரகாயப் பிரவேசம்' என்ற சித்தியைப் பிரயோகித்து இடையன் உடலுக்குள் தம்முயிரைச் செலுத்தினார். ஆயன் உயிர் பெற்று எழுந்ததைக் கண்டதும் பசுக்கள் களிப்புடன் துள்ளிக் குதித்தன. மாலை நேரத்தில் அவற்றை வீடுகளுக்கு அழைத்துச் சென்றார், ஆயன் உடம்பிலே நின்ற தவயோகி!

பசுக்களை அவற்றின் இல்லங்களிலே சேர்த்தாகி விட்டது. இடையனுடைய உடலில் பிரவேசித்த சித்தர் அவனுடைய உலக வாழ்க்கையில் பிரவேசிக்க மனமில்லாமல் அவன் வீட்டுக்கு வெளியே நின்றார். அது கண்டு ஆயன் மனைவி குழப்பத்தோடு வந்து கணவனை அழைத்தாள். "பெண்ணே! உன்னோடு நமக்கு எவ்விதமான சம்பந்தமும் இல்லை" என்றார் முனிவர். மனைவி புலம்ப ஆரம்பித்தாள்.

ஊரிலுள்ள பொது மனிதர்கள் நியாயம் விசாரிக்க வந்து கூடினார்கள். முனிவர் ஒரு மடத்திலே போய் இருந்து கொண்டார்! யார் வந்து அழைத்தும் பயனில்லை. "உன்னுடைய கணவனுக்கு இன்று மாடு மேய்க்கப் போன இடத்தில் ஞானோதயம் ஏற்பட்டு விட்டது. இனிமேல் அவன் உன்னோடு வரமாட்டான். அவனை நீ மறந்துவிடு. யாருக்கும் கிடைக்காத ஞானம் அவனுக்குக் கிடைத்து விட்டது!" என்று பெரியவர்கள் இடையன் மனைவிக்குச் சொல்லிச் சமாதானப் படுத்தினார்கள்.

இதன் பிறகு ஞானி காட்டுக்குத் திரும்பி வந்து தமது பழைய உடலைத் தேடினார். காணவில்லை! திருமறைப் பொருளைத் தெள்ளிய தமிழில் எடுத்துச் சொல்வதற்காகவே இறைவன் அந்தப் பழைய உடலை இவ்வாறு மறைத்தருளினான். இதை ஞான

உணர்வால் தெரிந்து கொண்ட முனிவர், இடையனாகவே நடந்து சென்று திருவாவடுதுறைக்கு வந்தார். தெய்வத் தன்மை பொருந்திய ஒரு படர் அரச மரத்தை அங்கே கண்டார். அதன் அடியில் அமர்ந்து சிவயோகத்திலே கண் இமைகளை மூடினார். ஓராண்டு கழித்துக் கண்களைத் திறந்து ஒரு பாடல் அருளினார். மீண்டும் இமைகளை மூடித் தவமிருந்தார். மறுபடியும் பன்னிரண்டு மாதங்கள் கழித்து நிஷ்டை கலைந்து அடுத்த பாடலை மொழிந்தார். இப்படி ஆண்டுக்கு ஒரு பாடலாக அருளிச் செய்த நூலே 'திருமந்திர மாலை'யாகும் என்பது பரம்பரை வரலாறு. இடையன் பெயர் மூலன். அதனால் முனிவரும் திருமூலர் என்ற நாமம் அடைந்தார்.

திருமூலரைப் பற்றிய புராண வரலாற்றிலும், ஐதீகங்களிலும் நாம் உணர வேண்டிய உண்மை என்னவென்றால், மோனத்திலிருந்து எழுந்து வந்த தவமொழிகளே திருமந்திரப் பாடல்கள். பேரின்பத்தைக் கண்ட முனிவர் அந்த இன்பத்தை வையகமும் பெற வேண்டும் என்ற கருணையில் தோய்ந்து ஞானத்தை வழங்குகிறார்.

'முன்னுரை'யாக அமைந்த 'பாயிரம்' என்ற பகுதியிலுள்ள சில பாடல்களை இதுவரையில் பார்த்தோம். இனி, உபதேசம் என்ற அத்தியாயம் தொடங்குகிறது.

* * *

நாம் அடைந்த இன்பத்தைப் பிறரும் அடைய வேண்டும் என்பதற்கான இரகசிய உபாயங்களை உணர்த்துகிறார். இந்த உபாயங்கள் ஒன்பது பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒன்பது தந்திரங்கள் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளன. இந்த ஒன்பது தந்திரங்களும் ஒன்பது ஆகமங்களின் சாரம் என்று பெரியோர்கள் கூறுகிறார்கள். வடமொழியில் ஆகமத்தைத் தந்திரம் என்றும், ஆகமத் தோற்றத்தைத் 'தந்திர அவதாரம்' என்றும் அழைப்பது மரபு.

முதலாவது தந்திரத்தின் முதற் பிரிவு 'உபதேசம்'. 'உபதேசம்' என்ற வடமொழிச் சொல்லுக்கு உடனிருந்து உணர்த்துதல் என்று பொருள். அவரவருடைய பக்குவ நிலைக்குத் தக்கவாறு இறைவன் நம்முடனிருந்து நமக்கு ஞான நிலையை உணர்த்துகிறான் என்பதே இந்தப் பகுதியின் செம்பொருள்.

* * *

உயிர்த் தத்துவமானது விண்ணிலிருந்து இறங்கி வருகிறது. அது படைக்கப்படாமல் அனாதியாக நின்ற தத்துவம். இறைவனைப் போலவே ஆரம்பமும் முடிவும் இல்லாத பொருள் அது! இந்த ஆன்ம தத்துவமானது அதனதன் வினைக்கு ஏற்ப உடல் தாங்கி உலகிலே பிறக்கிறது. கீதையில் கண்ணன் வாக்கிலும் இதைக் காணலாம்.

விண்ணின்று இழிந்து
வினைக்கு ஈடாய் மெய்கொண்டு

[விண்ணின்று—ஆகாச வெளியிலிருந்து முதலில் இறங்கி. இழிந்து—இறங்கி வந்து. வினைக்கு ஈடாய்—அந்தந்தப் பிறவிக்குரிய வினைகளுக்குத் தக்கவாறு. மெய் கொண்டு—சரீரத்தை எடுத்துக் கொண்டு.]

உயிரை விண்ணிலிருந்து இறங்கச் செய்து அதனதன் வினைகளுக்குத் தக்கவாறு உடல் தாங்க வைத்து இயக்குவது உயிருக்கு உயிராக நின்று தொழில் செய்கிற பரம்பொருள்!

விண்ணின்று இழிந்து
வினைக்கீடாய் மெய்கொண்டு
தண்ணின்ற தாளைத்
தலைக்காவல் முன்வைத்து

[தண்ணின்ற — தண்மை நிரம்பி நின்ற, எப்பொழுதும் குளிர்ச்சியாகிய கருணையோடு கூடிய. தாளை — திருவடியை. தலைக்காவல் முன்வைத்து—தலைக்காவலாக முன்வைத்து. அதாவது அந்தந்த உடம்புக்கு உரிய உயிர் எது என்று தேர்ந்து பங்கிடு செய்து, அதற்குக் கருணைக் காவலாகத் தன் திருப்பாதத்தை வைத்துக் கொடுத்து.]

இறைவனுடைய கருணை நிரம்பிய திருவடியே உயிருக்கு முன்னாக நடந்து உடம்பிலே உயிரைக் கூட்டிக் காவல் அமைக்கிறது. அப்படிக் காவல் அமைத்து முன் நிற்பதும் போதாதென்று, உள்ளத்தினுள்ளேயே நின்று துணை புரிகிறான் இறைவன்.

உண்ணின்று உருக்கி

[உண்ணின்று—உள் நின்று: உயிருக்கு உயிராக உள்ளே நின்று. உருக்கி—கனியச் செய்து]

உண்ணின்று உருக்கிஓர்
ஒப்பிலா ஆனந்தக்
கண்ணின்று காட்டி—

உருக்கம் அதிகமாக அதிகமாக ஓர் ஒப்பில்லாத ஆனந்தம் கண்ணிலே பெருகி வருகிறது. இறைவன் ஆனந்தமாகிய கண்ணிலே பேரின்பமாகிய தரிசன நிலையிலே நின்று, உயிருக்குக் காட்சி தருகிறான். காட்சி தந்து,

கண்ணின்று காட்டிக்
களிம்பு அறுத்தானே

[கண்ணின்று — கண்ணிலே நின்று. காட்டி—தரிசனம் தந்து. களிம்பு—உயிரை ஒட்டிக் கொண்டு நிற்கிற அழுக்கு; செம்பில் உள்ள களிம்பு போல உயிரைப் பற்றி நிற்கும் ஆணவம் முதலிய அழுக்கு. களிம்பு அறுத்தானே—களிம்பை நீக்கினான்.]

களிம்பை அறுக்கும்போதே உயிருக்கு ஓர் ஒப்பில்லாத ஆனந்தத்தையும் கூடவே தருகிறான்!

உணர்விலே இறைவனுடைய காட்சி தெரியத் தெரிய ஆன்மாவைப் பற்றிக் கொண்டிருக்கிற களிம்பாகிய அழுக்குகள் நீங்குகின்றன என்ற ஆனந்த அனுபவத்தைப் பாடுகிறார் முனிவர்.

விண்ணின்று இழிந்து
வினைக்கீடாய் மெய்கொண்டு
தண்ணின்ற தாளைத்
தலைக்காவல் முன்வைத்து
உண்ணின்று உருக்கி,ஓர்
ஒப்பிலா ஆனந்தக்
கண்ணின்று காட்டிக்]
களிம்பறுத் தானே!

ஸ்ரீ ராஜாஜி, தாம் செய்த பணிகளுள் மிகச் சிறந்தவை என்று கருதுவது 'சக்கரவர்த்தித் திருமகன்', வியாசர் விருந்து' என்னும் இருநூல்கள் எழுதியதாகும். இவ்விரு நூல்களும் பாரதத்தின் பல மொழிகளிலும் வெளிவந்துள்ளன. சென்ற 13-5-61 சனிக்கிழமை அன்று ஹைதராபாத்தில் தாசப்பிரகாஷில் உபராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் தலைமையில், இவ்விரு நூல்களின் தெலுங்குப் பதிப்பின் வெளியீட்டு விழா நடைபெற்றது. இவ்விரு நூல்களையும் தெலுங்கில் வெளியிடும் பொறுப்பை ஏற்றுக்கொண்டவர் வியாசா பப்ளிகேஷன்ஸைச் சேர்ந்த அட்வகேட் திரு காளிதாஸ் அவர்களாகும். டாக்டர் ராதாகிருஷ்ணன் "எத்தனையோ பெரும் பதவிகளை வகித்துள்ளார் ஸ்ரீ ராஜாஜி. பாரத தேசத்தின் தலைமைப் பீடத்தையே அலங்கரித்துள்ளார். அவர் செய்த பணிகளுக்கெல்லாம் மகுடமாக விளங்குவது இவ்விரு நூல்களாகும். பாரதத்தின் இரு கண்களெனத் திகழும் ராமாயணமும் பாரதமும் ஸ்ரீ ராஜாஜியின் "கைபட்டு மெருகு ஏறி யிருக்கின்றன" என்று கூறி, தெலுங்கில் வெளியாகியுள்ள ராஜாஜியின் ராமாயணத்தையும் பாரதத்தையும் அவருக்கு வழங்கினர்.




வாடாத இளமையழகு
வாராதோ
விரலசைந்தால்!
அன்றாடம் ஹிமாலயா புக்கே ஸ்நோ பூசிக்கொள்ளுங்கள்: உங்கள் சருமம் மென்மையுடனும், புது மலர்ச்சியோடும் மாறாத இளமையோடும் சோபிக்கும்!
முகப்பருக்களும், சுருக்கங்களும், வறட்சியும் ஏற்படாமல் பாதுகாக்கிறது ஹிமாலயா புக்கே ஸ்நோ. மாறாத இளமைப் பொலிவுக்கு உபயோகியுங்கள் ஹிமாலயா புக்கே ஸ்நோ.
எடுப்பான புது ஜாடி
மிடுக்கான புது அட்டைப்பெட்டி
Himalaya Bouquet Snow
ஹிமாலயா
புக்கே
ஸ்நோ
HBS.21-59 TM

அந்தம் மிகுந்த அந்தமான்

கிருஷ்ணமூர்த்தி

அந்தமான் என்ற பெயரைக் கேட்டவுடனே ஆயுள் கைதிகளுக்காக ஒதுக்கப்பட்ட இடம் என்கிற நினைவுதான் எல்லோருக்கும் உண்டாகும். அதோடு அங்கு சென்றவர்கள் மீண்டு வருவது அரிது என்ற நினைவும் தோன்றுவது இயல்பே. ஆனால் இந்த நினைவுகளுக்கும், பயங்களுக்கும், அப்பாற்பட்ட புதுமையும், பொலிவுமுள்ளதாக விளங்குகின்றன இன்றைய அந்தமான் முதலிய தீவுகள்.

தன்னைச் சுற்றி நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டு மனித நடமாட்டமே அற்ற சூன்யப் பிரதேசமாக ஒரு காலத்தில் இருந்த அந்தமான் இன்று நவநாகரிகத் தீவுகளில் ஒன்றாகக் காணப்படுகிறது என்பதை அறிய நேரும்போது நமக்கே வியப்பாயிருக்கிறது.



கிருஷ்ணமூர்த்தி

1858ம் ஆண்டுப் போராட்டத்தில் பங்கு எடுத்துக் கொண்டவர்களைக் குடியேற்றுவதற்காக ஏற்படுத்தப்பட்ட அந்தமான் இன்று உல்லாசப் பயணத்துக்கு உரிய இயற்கை எழில் அமைந்த பிரதேசமாக மாறியிருக்கிறது. இந்த மாறுதல் அந்தமானின் வளர்ச்சியைக் காட்டுகிறது. மேற்கூறிய மாறுதலும் வளர்ச்சியும் ஏற்படுவதற்கு முன்பு பார்ப்பதற்குப் பயங்கரமான பிரதேசமாகவும், கொடிய காடுகளும் மேடு பள்ளங்களும் நிறைந்து வனவிலங்குகள் வசிக்கும் கரடு முரடான நிலமாகவும் இருந்தது அந்தமான்.

வங்கக் கடலை அணி செய்யும் அந்தமான் முதலிய தீவுகளில் இன்று ஆயிரக்கணக்கான குடும்பங்கள் விரும்பி வசிக்கின்றன. மனிதனின் அபூர்வ சக்திகளாலும், காலத்தின் வளர்ச்சி வேகத்தினாலும் நிகழும் விந்தைகளில் இதுவும் ஒன்று போலும். கொலையாளிகளும், குற்றவாளிகளும், தீவாந்தரத் தண்டனை பெற்றவர்களும் கொண்டுபோய்த் தள்ளப்படும் இடமாகக் கருதப்பட்ட அந்தமான் இன்று மனிதனின் அபூர்வ சக்தியினால் மாறி வளர்ந்திருக்கிறது; அல்லது வளர்ந்து மாறியிருக்கிறது.

அந்தமான், நிக்கோபார் தீவுகளை இரண்டு நிலத்திட்டுக்களின் கோவை என்றே கூறலாம். பெரிய நிலத் திடல்களாகிய இவ்விரண்டு தீவுகளிலும் சுமார் 250 சிறிய நிலத் திட்டுக்கள் அடங்கியிருக்கின்றன. ஏறக்குறைய 3000 சதுர மைல் நிலப்பரப்புள்ள இத் தீவுகளில் சுமார் 40,000 மக்கள் வசித்து வருகிறார்கள். இத்திடல்கள் நாற்புறமும் இயற்கை எழில் கொஞ்சும் பிரதேசமாக விளங்குகின்றன.



அந்தமானில் சில பகுதிகளில் காணும் எண்ணெய் ஊற்றுக்கள்

அழகிய சிறிய மணற்குன்றுகள் கண்ணுக்கு இரம்யமாகத் தெரிகின்றன. அந்தமான், நிக்கோபார் தீவுகளின் மற்றொரு சிறப்பு, அங்கே வளம்நிறைந்த காடுகள் இருக்கின்றன. இந்தக் காடுகளிலிருந்து பயன்மிகுந்த மரங்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன. ஆங்காங்கே எண்ணெய் ஊற்றுக்களும் இருக்கின்றன.

நிக்கோபார் தீவு அந்தமானிலிருந்து 157 மைல் தொலைவில் இருக்கிறது. இந்தத் தீவுகளை அடைமழைப் பிரதேசம் என்றே அழைக்கலாம். இருப்பினும் எந்த ஆண்டிலும் இங்கே 123 அங்குல மழைக்குமேல் பெய்ததே இல்லை. சில சமயம் வெயிலிருந்தாலும் கடலிலிருந்து வீசும் காற்றினால் எக்காலமும் குளிர்ந்த இடமாக இந்தத் தீவுகள் விளங்குகின்றன.

இந்தத் தீவுகளில் உள்ள மக்களில் சிலர் தாங்கள் 1920-ம் ஆண்டு கேரளாவில் நடந்த 'மாப்பிள்ளா' போராட்டத்தில் தீவிரமாகக் கலந்து கொண்டு அதன் விளைவாக இங்கு வந்தவர்களின் சந்ததியார்கள் என்று கூறிக் கொள்கிறார்கள். இந்த மக்களைத்தவிர 1953ம் ஆண்டு கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து வந்த அகதிகளும் இத் தீவுகளில் குடியேறியிருக்கிறார்கள். இதே ஆண்டில் இந்தியாவின் பல்வேறு மாகாணங்களிலிருந்தும் இத் தீவுகளில் குடியேற விரும்புகிறவர்களுக்கு வசதி செய்து கொடுக்கும் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டது.

பயிர்த் தொழில் செய்பவர்கள் இங்கு முக்கியமாக அழைத்து வரப்பட்டனர். பயிர்த் தொழிலோடு காட்டு இலாகாவில் வேலை செய்து பயன்பெறவும் வசதி அளிக்கப்பட்டது. ஒவ்வோர் ஆண்டும் அந்தமான் நிக்கோபார் தீவுகளின் நிர்வாகத்தினர் சிபாரிசு செய்வதன்



நிக்கோபார் தீவிலுள்ளவர்கள் கேளிக்கைகளின்பொழுது உடைதரித்திருக்கும் தோற்றம்

பேரில் பாரத அரசாங்கம் இங்கே குடியேற விரும்புகிற குடும்பங்களுக்குச் செம்மைப் படுத்தப்பட்ட 5 ஏக்கர் நிலமும், தென்னை போன்ற மரங்களை நட்டுத் தோப்புக்களை உண்டாக்குவதற்காக மலைப்பாங்கான இடத்தில் மேலும் 5 ஏக்கர் நிலமும் அளித்து வருகிறது. அப்படி இதுவரை 1830 குடியானவக் குடும்பங்கள் வசதி பெற்றிருக்கின்றன.

இதுவரை குடியேற்றப்பட்டுள்ள குடும்பங்களைப் பற்றிய விவரம்.

கி. வங்காளம்	1665	குடும்பம்.
கேரளம்	116	,,
சென்னை	12	,,
பாண்டி—மாஹி	4	,,
பர்மா	5	,,
மொத்தக் குடும்பங்கள்:	1802	

இத்திட்டத்தின் கீழ் நபருக்கு 500 ரூபாய் வரை கடன் அளிக்கப்படுகிறது. இக் கடன் தொகையைப் பத்து ஆண்டுகளில் திருப்பி அளித்தால் போதும். இதுவரை அளிக்கப் பட்ட கடன் தொகை சுமார் 51,850 ரூபாய் ஆகும். குடியானவர்களுக்கு வயல்களில் வேலை இல்லாத காலத்தில் காட்டு இலாகாவில் வேலை தரப்படுகிறது. இப்படிப்பட்ட வசதிகளினால் குடியேறியுள்ள குடும்பங்கள் செழித்து வளம் பெறுகின்றன. மரவேலை, இரும்புப் பட்டறை வேலை உள்பட மொத்தம் பத்து விதமான கைத்தொழில்களை அந்தமான், நிக்கோபார் மக்கள் செய்கிறார்கள். 1800 சதுர மைல் காடும், 4000 ஏக்கர் தென்னந் தோப்பும் இருப்பதால் தொழில் வளத்துக்கு நிறைய இடம் இருக்கிறது. மரம் அறுக்கும் தொழிலும், தீப்பெட்டி செய்யும் தொழிலும் உப தொழில்களாக அமைந்துள்ளன. சிறிதளவு ரப்பர் உற்பத்தியும் அந்தமானில் செய்யப்படுகிறது.

கடல் கடந்த இந்தத் தீவுகளுக்குள் மின்சார வசதி, பஸ் போக்குவரவு வசதி எல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன. தபால் எடுத்துச் செல்வதற்கும், சர்க்கார் ஊழியர்களை ஏற்றிச் செல்வதற்கும் தனிப்பட்ட போக்குவரவு வசதிகள் உண்டு.

நிக்கோபார் தீவில் வசிக்கும் மக்கள் அந்தமான் மக்களிலிருந்து மிகவும் மாறுபட்டவர்களாகக் காணப்படுகின்றனர். தென்கிழக்கு ஆசியாவிலிருந்து வந்த ஒருவகை மஞ்சள் நிற மனிதர்களின் வழி முறையினராக இவர்கள் கருதப்படுகின்றனர். நிக்கோபார் தீவுகளின் ஒரு பிரிவான கார்நிகோபார் தீவுக்குள் குடிசைகள் யாவும் பெரும்பாலும் கடலோரமாகவே அமைக்கப்பட்டுள்ளன. தீவுகளின் எல்லாக் கிராமங்களிலும் குடிசைகளைத்தான் அதிகமாகக் காணலாம்.

இந்தத் தீவின் மக்கள் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி தினத்தன்று புத்தாடை உடுத்திப் புதுமகிழ்ச்சி கொண்டு நாட்டியம் போன்ற கேளிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இந்தப் பண்டிகைக்கு 'கானு ஹா - வுன்' என்று பெயர்.

படகு விழாவும் படகு பூஜையும் நிக்கோபார் தீவில் சிறப்பாக நடை பெறுகின்றன.

இத்தீவுகளில் கிராமத் தலைவன் 'மாருட்டோ' என்று அழைக்கப்படுகிறான்.

இந்தத் தீவுகளில் கடல் கடந்து வாழும் இந்தக் குடும்பங்கள், மகிழ்ச்சியாயிருக்கின்றன என்பதை அறியும்போது நமக்கும் மகிழ்ச்சி உண்டாகிறது.

அலை கடலுக்கு அப்பால் வாழும் இந்தக் குடும்பங்களுக்கு மேலும் மேலும் நல் வாழ்வு பெருகட்டும் என்று விரும்புவோம்; வாழ்த்துவோம்.



கால்கேட்டின் மூலம்
நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை
அகற்றி பற்கள்
சொத்தையாவதையும் தடுங்கள்!
ஏனெனில், ஒரே தேய்ப்பில் கால்கேட் டெண்டல் கிரீம் துர்நாற்றத்தையும் சொத்தையையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சதவிகிதத்தை ஒழிக்கிறது.
COLGATE DENTAL CREAM
வழக்கமாக கால்கேட் உபயோகித்தால், அது:
✔ துர்நாற்றத்தை அகற்றுகிறது
✔ சொத்தையைத் தடுக்கிறது
✔ பற்களை அதி வெண்மையாக வைத்திருக்கிறது
COLGATE TOOTH POWDER
நீங்கள் பற்பொடியை விரும்பினால், இந்த பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம். ஒரு டப்பி பல மாதங்களுக்கு வரும்.
COLGATE
COLGATE DENTAL CREAM
பரிசுத்தத்திற்கும், வாயில் நறுமணம் கமழவும், வெண்ணிற பற்களைப் பெறவும் உலகத்திலேயே பெரும்பாலான மக்கள் மற்றெல்லா பற்பசைகளையும் விட கால்கேட்டையே பெரிதும் விரும்புகிறார்கள்.

உத்தர கோச மங்கைக்கு அரசு

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

ஒரு பொருளாதாரப் பேராசிரியர். அவர் ஏற்றிருக்கிற பள்ளியில் பி. ஏ. வகுப்பில் நாற்பது பிள்ளைகள். அதில் பத்துப் பேர் பெண்கள். அவர்களில் ஒருத்தி கமலா. பேராசிரியர் சொல்லும் பொருளாதாரத் தத்துவங்கள் ஒன்றும் அவளுக்குப் புரிவதேயில்லை. எப்படியோ உருப் போட்டுப் பரீக்ஷை எழுதிப் பாசாகிவிட்டாள். பேராசிரியரது பெற்றோர் அந்தக் கமலாவையே தங்கள் மருமகளாக நிச்சயித்து மகனுக்கு மணம் முடித்து வைக்கின்றனர். பேராசிரியர் போதித்த பொருளாதாரத் தத்துவங்கள் விளங்காவிட்டாலும் பேராசிரியரது குடும்பப் பொருளாதாரத்தைத் திறம்பட நிர்வகிக்கத் தெரிந்து கொள்கிறாள் கமலா. பேராசிரியரும் அடங்கி ஒடுங்கி விடுகிறார். இது நானறிந்த குடும்பம் ஒன்றில் நிகழ்ந்த செயல். இதனைத் தூக்கியடிக்கிற வகையிலே இறைவனும் குடும்பம் நடத்தியிருக்கிறார். கதை இதுதான்:

கைலாயத்தில் ஒருநாள் இறைவன் பார்வதிக்கு வேத மந்திரங்களை உபதேசிக்கிறார். அம்மையும் அத்தனை மந்திரங்களையும் ஆர்வத்தோடு கற்றுக் கொள்கிறாள். என்றாலும், அவளுக்கு எத்தனையோ வேலை. புருஷனுக்குச் செய்ய வேண்டிய பணிவிடைகள் ; இரண்டு பிள்ளைகளைக் கட்டி மேய்க்கும் தொல்லை. இவை தவிர எண்ணற்ற பக்தர்கள் செய்யும் பிரார்த்தனைகளை உடனுக்குடன் நிறைவேற்றி வைக்கும் பொறுப்பு இருக்கிறதல்லவா? அதனால் வேத மந்திரங்களை ஒழுங்காய் நெட்டுருப் போட்டு, ஞாபகத்திலே வைத்துக் கொள்ள முடியவில்லை. இதுவெல்லாம் தெரிகிறதா இறைவனுக்கு? சொல்லிக் கொடுத்த பாடத்தை ஒப்புவிக்கும்படி கேட்கிறார் ஒரு நாள். அம்மைக்குப் பாடம் எல்லாம் மறந்து விட்டது; ஆதலால் விழிக்கிறாள். உடனே கோபம் வருகிறது வாத்தியாருக்கு. கோபத்தில் சாபமே கொடுத்து விடுகிறார். சாபம் இதுதான்: அன்னை பார்வதி பூலோகத்தில் ஒரு வேதியர் மகளாய்ப் பிறக்க வேண்டியது. அவரிடம் வேத, வேதாகமங்களை 'இம்போஸிஷன்' எழுதுவதுபோல, ஆயிரம் தடவை கேட்டுக்கேட்டு மனனம் பண்ண வேண்டியது. அதன்பின் இறைவன் வந்து வேதப்பொருள் உரைத்துத் திருமணம் செய்து கொண்டு கைலைக்கு அழைத்துச் செல்ல வேண்டியது. இந்தச் சாபம், இல்லை, இந்த நல்ல 'எக்ரிமெண்டு' நிறைவேறுகிறது நாளாவட்டத்தில்.

ராஜமாணிக்க சதுர்வேதபுரம் என்று ஓர் ஊர் தமிழ் நாட்டில். அங்கு ஒரு வேதியர். வேதங்களை ஓதி உணர்ந்தவர். ஒழுக்கத்தால் உயர்ந்தவர் : அவருக்கு ஒரு குறை. பிள்ளைப் பேறு இல்லையே என்று. அதற்காகத் தம் ஊரின் பக்கத்திலுள்ள இலந்தை வனம் கிராமத்திலே கோயில் கொண்டிருக்கும் இறைவனைப் பிரார்த்திக்கிறார். அங்குள்ள கௌதம தீர்த்தத்தில் மூழ்கி, விரதம் இருக்கிறார். ஏன், தவமே புரிகிறார். இவருடைய தவத்துக்கு இரங்கி இறைவனும் பிரத்யக்ஷமாகி வரம் அளிக்கிறார். இப்படிப்பட்ட வர பலத்தால் அவருக்கு மூன்று புதல்வர்களும் ஒரு பெண்ணும் பிறக்கிறார்கள். பெண்ணுக்குப் 'பூண் முலையாள்' என்று பெயரிடுகிறார். மக்கள் நால்வரும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்கிறார்கள். பெண்ணும் வளர்ந்து மணப்பருவம் அடைகிறாள்.

இந்த நிலையில் ஒரு கிழ வேதியர் உருவில் இறைவனே வருகிறான். யாருக்குத் தான் வரம் கொடுத்துப் புத்திரசந்தானத்தை அருளினானோ அந்த வேதியரிடமே தானும் ஒரு வரம் கேட்கிறான்! இரப்போர்க்கு இல்லை என்னாத பெருமையுடைய வேதியரும் கேட்ட வரம் தருவதாக வாக்களிக்கிறார். வந்த கிழவேதியர் கேட்ட வரம், பூண் முலையாளைத் தமக்கு மணம் செய்து தரவேண்டும் என்பதுதான். வரம் கொடுத்த வேதியரும், கிழ வேதியருக்குத் தம் அருமை மகளைத் திருமணம் செய்து கொடுக்கச் சம்மதித்துத் திருமண ஏற்பாடுகள் எல்லாம் செய்கிறார். மிக்க சிறப்பாகத் திருமணம் நடக்கிறது. மணமக்களை ஊஞ்சலில் வைத்து லாலி பாடுகிறார்கள் பெண்கள். அவ்வளவுதான், மணமகனும், மணமகளும் அப்படியே மறைந்து விடுகிறார்கள். எல்லாரும் திகைத்து நின்றபோது ரிஷப வாகனருடராய் இறைவனும், இறைவியும் காட்சி கொடுக்கிறார்கள். இறைவன் வேதியரைப் பார்த்து, "மாசற்ற மறையவனே, உன் தவத்துக்கு மெச்சியே பார்வதியை நின் மகளாக அவதரித்து உன்னிடம் வளரச் செய்தோம். அவளைத் திரும்பவும் திருமணம் முடித்து என்னிடம் அழைத்துக் கொண்டோம்" என்று கூறுகிறான். "இனி இந்த ஊரிலேயே இந்தக் கல்யாண சுந்தரியுடன் கல்யாண சுவரனாகக் கோயில் கொள்வோம். இந்த ஊருக்கும் கல்யாணபுரம் என்றே பெயர் வழங்கட்டும்" என்றும் சொல்கிறான்.


இத்தனையும் கேட்ட பின்பும் வேதியருக்கு ஓர் ஆசை. "இறைவனே! திருமணம் நடந்தது சரிதான். சப்தபதி, சேஷ ஹோமம் எல்லாம் நடக்கவில்லையே? அந்தச் சடங்கெல்லாம் நடக்காவிட்டால் எங்கள் மறையவர் மணமுறைப்படி திருமணம் பூர்த்தியானதாகாதே" என்று அங்கலாய்க்கிறார். "சரி நடக்கட்டும் உங்கள் சடங்குகள்" என்கிறார் இறைவன். சடங்குகள் நடந்து இறைவன் இறைவி திருமணமும் பூர்த்தியாகிறது.

இப்படிப் பார்வதியை இரண்டாம் தடவை திருமணம் முடித்த பின்னும் இறைவன் தம்முடைய வாத்தியார் தொழிலை விடவில்லை. 'என்ன வேதம் ஓதுதல் கூடுமா?' என்கிறார்.

அம்மையும் சளைக்கவில்லை. ராஜமாணிக்க சதுர்வேதபுரத்தில்தான் தந்தை வேதியரிடம் ஆயிரம் தடவைக்கு மேலாக வேதங்களை ஓதி ஓதி உணர்ந்தவள் ஆயிற்றே. ஆதலால் கடகட என்று பாடம் ஒப்புவிக்கிறாள். 'சரி. ஒப்புவித்த பாடத்துக்கெல்லாம் பொருள் சொல்லு' என்கிறார் உபாத்தியாயர். அம்மை திரு திரு என்று விழிக்கிறாள் பள்ளிப் பிள்ளையைப் போல. உடனே இறைவன் வேதம், வேதப் பொருளை யெல்லாம் திரும்பவும் அவளுக்குப் போதிக்கிறார். இப்படி வேதத்தில் திரும்பவும் உபதேசம் பெற்ற மங்கை, பூண் முலையாளாக, கல்யாணசுந்தரியாகக் கோயில் கொண்டிருக்கும் தலம்தான் **உத்தரகோச மங்கை** (உத்தரம் என்றால் திரும்பப் பெறும் விடை, கோசம் என்றால் வேதம் என்று பொருள்). அந்த உத்தரகோச மங்கைக்கே செல்கிறோம் நாம் இன்று.

இந்த உத்தரகோச மங்கை ராமநாதபுரம் மாவட்டத்திலே, ராமநாதபுரத்துக்கு நேர் மேற்கே ஐந்தாறு மைல் தூரத்தில் இருக்கிறது. வாகன வசதி உள்ளவர்கள் எல்லாம் ராமநாதபுரத்திலிருந்து மதுரை செல்லும் ரோட்டில் ஐந்து மைல் சென்று பின்னர் தெற்கே திரும்பி மண் ரஸ்தாவில் மூன்று மைல் போக வேண்டும். உத்தர கோச மங்கை (Uthrakosa-mangai train halt) என்னும் ஸ்டேஷனில் இறங்கி மூன்று மைல் நடந்து சென்றாலும் இந்த ஊர் போய்ச் சேரலாம். ஊர் சின்னஞ் சிறிய ஊர். ஊருக்கு மூன்று மைல் தொலைவிலேயே கோயில் கோபுரம் வானளாவ உயர்ந்து நிற்பது தெரியும். வடக்கு வீதி வழியாகச் சென்று கோயில் முன்பு வந்து நின்றோமானால் அங்கு பெரிய கோபுரத்துக்குத் தென் பக்கத்தில் ஒரு கோபுரம் இடிந்து கிடப்பது தெரியும். உதயபூர் ஜவா மஹால் போல் இந்த இடிந்த கோபுரம் காட்சி தரும். இடிந்து கிடப்பதே இத்தனை பெரிது என்றால் — இடியாத நிலையில் அது எத்தனை பெரிதாயிருந்திருக்கும் என்று கற்பனை பண்ணிக் கொள்ள வேண்டியதுதான்.

இந்த ஊரின் பெருமை எல்லாம் இங்கே மங்கள நாயகரும் பூண்முலை அம்மையும் கோயில் கொண்டிருக்கிறார்கள் என்பதனால் மட்டும் அல்ல. இந்தத் தலத்திலே மாணிக்க வாசகர் வந்து தங்கியிருந்து, உத்தரகோச மங்கைக்கு அரசே என்று கூவி அழைத்து நீத்தல் விண்ணப்பத்தைப் பாடிய காரணத்தால் சமய உலகிலும், இலக்கிய உலகிலும், இவ்வூர் பிரபலம் அடைந்திருக்கிறது. அரிமர்த்தன பாண்டிய மன்னன் குதிரை வாங்க அளித்த பொருளையெல்லாம் எடுத்துச் சென்று திருப்பெருந் துறையில் ஆலயப் பணிக்குச் செலவு செய்கிறார் வாதவூரர். பின்னர் இந்த வாதவூரரைக் காப்பதற்காகவே, திருப்பெருந் துறையுறை சிவபெருமான் நரிகளை யெல்லாம் பரிகளாக்கிக் கொண்டு வருகிறார் மதுரைக்கு. வந்த பரிகளோ திரும்பவும் நரிகளாகிக் குதிரைக் கொட்டாரத்தில் இருந்த மற்றக் குதிரைகளையும் அழித்து விட்டு மறைகின்றன. இதற்காக மன்னன் வாதவூரரைத் தண்டிக்க முனைகிறான். வாதவூரன் தமது அன்பன் என்பதை இறைவன் பிட்டுக்கு மண் சுமந்து, பிரம்படி பட்டுக் காட்டுகிறான் பாண்டியனுக்கு. அதன்பின் வாதவூரர் அரன் அடிக்கே தொண்டு செய்யும் அடியவராகத் திருப்பெருந்துறை, திரு உத்தரகோசமங்கை, திருவாரூர், திருவிடைமருதூர் முதலிய தலங்களில் இறைவனை வணங்கிப் பதிகங்களைப் பாடி, தில்லை சென்று இறைவனோடு இரண்டறக் கலந்தார் என்று வரலாறு. இந்த வாதவூரர் என்னும் மாணிக்கவாசகர் மனத்துக்கு உகந்த இடம், திருப்பெருந்துறைக்கு அடுத்தபடி உத்தர கோசமங்கைதான்.



நடராஜர்

மாணிக்க வாசகருக்கும் இத் தலத்துக்கும் ஏற்பட்ட தொடர்பு பற்றியும் ஒரு கதை இருக்கிறது. இந்த உத்தரகோச மங்கைத் தல புராணத்தில் கைலை மலையிலிருந்த கண்ணுதல், தம் சீடர் ஆயிரம் பேரோடு உத்தரகோச மங்கை வந்து அங்குள்ள பொய்கை ஒன்றின் பக்கத்திலே தங்குகிறார். அந்தச் சீடர்களையெல்லாம் அங்கே இருத்திவிட்டுத் 'தம்முடைய பக்தை அழகமர் மண்டோதரிக்குத் தரிசனம் கொடுக்க இலங்கைக்கே செல்கிறார். அப்படிச் செல்லும்போது தம்முடன் கொண்டு வந்த திருமுறைகளை யெல்லாம் தம் சீடரிடம் கொடுத்து விட்டுச் செல்கிறார். தான் இலங்கை சென்று சேர்ந்ததைக் குறிக்க அந்தப் பொய்கை நடுவிலே ஒரு சுடர் தோன்றும் என்றும், அந்தச் சமயத்தில் பொய்கையில் மூழ்குவார் முத்தி பெறுவர் என்றும் கூறுகிறார். சீடர்கள் எல்லாம் பொய்கைக் கரையிலே காத்துக் கிடக்கின்றனர். சில நாட்கள் கழித்து. இறைவன் கூறியபடியே பொய்கையின் நடுவில் கொழுந்துவிட்டுச் சுடர் எழுகின்றது. உடனே சீடர் எல்லாரும் பொய்கையில் மூழ்கி முத்தி பெற விரைகின்றனர். சீடரில் ஒரே யொருவர் மட்டும் இறைவன் கொடுத்துச் சென்ற திருமுறைகளைக் காப்பதே முத்தி பெறுவதைவிட முக்கியம் என நினைத்து, பொய்கையில் மூழ்காமல் தனித்து நின்று திருமுறைகளைக் காப்பாற்றுகிறார். அந்தச் சீடரையே, இறைவன் வாதவூரராக அவதரிக்கச் செய்கிறார். பின்னர் அவருக்கு மட்டுமல்ல. அவரைச் சேர்ந்த பாண்டியன், பிட்டுவாணிச்சி முதலிய எல்லாருக்குமே முத்தியளிக்கிறார்.

இந்த மணிவாசகர் பாடிய பாடல்களே திருவாசகம். திருவாசகம் பன்னிரு திருமுறைகளிலே ஒன்றாக இடம் பெறுகிறது.

காருறு கண்ணியர் ஐம்புலன்
ஆற்றங்கரை மரமாய்
வேருறு வேலை விட்டுகண்டாய்
விளங்கும் திருவா
ரூருறைவாய், மன்னும் உத்தர
கோச மங்கைக் கரசே !
வாருறு பூண் முலையாள் பங்க !
என்னை வளர்ப்பவனே.

என்றுதானே இறைவனிடம் விண்ணப்பித்துக் கொள்கிறார்!


மணிவாசகர், திருவாசகம் என்றெல்லாம் எண்ணம் தோன்ற ஆரம்பித்தால், அவர் பாடிய தில்லைக் கூத்தனின் அற்புத நடனம் எல்லாம் நம் கண் முன் வருமே. தில்லை மூதூர் ஆடிய திருவடியை நினைந்து நினைந்து அவர் பாடிய பாடல்கள் எல்லாம் நம் உள்ளத்தை உருக்குமே. ஆம், இந்த உத்தரகோச மங்கை விழும் பெரிய திருவிழா மார்கழி மாதத்துத் திருவாதிரை உத்சவம்தானே. இந்த எண்ணத் தில் திளைத்துக் கொண்டேதான் உத்தரகோச மங்கைக்குச் சென்றேன் சில வருஷங்களுக்கு முன்பு. உத்தரகோச மங்கையில் மாணிக்கவாசகருக்குக் காட்டிய வித்தக வேடத்தைக் கண்டு தொழ ஆசைப்பட்டேன்: கோயில் நிர்வாகிகள் அழைத்துச் சென்றார்கள், கோயிலின் வடக்குப் பிராகாரத்துக்கு. அங்கு ஒரு சிறிய கோயில். அதுதான் நடராஜர் சந்நிதி என்றார்கள். அங்குள்ள நடராஜர் நிரந்தரமாகச் சந்தனக் காப்புக்குள் மறைந்து நிற்கிறார். காரணம் வினவினேன். சொன்னார்கள் உடன் வந்தவர்கள். அந்த நடராஜத் திருவுருவம் மரகதத்திருல் ஆயது. அதனுடைய பிரகாசம் கோடி சூரிய ஒளி பொருந்தியது. அதை யாரும் ஊனக் கண்ணால் பார்த்தல் இயலாது. ஆண்டுக்கொருமுறை மார்கழித் திருவாதிரை அன்றுதான் பழைய சந்தனக் காப்பு கழற்றப்பட்டுப் புதிய காப்பிடப்படும். அப்படிக் காப்பிடும் அர்ச்சகரும் தம் கண்களை நன்ருக மூடி, துணியால் கட்டிக் கொண்டே காப்பிடுவார். அப்படிக் காப்பிட்டபின்தான் அந்த மூர்த்தி மற்றவர்களுக்குத் தரிசனம் கொடுப்பார். ஆம்! இறைவனை நோக்கி எவ்வளவோ காலம் தவம் கிடக்கலாம். ஆனால் அவன் நேரே நம்முன் திடீரென்று பிரத்தியட்சமாகத் தோன்றிவிட்டால் அவனுடைய திவ்ய தேஜோமயத்தை நம் கண் கொண்டு காணுவது எளிதானதா?

தமிழ் நாட்டுச் சிற்பக்கலை அழகில் ஈடுபட்ட எனக்கு, இந்த நடராஜன் ஏமாற்றத்தையே அளித்தார், சந்தனக் காப்பை ஊடுருவி அவர் உண்மை உருவை, மூர்த்தியை அவர் இருக்கும் வண்ணத்திலேயே காண முடியாத காரணத்தால். ஆனால் இந்த ஏமாற்றத்தோடு நான் வீடு திரும்பவில்லை. இந்தச் சந்நிதியை விட்டு, பிரதான கோயிலுக்குள் நுழைந்த போது, அங்கு நின்று ஆடிக் கொண்டிருந்த நடராஜரைக் காணும் பேறு பெற்றேன். அற்புதமான செப்பு விக்கிரகம். 'அழகமர் திரு உரு' என்று மணிவாசகர் பாடுகிறாரே, அது இந்தத் திருவுருவைக் கண்டுதானோ என்னவோ, அத்தனை அழகு.

இந்த நடராஜரது திருவுருவத்தைக் கண்டதோடு திருப்தி அடைகிறவனில்லையே நான்: உத்தரகோசமங்கை என்ற பெயருக்கே காரணமாயிருந்த அந்த மங்கை, பூண்முலையாள், மங்களேசுவரி, கல்யாண சுந்தரியையும் காண வேண்டுமே என்று துடித்தேன். அவளும் காட்சி கொடுத்தாள்.

காரேறு கருங்குழலும், இருநுதலும்
சுடரிலை வேல் கண்ணும், கஞ்சந்
தாரேறு திருமார்பும், கரும்புருவத்
தடந்தோளும், கருணை காட்டி
நீரேறு சுடர்மவுலிப் பெருமான்றன்
ஒரு பாகம் நீங்கா நேராங்கும்
வாரேறு பூண்முலையாள் மலர்ப்பதமும்
என்னாளும் வழுத்தல் செய்வாம்

என்று பாடி வணங்கி விட்டுத் திரும்பினேன்.



இடிந்த கோபுரம்

இங்கு ஒரு சௌகரியம். கோயிலில் உள்ள மூர்த்திகளையெல்லாம் தேடிப் பல இடங்கள் சுற்ற வேண்டாம். எல்லா மூர்த்திகளையும் (சிலா உருவங்களைச் சொல்கிறேன்) அவரவர் இருப்பிடத்திலிருந்து பெயர்த்து எடுத்து வந்து இறைவன் சந்நிதியிலேயே ஒழுங்காய் அடுக்கி வைத்திருக்கிறார்கள். காரணம் வினவினேன். கோயில் பழுது பட்டிருக்கிறது. திருப்பணி செய்ய வேண்டும். அதற்கென்று ஒதுக்கிய பணமும் இருக்கிறது என்றாலும் வேலைதான் நடக்கக் காணோம் என்றார்கள். சரி, திருப்பணி சிறப்புற நடக்காவிட்டாலும் எல்லா மூர்த்திகளையும் ஒரே இடத்திலேயே பார்க்கும் வாய்ப்பாவது இருக்கிறதே என்று எண்ணிக் கொண்டே திரும்பினேன்.

அன்பே ஆரமுதே



அத்தியாயம் ஒன்பது

எழுந்து நின்றவள் அருண்குமாரின் மனைவியாகத்தான் இருக்க வேண்டும் என்று ஊகித்தார் அனந்தசாமி.

"சௌக்கியமா ?" என்று விசாரித்தார் சுப்பராம பாகவதர்.

"வாங்க!"

"சிவபாக்கியம்...குழந்தையைப் பார்க்கணும்னு வந்திருக்காங்க."

இன்னொரு நிலையில் நுழைந்தாள் சிவபாக்கியம். ஒரு கட்டில். அதன் மீது குழந்தை உட்கார்ந்திருந்தான். நாலைந்து வயதிருக்கும். தகப்பனை உரித்து வைத்திருந்தது. முகஜாடை மட்டுமில்லை. அதேமாதிரி பம்மென்று பக்கவாட்டில் விம்மிய கிராப்பு. அதேமாதிரி வளையம் வளையமாகச் சுருட்டப்பட்ட மயிர் வளையங்கள். அதேமாதிரி பத்து விரலுக்கும் மோதிரங்கள். கழுத்தில் சங்கிலி. சங்கிலிக்குக் கீழே நடனமாடுகிற வெள்ளைக் காரிகள், கப்பல், ரயில், விமானம், டிராக்டர், தென்னை மரம் இவை அச்சிட்ட சட்டை. மணிக்கட்டுகளில் இரண்டு வளைகள். ஒவ்வொரு மோதிரத்திலிருந்தும் ஒரு தங்கச் சங்கிலி கிளம்பி அந்த வளையில் இணைந்திருந்தது. காலில் ஓர் அரைக்கால் சட்டை.

"கும்பிடு, தம்பி."

குழந்தை குட்டிக்கரணக் கோமாளியைக் கீழே வைத்து விட்டு ஒரு கும்பிடு போட்டான்.

காசிலிங்கம் குழந்தையைத் தூக்கிநிறுத்தினான். இரண்டு கால்களும், ஒடித்து, நார் அறுகாத வாழைத்தண்டுகளைப் போலத் தொங்கலாடின. அனந்தசாமி கண்ணால் பார்த்தார். தொட்டுப் பார்த்தார்.

"உட்கார வையுங்கள்."

துணிப் பொம்மையைப் போல் மீண்டும் நீட்டிய காலுடன் குழந்தையை உட்கார வைத்தான் காசிலிங்கம்.

"இடுப்புக்குக் கீழே இம்மி சுரணை கிடையாதுங்க..... எப்படி யிருந்த குழந்தை !" என்று அடித்தொண்டையில் பேசினான் அவன். அனந்தசாமி சட்டென்று நிமிர்ந்தார். அந்தக் குரலில் வந்த தழுதழுப்பு அவரை ஆட்டி விட்டது. நிமிர்ந்து அவன் முகத்தைப் பார்த்தார். அவன் கண்கள் தெப்பம் கட்டிக் கிடந்தன. அவன் மனைவியைப் பார்த்தார். அந்த முகம் அழ முடியாமல் உறைந்து கிடந்தது ; இருந்த கண்ணீரெல்லாம் செலவழிந்து விட்டாற்போல.

"மலையாள வைத்தியம், இங்கிலீஷ் வைத்தியம்—என்னெல்லாமோ பண்ணி விட்டார். பதினாயிரக் கணக்கில் பணத்தை இறைத்து விட்டார்" என்று முடிக்காமல் நிறுத்தினார் பாகவதர்.

குழந்தையின் கால்களைத் தொட்டு அமுக்கி இரண்டு நிமிஷங்கள் பரிசோதனை செய்தார் அனந்தசாமி. கிள்ளிப் பார்த்தார். உள்ளங்காலை நக முனையால் இலேசாகக் கீறிப் பார்த்தார். குழந்தை எந்த உணர்ச்சியையும் காண்பிக்கவில்லை.

"சரி!" என்று வெளியேவந்தார் அவர்.

"அப்பா, இன்னைக்கி என்னைக் கடற்கரைக்கு அள்சிட்டுப் போகணும்" என்று கட்டிலில் இருந்தபடியே, அறையை விட்டு வெளியேறும் தந்தையைப் பார்த்துக் கத்தினான் குழந்தை.

"கட்டாயமா அளச்சிட்டுப் போகச் சொல்றேன்."

"நீதான் அள்சிட்டுப் போகணும்."

"நான் எப்படிடா தம்பி அளச்சிட்டுப் போக முடியும்? நான் ஷூட்டிங்குக்குப் போகணுமே."



தி. ஜானகிராமன்

"அப்படின்னு நீ ஷூட் பண்ணிக்க" என்று வெறி பிடித்தாற்போலக் கத்தினான் பையன். பெரிய கத்தல். இதயத்தைத் துளைக்கிற கத்தல்.

காசிலிங்கம் சிரித்துக்கொண்டே மனைவியைப் பார்த்தான். மனைவி குற்றம் சாட்டுவதைப்போல் அவனைப் பார்த்தாள். இரண்டையும் அனந்தசாமி பார்த்தார். பாகவதர் காசிலிங்கத்தின் மயில்கண் வேட்டியைப் பார்த்தவாறு கவலையில் ஆழ்ந்து கிடந்தார்.

சிவபாக்கியம் பிள்ளையிடம் "இதோ வரேண்டா, கண்ணு!" என்று சொல்லிவிட்டு ஆவலாக மற்ற மூவரையும் பின் தொடர்ந்து 'ஹூம்' என்று குளிர் இயந்திரம் முனகிக் கொண்டிருந்த ஹாலுக்கு வந்தாள்.

"எத்தனை மாசமா இருக்கு இது?" என்றார் அனந்தசாமி.


"கிட்டத்தட்ட இரண்டு வருஷங்கள் ஆகப் போவுது."

"பதினாலு டாக்டருங்க பார்த்தாச்சுங்க" என்றாள் மனைவி.

"ஒவ்வொருத்தரும் நாற்பது அம்பது ஊசிபோட்டுக் குழந்தையைச் சல்லடைக் கண்ணாத் துளைச்சிட்டாங்க. ஆளாக்கு ஆளாக்கா மாத்திரை கொடுத்தாங்க. சாப்பிட்டுது."

"ஒவ்வொருத்தரும் தங்களாலான விஷத்தைக் கொடுத்துவிட்டுப் போயிருக்கிறார்கள்" என்று சிவபாக்கியம் கொண்டு காண்பித்த மருந்துப் பெட்டிகளைப் பார்த்துக்கொண்டே சொன்னாரவர். பின்பு கட்டை விரலாலும் ஆள்காட்டியாலும் புருவமையத்தை நெருக்கி, கண் மூடியவாறு சிறிதுநேரம் உட்கார்ந்திருந்தார். ஒரு நிமிஷம் கழித்து, "குணப்படுத்த முயலுகிறேன்" என்று கூறினார்.

"குணப்படுத்துங்க. எது வேணும்னாலும் செய்யத் தயார். எது வேணும்னாலும் கொடுக்கத் தயார்" என்று காசிலிங்கம் சொன்னதைக் கேட்டுப் புன்சிரிப்புடன் திரும்பிப் பார்த்தார். நிரந்தரமாக ஒரு மங்கல் அவன் கண் வெள்ளையில் படர்ந்து விட்டிருந்தது. நிரந்தர போதையின் நிறமாக அது தரிசனம் தந்தது. குடிபோதை மட்டுமில்லை. பண போதை, புகழ் போதை இரண்டும் வேறு சேர்ந்து அந்தக் கண்ணை, பார்த்தும் பாராத போதைக் கண்ணாக மாற்றி விட்டாற்போல் தோன்றியது அவருக்கு.



''அந்தப் பாக்யம் அப்படிச் சுலபமாகக் கிடைச்சுடாதே உங்களுக்கு'' என்றார் பாகவதர். ''எது வேணும்னாலும் நீங்க கொடுக்கத் தயாரா யிருக்கலாம். ஆனால் ஸ்வாமி சன்யாசியாக ஆயிட்டாரே!''

காசிலிங்கம் போதைக் கண்ணோடு இலேசாகச் சிரித்தான்.

''நான் இரண்டு மூன்று நாள் வட்டம் வந்து மருந்து கொடுக்கிறேன்'' என்றார் ஆனந்தசாமி.

''நீங்க எப்ப வேணுமானாலும் வரலாம், போகலாம். இது உங்க வீடுன்னு நெனச்சுக்குங்க. நான் உங்க பின்னைன்னு நெனைச்சுக்குங்க.''

அனந்தசாமியின் மலர்ந்த முகத்தில் ஒரு புன்னகை வந்தது. பையிலிருந்து மூட்டையை எடுத்து அவிழ்த்தார். இரண்டு பொட்டணங்களை எடுத்து, ''ராத்திரி பையன் தூங்கறதுக்கு முன்னால் ஒரு பொட்டணம் கொடுங்கள். காலையில் எழுந்தவுடன் ஒரு பொட்டணம் கொடுங்கள். நாளைக்கு வந்து பார்க்கிறேன்'' என்றார்.

''சரிங்க ஐயா, உங்களைப் பத்தி நிறையச் சொல்லி யிருக்காங்க. குழந்தைக்கு இனிமே நல்ல காலம் பிறந்திடிச்சு.''

''அந்த நம்பிக்கை யிருந்தால் போதும்'' என்றார் பாகவதர்.



சிவபாக்கியம் கொண்டு வந்த தக்காளிச் சாற்றை மூன்றுபேரும் சாப்பிட்டார்கள்.

''அப்ப....?'' என்று கூறி எழுந்தார் அனந்தசாமி.

''கிளம்பியாச்சுங்களா?'' என்று, அர்த்தத்தோடு பாகவதரைப் பார்த்தான் காசிலிங்கம். பாகவதர், ''அதெல்லாம் ஒன்றும் அவசியமில்லே'' என்ற பாவனையில் தலையை அசைத்தார். ஆகவே சட்டைப் பையிலிருந்த மணி பர்ஸை நோக்கிப் போகக் கிளம்பிய அவன் கை பழைய நிலைக்கு வந்து தொங்கிற்று.

"உங்களோடு தனியாகப் பேச வேண்டும் ஒரு நிமிஷம்" என்றார் அனந்தசாமி. பாகவதர் உடனே குறிப்பறிந்து, மாடிப் படியில் இறங்கிக் கீழே போனார்.

மீண்டும் சோபாவில் உட்கார்ந்த அனந்தசாமிக்கு எப்படிக் கேட்பது என்று புரியவில்லை. இந்த ரங்கன் உண்மையில் எப்பேர்ப்பட்டவன்? அவனும் குடிக்கிறானா? பெண்களைச் சுற்றி அலைவதுதான் அவன் வேலை, பொழுது போக்கு எல்லாமா? இதையெல்லாம் கேட்கத்தான் அவர் உட்கார்ந்து கொண்டார். ஆனால் நாக்கு மீண்டும் சுருட்டிக் கொண்டது.

அவர் ஒன்றும் பேசாமல் இருப்பதைப் பார்த்த காசிலிங்கம், தன் மனைவியிடம் ஜாடை காட்டவே அவளும் உள்ளே சென்று விட்டாள். இப்பொழுது யாருமில்லை. குளிர் இயந்திரம்தான் முனகிக் கொண்டிருந்தது. கடற் சாலையில் ஓடும் ஓரிரண்டு மோட்டார் ஹாரன்களைத் தவிர வேறு ஒன்றும் கேட்கவில்லை. குளிர் அறையின் மூட்டத்தில் அவை கூட இலேசாகத்தான் கேட்டன.

"குழந்தை விஷயமாத்தான் பேசணும்னு நெனச்சீங்களா?" என்று அவர் யோசிப்பதைப் பார்த்து ஆரம்பித்தான் காசிலிங்கம்.

"குழந்தை விஷயம் மட்டுமில்லே. வேறு சில சேதிகளும் கேட்க வேண்டும் என்று நினைத்தேன்."

"தாராளமாகக் கேளுங்க. தெரிஞ்சதைச் சொல்றேன்."

"குழந்தை ஏன் அப்படி ஆவேசம் வந்தாற்போலக் கத்தினான், நீ ஷூட் பண்ணிக்கொள் என்று?"

"நான் அடிக்கடி பக்கத்திலே இல்லையேன்னு பயலுக்கு ஆத்திரம் வருது. நான் என்ன செய்ய முடியும்? சொல்லுங்க. நான் எங்கேயாவது வெளியிலே போய், ஒரு கடை வாசல்லெ காரை நிறுத்தினா, அங்கே திமுதிமுன்னு கூட்டம் கூடிடுது. இறங்க விடமாட்டேங்கறாங்க. இப்ப நான் கடற்கரைக்கு அளச்சிட்டுப் போனா நான் கடலேயையா பார்க்கமுடியும்கிறீங்க? ஜன அலேதான் அதை வந்து மறைச்சுக்கிட்டுத் திமுதிமுன்னு மொசுக்குமே. இப்ப பாருங்க. நீங்களெல்லாம் கொடுத்து வச்சவங்கன்னுதான் சொல்லுவேன். நீங்க பாட்டுக்கு இஷ்டப்பட்ட இடத்துக்குப் போறீங்க, வறீங்க. யாரு, என்ன என்று கேட்கிறாங்களோ! நமக்கு அந்த மாதிரி இல்லியே. நீங்களும் மக்களுக்கு ஒரு வகையிலே சேவை செய்யறீங்க. நான் ஒரு வகையில் செய்யறேன். ஆனால் இரண்டுக்கும் எவ்வளவு வித்தியாசம்! நான் தலேகாட்ட முடியலே வெளியே. மேலே வந்து உளுவறாங்க. கச்சாத்துப் புத்தகத்தை எடுத்துக் 'கையெளுத்து கையெளுத்து'ன்னு மேலே உளுந்து புடுங்கறாங்க. சட்டை வேட்டி கூடக் கிளிஞ்சு போயிடுது. நான் எப்படி இவனே இட்டுக்கிட்டுப் போகிறது? கூட்டம் கிடக்கட்டும். நான் இவனே எடுத்திட்டுப் போகிறேன்னு வச்சுக்குங்க, இவன் காது இருக்கிற நிலே எல்லார் கண்ணிலேயும் படும். அதைப் பார்த்து எத்தினி பேரு சந்தோஷப்படுவாங்க, தெரியுமா? நல்லா வேணும் இந்தப் பயலுக்கு என்பான் ஒருத்தன். நல்ல வளியிலே சம்பாரிச்சாத்தானேய்யா காசு ஒட்டும்! இல்லாட்டி இப்படிக் கரைய வேண்டியதுதாம்பான் ஒருத்தன். நான் நல்லாயிருக்கிறது எத்தனி பேருக்குப் புடிச்சிருக்கும்னு நெனக்கிறீங்க? அட, அது போகட்டும். தெரியாமலே எல்லாத்தையும் கேட்டுக்கப் பளகிக்கிறோம்னு வைச்சுக்குங்க. நேரம் எங்கே இருக்கு? வேலே செஞ்சு ஊட்டுக்குள்ளார நுளஞ்சா, வாசல்லே தயாரா நூறு பேர் காத்திட்டிருக்கிறாங்க. பெரிய மனுசங்க, சின்ன மனுசங்க, சர்க்கார்காரவுங்க, தனியாளுங்க, வெளி நாட்டாருங்க, அனாதைங்க, பசியேப்பக்காரங்க, புளிச்சேப்பக்காரங்க, எல்லாரும்தான். நாம நம்ம ஆளாயில்லியே இப்ப! மக்களோடே ஆளால்ல ஆயிட்டோம்?"

அவன் நிறுத்தமாட்டான் போலிருந்தது. சரியான சமயம் வாய்த்ததென்று குறுக்கிட்டார் அனந்தசாமி.

"மக்களுக்குச் சேவை என்றால், குழந்தைக்குச் செய்கிறதும் மக்கள் சேவைதானே. நேரத்தோட நேரமா அதற்கும் கொஞ்சம் ஒதுக்கிக்கணும்!" என்றார்.

காசிலிங்கம் 'ஹாஹ்ஹாஹ்ஹா' என்று அடித் தொண்டையோடு சிரித்தான்.

"சாமி, பாயிண்ட்டிலே புடிச்சிட்டீங்களே என்னே....நல்லாச் சொன்னீங்க" என்று மேலும் சிரித்தான் காசிலிங்கம்.

"பொது மனிதர்கள் தங்கள் குடும்பமும் தங்களுக்காகத் தியாகம் செய்து கஷ்டப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். குடும்பத்தில் பற்றில்லாமல் பொது சேவை செய்கிறவர்கள், அதே பற்றற்ற தன்மையோடு குடும்பத்தையும் நன்றாகக் காப்பாற்றிவிட வேண்டும்" என்றார் அனந்தசாமி.

"நல்லாச் சொல்லுங்க" என்ற குரல் கேட்டது. கதவைத் தள்ளிக் கொண்டு வந்தாள் சிவபாக்கியம்.

"ஒட்டுக் கேட்காதே, சிவபாக்கியம்!" என்று புன்னகையுடன் உறுமினான் காசிலிங்கம்.


பண்டிட் டி.கோபாலாச்சார்லுவின்
ஸ்ரீவிஷம்ருதம்
ஆரோக்யத்துக்கும் பலத்துக்கும்
ஆயுர்வேதாஸ்ரமம் (பிரைவேட்) லிட்.
மதராஸ்-17


O-So Grape
ஓ-ஸோ கிரேப்
கடைசித் துளி வரை
ஆனந்தம் அளிக்கிறது!
டெக்ஸ்ட்ரோஸ் கலந்த மிக
உற்சாகமளிக்கும்
ஒரு அமெரிக்கத் தயாரிப்பு
பாட்டிலில் அடைத்து
விநியோகிப்பவர்கள்:
வின்ஸெண்ட்ஸ்
தென்னிந்தியாவிலேயே பானங்கள்
தயாரிப்பதில் புகழ் பெற்றவர்கள்.
வின்ஸெண்ட் & கோ.,
(பிரைவேட்) லிட்.,
திருச்சிராப்பள்ளி
மதராஸ்
சேலம்
கும்பகோணம்
காரைக்குடி
திருநெல்வேலி
மதுரை
கோயமுத்தூர்
கடலூர்.
அஸோஸியேட்டுகள்:
வின்ஸெண்ட் & கோ.,
திண்டுக்கல்.
EP


கோபால் பல்பொடி
பல் வலி, பல் அரணை, வாய் நாற்றம்
பல்லில் இரத்தம் வடிதல், முதலிய
பல் வியாதிகளை குணப்படுத்தி
பல்களுக்கு வெண்மையும்
பலத்தையும் தருகிறது.
GOPAL TOOTHPOWDER
கோபால் பல்பொடி
தயாரிப்பாளர்கள்: — எஸ்.பி.எஸ்.ஜெயம் அன் கோ,
25, கீழ நாப்பாளையத் தெரு...... மதுரை.
MINERVA

"இருபது முப்பதாயிரம்னு ஸ்டூடியோவிலே செட்டுப் போட்டு இவங்களுக்காகக் காத்திட்டிருக்கிற போதெல்லாம், வர முடியாதுன்னு சொல்லியனுப்பிச்சிருக்காங்க இவங்க. இன்னக்கி பாண்டிச்சேரிக்குப் போகணும்னு நப்பாசை வந்திடுச்சு. குழந்தையை ஏமாத்துறாங்க" என்றான் அவன் அழாக்குறையாக.

"நான் பாண்டிச்சேரி போகப்போறேன்னு நீ கண்டியா?"

"ஊகமாச் சொல்றேன்."

"பிரமாதமா ஊகிச்சிட்டியே ஹெஹ்ஹெஹ்ஹெ—பாருங்க. பொம்பிளைங்களுக்கு எப்படிக் குதர்க்கமெல்லாம் தோணுதுன்னு."

"இதோட பன்னண்டு பதிமூணு தடவையாச்சு. நானும் பார்த்துக்கிட்டு வரேன். உங்க ரங்கன் ப்ரதர் வந்து மத்தியானம் பேசிட்டிருந்தாங்கன்னு, இன்னக்கி கடலூருகிட்ட வெளிக்காட்சி ஷூட்டிங்னு சொல்லிட்டுக் கிளம்பிட நீங்களா இல்லையா... சொல்லுங்க."

அனந்தசாமி, காசிலிங்கம் இருவருக்குமே தூக்கிப் போட்டது போலிருந்தது.

"என்ன, என்ன, என்ன, என்ன?" என்று நாலு 'என்ன'க்களை வேகமாக அடுக்கிச் சிரித்தான் அவன். "கற்பனை எப்படி எப்படியெல்லாம் பறக்குது சிவபாக்கியத் தம்மாளுக்கு—ஹைஹ்ம்!" என்று ஆச்சரியப்படுவது போலப் பேசினான். உடனே "சரி நீ உள்ளே போ" என்று முகத்தைச் சட்டென்று கடுத்துக் கொண்டான்.

"நான் உள்ளே போறேன், ஆனா, நீங்க இன்னக்கி வீட்டிலேதான் இருக்கணும்—குழந்தை கேட்கிறதுக்கெல்லாம் எனக்குப் பதில் சொல்ல முடியாதே" என்று சொல்லிக்கொண்டே நகர்ந்தாள் சிவபாக்கியம். தன்னு கதவு மூடிக் கொண்டது.

அனந்தசாமிக்குத் தர்ம சங்கடமாயிருந்தது. திடீர் என்று குடும்பப் போரின் ஒரு களத்தில் தாம் வந்து நின்று பார்வையாளராக மாட்டிக் கொண்ட அசந்தர்ப்பத்தை நினைத்து அவர் உடல் முள்மேல் நிற்பது போல் குன்றித் தவித்தது. அதே சமயம் ரங்கனைப் பற்றிய இன்னொரு செய்தி கிடைத்த மகிழ்ச்சி வேறு.

எழுந்து கொள்வதா, வேண்டாமா என்று தவித்தார். உள்ளங்கையை விரலால் தடவியவாறு பார்த்துக் கொண்டேயிருந்தான் காசிலிங்கம். ஏதோ சொல்லப் போகிறான்போல் தோன்றியது. பத்து விநாடி ஊர்ந்தது.

"இதோ பாருங்க—எங்கெங்கேயோ அலையறோம். ராக்கண் முழிக்கிறோம். மாடு மாதிரி உழைக்கிறோம். உடம்பு அப்படியே களைஞ்சு போவுது. 'சித்தை நேரம் நம்மையே மறந்திட்டு இருக்கலாம்'னு இருக்கறது உண்டுதான். இல்லேன்னு சொல்லலே. அதை இப்ப சொல்லிக்காமிக்குது பாருங்க. புதிசா இருக்கறவங்களுக்கு எதிரே இதெல்லாம் சொல்லாது. ஆனா சாமியைப் பார்த்தவுடனே மனசிலே இருக்கிறதைச் சொல்லணும்னு தோணிட்டாப்பல இருக்கு அதுக்கு. எனக்கே சாமியைப் பார்த்தவுடனே, ரொம்ப நாள் பழகிட்டாப்பல இருக்கு. அதுக்கு வேற வருத்தம், நான் வீட்டிலேயே இருக்கிறதில்லேன்னு. அதான் இப்புறு வந்து சொல்லிச்சுன்னு நினைக்கிறேன்" என்று அரவணைப்பாகச் சமாதானம் சொன்னான் அவன்.

"என்னை அவ்வளவு நெருங்கினவனாக நினைக்கிறதிலே எனக்குப் பரம சந்தோஷம். நீங்கள் பிறகு போய் உங்கள் மனைவியைக் கோபித்துக் கொள்ளாதீர்கள்" என்றார் அனந்தசாமி.

"சேச்சே. ரொம்ப நல்லாயிருக்கே. அது என்ன மன நிலையிலே சொல்லியிருக்கும்னு எனக்குத் தெரியாதா? அதான் சொன்னேனே இப்ப!"

"அதுமாதிரியே ஒருநாள் இருந்து விடுங்களேன். இந்த ரங்கன்களோடு பேசிப் பொழுதைக் கழிக்கிறதைவிட, குழந்தையோடு உட்கார்ந்திருக்கலாமே ஒருநாள்."

"அதெல்லாம் இல்லீங்க. நான் இன்னிக்கி ரங்கனோட போறதாகவே இல்லே. ஏதோ அதுக்குத் தோணியிருக்கு, சொல்லியிருக்கு. எனக்கு இன்னக்கி சாயங்காலம் ஷூட்டிங் இருக்குங்க."

"ரங்கன் நன்றாகப் படித்த ஆளில்லை?"

"ரொம்பப் படிச்சிருக்காங்க. நல்ல அறிவாளி. நல்ல முறையிலே பழகுவாரு. நம்மோடு ஜல்சாவா இருக்கணும்னு எப்பவாவது நெனச்சுப்பாரு. வருவாரு அவருக்கு என்னாங்க கவலை? இன்னும் கலியாணம் ஆகலே."

"அப்படியா சொல்கிறீர்கள்? அவரைப் பார்த்தால் ரொம்பக் கவலைப்படுகிறது போலல்லவா இருந்தது?" என்று ஆர்வத்தைக் காட்டிக் கொள்ளாமல் சாதாரணக் குரலில் கேட்டார் அனந்தசாமி.

"கவலைப்படறாரு. படாமல் இல்லே. இதோ பாருங்க. எனக்கு இருபத்தஞ்சு வயசுதான். ஆனால் அனுபவம் குறைச்சல்னு சொல்ல முடியாது. ரண்டு இட்லிக்கு இல்லாமல் கஷ்டப்பட்டது உண்டுங்க. இவங்க எதைப் பார்த்திருக்கிறாங்க? பெத்தவங்க நல்ல சோறு போட்டு, நல்ல சட்டையை மாட்டி எஜுகேஷன் பண்ணியிருக்கிறாங்க. இன்னும் பன்

இந்தத் தொடர்கதையில் வரும் ஒரு காட்சியைத்தான் இவ்விதழ் அட்டைப் படமாகச் சித்திரித்திருக்கிறார் ஓவியர் விஜயா.

ளிக்கூடத்துப் பையன்களாகவேதான் இருக்க முடியுது இவங்களாலே. உலகம் வேறங்க. இந்தமாதிரி எத்தனையோ பேரைப் பார்க்கிறேன்னு வச்சுக்குங்க...சாமி காப்பி சாப்பிட்டுட்டுப் போகலாம்ல? சிவபாக்யம்!''

அனந்தசாமிக்கு மறுபடியும் திகைப்பாக இருந்தது. எந்தப் பேச்சை அவன் தொடர்ந்து பேச வேண்டும் என்று காத்திருந்தாரோ, அதை இரண்டாம் தடவையும் நல்ல இடத்தில் நிறுத்தி விடுகிறான். ரங்கனைப்பற்றி அதற்குமேல் அவன் பேச விரும்பவில்லை என்று நன்றாகத் தெரிந்தது.

''காப்பி வேண்டாம் இப்ப'' என்றார் அவர். அவன் காப்பி சாப்பிட அழைத்ததே, விடை தர, அல்லது பேச்சை மாற்றத் தான் என்றுணர முடிந்தது.

''பரவாயில்லிங்க. சாப்பிட்டுப் போகலாம்.''



தலைநகருக்கு விஜயம் செய்திருந்த உபன்யாச சக்கரவர்த்தி சேங்காலிபுரம் பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர், பாரத ஜனாதிபதி ராஜேந்திரப் பிரசாத் அவர்களை ஏப்ரல் 15-ந் தேதி மாலை சந்தித்து, நாற்பது நிமிடங்கள் அவருடன் இருந்து, மஹிஷாசுரமர்த்தினி ஸ்தோத்திரத்தைக் கனீரென்ற குரலில் பாடி, அதன் மகிமையை வடமொழியில் விளக்கினார். ஜனாதிபதி அவரது வித்வத்தைப் பாராட்டி மகிழ்ந்தார். ஜனாதிபதியோடு தீக்ஷிதர் அளவளாவும் காட்சியைப் படத்தில் காணலாம்.

''இல்லே. ரண்டு மூன்று பானம் ஆகி விட்டது. நான் வருகிறேன். மருந்தை ராத்திரி கொடுங்கள். காலமேயும் கொடுங்கள். நாளைக்கு வருகிறேன்'' என்று எழுந்து நின்றார் அவர்.

''கொடுக்கிறேன். காப்பி சாப்பிட்டுப் போகலாம் நீங்க. நிமிஷத்துக்குள்ளார வந்திடும்.''

''நாளைக்குச் சாப்பிட்டால் போறது.''

''சாமி இஷ்டம். மறுபடியும் சொல்றேன். சாமி எப்ப வேணும்னாலும் வரலாம், போகலாம். நான் இருக்கேனோ இல்லையோ? நாய்மாதிரி அலைஞ்சிட்டிருப்பேன். நான் இல்லையேன்னு யோசிக்க வாணாம், நீங்கபாட்டுக்கு வந்து போகலாம்'' என்று அவன் கூடவே வந்தான்.

''உங்கள் சம்சாரத்திடம் சொல்லி விடுங்கள். நான் வரட்டுமா ?''

''இதோ'' என்று நன்றாகக் கதவைத் திறந்து இரண்டு விநாடிக்குள் சிவபாக்கியத்துடன் திரும்பினான்.

''நான் வரேம்மா...நாளைக்கு வரேன்.''

''சரிங்க...இவங்களைச் சாயங்காலம் இங்கேயே இருக்கச் சொல்லியிருக்குல்ல....?''

ஒன்றுமே பதில் சொல்லாமல், வெறுமனே இருவரையும் பார்த்துச் சிரித்துவிட்டுக் கதவைத் திறந்து மாடிப்படி இறங்கினார் அனந்தசாமி.

வாசலுக்கு வந்து காரில் ஏறினதும், ''ஸ்வாமிக்கு எங்கே போகணும்.... இறக்கி விட்டு நான் போறேன். இல்லாட்டா, என்னோடு பழைய மாம்பலம் வந்தாலும் சரி'' என்றார் பாகவதர்.

''இல்லே. புது மாம்பலத்தில் என்னை இறக்கி விடுங்கள்.''

''சரி. ஐயாவைப் புது மாம்பலத்திலே இறக்கி விடப்பா.''

ரங்கனைப் பற்றி மேலே ஒன்றும் தெரிந்துகொள்ள முடியவில்லை என்ற ஏமாற்றம், அனந்தசாமியின் மனத்தில் ஓங்கி நின்றது. இவன் எதையோ மறைக்கிறானே என்று தவித்தார். காசிலிங்கம் குருமுட்டில் வழுக்கி ஓடினதை நினைத்துப் பார்க்கும்பொழுது, அவர்களுக்குள்ளே இருந்த தொடர்பில் ஏதோ தலைகால் தெரியாத ஒரு முடிச்சு விழுந்திருப்பது போல், ஒரு பைத்தியக்காரக் குழப்பம் நிலவுவது போல் தோன்றியது. அந்தக் குழப்பத்தை விடுவிக்க வழி தெரியாமல் அவர்கள் விழிப்பது போல் தோன்றிற்று. காசிலிங்கம் குலுங்கிச் சிரித்த புன்னகையை நினைத்தபோது, முடிச்சை அவிழ்ப்பது அவன் கையில் தான் இருக்கும் என்று ஒரு சந்தேகம். அனந்தசாமி குழம்பினார். 'ஓடியா போய்விடுவார்கள், பொறுத்துப் பார்ப்

போம்'' என்று நினைத்து எதிர்த்தோடும் சாலைப் பக்கம் கண்ணைத் திருப்பினார். கார் ஆள்வார்ப்பேட்டை நாற்சந்தியைக் கடந்து எல்டாம்ஸ் ரோட்டில் ஓடிக் கொண்டிருந்தது.

'' இன்னிக்குப் பெரிய அதிர்ஷ்ட நாள் ஸ்வாமி உங்களுக்கு'' என்றார் பாகவதர்.

''என்ன?''

''மாசக் கணக்கிலே பேட்டி கிடைக்காமல் காத்திண்டிருக்கா எத்தனையோ பேர். அந்த அருண்குமார் உங்களோடு இன்னிக்கு அரை மணி நேரத்துக்கு மேலே பேசியிருக்கான். இது தெரிஞ்சுதோ, உங்களை அஞ்சு ரூபாய் டிக்கட் கொடுத்துக்கூட வந்து பார்க்கத் தயாரா யிருப்பா எல்லாரும் இனிமே. உங்களுக்கே சினிமா சான்ஸ் கிடைச்சாலும் கிடைக்கும். சாமியார் வேஷம், புத்தர் வேஷம் இப்படி....''

''செய்தால் போச்சு. புத்தர் மாதிரி ஆக முடியாவிட்டாலும் வேஷமாவது போட்டுப் பார்த்து விடுகிறது'' என்று கூறிச் சிரித்தார் அனந்தசாமி.

'' ஐயாவுக்கு யாரைத்தான் ஸத்தாய்க்கிறதுன்னு கிடையாது '' என்றான் டிரைவர். ''என்னுங்க...? சாமிகிட்ட போய்.''

பாகவதர் அதற்குப் பதில் சொல்லவில்லை. விஷமப் புன்சிரிப்புடன் அனந்தசாமியைப் பார்த்தார்.

கார் மாம்பலம் எல்லைக்குள் வந்தவுடன், ''என்னை இங்கேயே இறக்கி விடப்பா. இப்படியே நடந்து போய்விடுகிறேன்'' என்றார் அனந்தசாமி.

வண்டி நின்றது. இறங்கினார் அவர்.

''ஏன் ஸ்வாமி, அங்கேயே கொண்டு விட்டுவிடச் சொல்கிறேனே.''

''பரவாயில்லை.''

''நான் என்னத்தைச் சொல்றது? வெயிலுக்கும் உங்களுக்கும் ராசி. ஒரு இரண்டு விநாடியாவது கால் பொரியணும் உங்களுக்கு. எந்தத் தெய்வத்துக்குப் பிரார்த்தனையோ...!''

கார் நகர்ந்து விரைந்ததும் இடதுகைப் பக்கம் திரும்பி நடந்தார் அனந்தசாமி.

அவர் மனம் இன்னும் அருண்குமாரிடம் தான் இருந்தது. ரங்கனைப் பற்றி எதையோ இவன் மறைக்கிறான் என்ற சந்தேகம் இன்னும் தெளியவில்லை.

வெள்ளை வெயிலாக அடித்துக் கொண்டிருந்தது. மணி இரண்டரை மூன்று இருக்குமோ என்னமோ. குடையுடன் அவர் நிழல் ஏறக்குறைய அவர் நீளத்துக்கே கிழக்கே சாய்ந்து விழுந்திருந்தது. மரம் மட்டைகள் ஸ்தம்பித்து விட்ட மாதிரி, ஒரு நிச்சலமான தேக்கம். இலைகள் வெதும்பித் துயில்வது போன்ற தேக்கம். பக்கத்தில் இருந்த ஒரு மா மரத்தைப் பார்த்தார் அவர். முகவாய் நீண்டு, புருவம் தூக்கி, உதடுகள் விரிந்து ஒரு முகம் வேதனையில் வாடுவதுபோல் தோன்றிற்று அவருக்கு.

மறு கணமே அவர் முகம் மலர்ந்தது. மரத்தின் இலை அடைவுகளுக்குள்ளிருந்து 'கூவ் கூவ்' என்று ஒரு குயில் கூவியது. சட்டென்று நின்று கவனித்தார் அவர். நாலு கூவல் கூவிவிட்டு அதுவும் நின்று விட்டது. இந்த உயிரைப் பிழியும் சூட்டுக்கும் தேக்கத்துக்கும் நடுவில் எப்படிக் கூவ வேண்டும் என்று தோன்றிற்று அதற்கு? அழுகையா அக் கூவல்? அல்லது என் விடுதலையை, சந்தோஷத்தை எதுவும் தடுக்க முடியாது என்று கூவும் விருப்பா?

சற்று நின்றார் அவர். குயில் கூவுவதாக இல்லை. பட்சியையாவது பார்ப்போம் என்று அண்ணாந்து கிளைகளுக்கிடையே பார்த்தார், தெரியவில்லை.

சைக்கிள் மணியோசை கேட்டது. 'பிரேக்' போட்டு டயர் தேயும் ஓசை. திரும்பிப் பார்த்தார்.

''இப்படி வழியில் நின்று கொண்டிருந்தால் எப்படிப் போகிறது?'' என்று கேட்டுக் கொண்டே சைக்கிளை விட்டு இறங்கினாள் சந்திரா. (தொடரும்)

தி இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க்

லிமிடெட்

★

எல்லா மக்களின் தேவைகளையும் பூர்த்தி செய்ய

ஒரு ரெக்கரிங்

டெபாஸிட் திட்டத்தை

ஆரம்பித்திருக்கிறார்கள்

★

குறைந்தபட்சம் ரூ. 5/–லிருந்து அதிகபட்சமாக, அதன் பெருக்குத் தொகை ரூ. 500/– வரையில் டெபாஸிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படும்

பிரதி மாதம் டெபாஸிட் செய்யும் தொகையான

	ரூ. 5	ரூ. 10	ரூ. 50	ரூ. 100

கீழ்க்கண்டபடி பெருகும்

34 மாதங்களில்	ரூ. 180	ரூ. 360	ரூ. 1,800	ரூ. 3,600
46 மாதங்களில்	ரூ. 250	ரூ. 500	ரூ. 2,500	ரூ. 5,000
85 மாதங்களில்	ரூ. 500	ரூ. 1,000	ரூ. 5,000	ரூ. 10,000

முழு விவரங்களுக்கு பாங்கின் எந்தக் கிளைக் காரியாலயங்களுக்காவது தயவு செய்து எழுதவும் :

எம். ஸிடி. முத்தையா
சேர்மன்

ஸி. பி. துரைக்கண்ணு
ஜெனரல் மானேஜர்

இக்கரைச் சீமையில் இருமாதங்கள்

27. அதிசய நிகழ்ச்சி!

லண்டன் நகரத்தின் மேயருக்கும் யார்க் நகர மேயருக்கும் சமீப காலம் வரை சில சிறப்பான பட்டங்களும் சலுகைகளும் இருந்து வந்தன. இந்தச் சிறப்புக்களை யெல்லாம் நண்பர் டாம்லின்ஸன் எனக்கு விளக்கிச் சொன்னார். இதிலிருந்து யார்க் நகரத்தின் மேயராக ஒருவர் பதவி பெறுவது என்றால் அது ஒரு பெரிய கௌரவம் என்பதைப் புரிந்து கொண்டேன்.

மேயர் அவர்களின் வீட்டுக்கு நாங்கள் சென்றபோது அங்கே நகர ஷெரீபும் வந்திருந்தார். 'சிற்றுண்டி' நடைபெற்றபிறகு, மேயரும் ஷெரீபும் அவர்களுடைய பதவிக்கு உரிய தங்கச் சங்கிலிகளையும் விருதுகளையும் எனக்குக் காண்பித்தார்கள். அவர்களுடைய நகராட்சியின் முறைமைகளையும் பழம் பெருஞ் சிறப்புக்களையும் ஷெரீப் என்னிடம் எடுத்துச் சொல்லிக் கொண்டு வரும்போதே மேயர் குறுக்கிட்டார். 'நகராட்சி முறை என்பது தென்னிந்தியர்களுக்கு நம்மைவிடப் பழமையான ஓர் ஆட்சி முறை என்பதை மறந்து விடாதீர்கள்!'' என்று ஷெரீபுக்கு ஞாபக மூட்டினார் மேயர்.

ஆம்; நம்முடைய நாட்டின் சரித்திரத்தை அவர் அவ்வளவு நன்றாகத் தெரிந்து வைத்திருந்தது எனக்கு ஆச்சரியமும் மகிழ்ச்சியும் தந்தது. அது மட்டுமில்லை. சேர சோழ பாண்டியர்களின் நகராட்சி முறைகளையும், கல்வெட்டுக்களையும் பற்றித் தெரிந்து கொள்வதில் அளவுகடந்த ஆவல் காட்டினார்கள். 'ஐம்பெர் ஆயம்,' 'குட ஓலை' ஆகிய நமது வரலாற்றுப் பழஞ் செய்திகளை ஒரே வியப்புடன் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

மேயர் அவர்களிடம் விடைபெறுவதற்கு முன்பு 'காலிங் ம்யூஸிய'த்தில் நான் பார்த்த ருத்திராக்ஷ மாலையைப் பற்றிக் கூறினேன். 'ருத்திராக்ஷம்' என்ற வார்த்தை அவர்களைத் திணற அடித்து விட்டது. ஆறு தரம் விட்டார்களா? அதைச் சரியாக உச்சரிப்பதற்காகத் திரும்பத் திரும்ப அந்த வார்த்தைக்கு உரிய ஆங்கில எழுத்துக்களை ஒவ்வொன்றாகச் சொல்லும்படி கேட்டார்கள்.

''ருத்திராக்ஷம் என்றும் அது ரத்தினக் கற்களில் ஒன்றோ?'' என்று கேட்டார் மேயர்.

''இல்லை. சைவர்களுக்கு ரத்தினத்தை விட மதிப்பானது. இது ஒரு மரத்தின் பழ வித்து!'' என்றேன். அவர்களுக்குத் தாங்க முடியாத ஆச்சரியம், இதன் பிறகு இந்த மாலையின் சிறப்பைப் பற்றிக் கூறும்படி கேட்டார்கள்.

சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் நம்முடைய சைவ மடங்களைப் பற்றியும், ஆறுமுக ருத்திராக்ஷம் பற்றியும் ஒரு சித்தாந்தச் சொற்பொழிவே நிகழ்த்தி விட்டேன்! நான் சொன்ன செய்திகளையெல்லாம் டாம்லின்ஸன் குறுக்கெழுத்திலே எழுதிக் கொண்டார். நான் வீட்டுக்குப் புறப்படுவதற்கு முன் அந்தக் குறிப்பு தட்டெழுத்திலே பொறிக்கப்பட்டு நான் சரி பார்ப்பதற்காக அங்கே வந்து விட்டது! காட்சிச்சாலையிலேயுள்ள கண்ணாடிப் பெட்டியில் ருத்திராக்ஷ மாலைக்கு அருகிலே ஒட்டிவைப்பதற்காகவே அந்தக் குறிப்பை எடுத்தெழுதினார்கள் என்பது பிறகுதான் எனக்குத் தெரியவந்தது! மேயருக்கு இதில் ஒரு பெரிய வியப்பு என்னவென்றால், தம்முடைய முன்னோர்களில் ஒருவரான பழைய மேயர் இந்த ருத்திராக்ஷ மாலையை உபயோகப்படுத்தினர் என்பதே!

மேயருடைய மெய்யன்போடு கூடிய உபசரிப்பும், ஷெரீபின் அன்புப் பேச்சும், 'யார்க் நியூஸ்' என்ற புகழ் பெற்ற பத்திரிகையாளர்களின் சந்திப்பும் எழுத்தாளர்களின் சர்ச்சையுமாக அன்றைய மாலை நிகழ்ச்சி இனியதோர் அநுபவமாக இருந்தது!

மறுநாட்காலை எட்டுமணிக்கெல்லாம் ஓர் ஆங்கிலேய நண்பர் என் வீட்டுக்கு வந்து விட்டார். வந்ததும் முதலாவது காரியமாக 'யார்க் நியூஸ்' பத்திரிகையின் அன்றைய இதழைக் கையிலே கொடுத்தார்! நான் சொன்ன செய்திகளும் படமும் பிரசுரமாகியிருந்த விதத்தில் அப்படியே இரண்டு அங்குலம் வளர்ந்து விட்டேன்!

''இன்று உங்களை இந்த நகரத்தின் முக்கிய இடங்களுக்கெல்லாம் அழைத்துச் செல்லும்படி டாம்லின்ஸன் என்னை நியமித்திருக்கிறார்! வெளி நாடுகளிலிருந்து எங்கள் நகரத்துக்கு வருகிற அன்னியர்களை ஊர் சுற்றிக் காட்டுவதற்காக இங்கே ஒரு தொண்டர் படை இருக்கிறது. அந்தப் படையைச்சேர்ந்த ஒருதொண்டன் நான்!'' என்றார் அவர். மிக்க அடக்கத்தோடு இவ்விதம் தம்மை அறிமுகம் செய்து கொண்ட அந்த அன்பர், அந்த நகரத்திலேயே முக்கியமான டாக்டர்களில் ஒருவர் என்றும், அந்தத் தொண்டர் படை எப்படிப்பட்டது, இவரை அனுப்பிய டாம்லின்ஸன் எப்படிப்பட்ட பேர்வழி என்பதை யெல்லாம் ஊகித்துக் கொள்ளுங்கள்!

பழைய கோட்டைச் சுவர்களின் இடிந்த மதில்கள், நகர வாசல்கள், புராதனமான

கட்டடங்கள், சரங்கள் என்று ஒவ்வொன்ருய்ப் பார்த்துக் கொண்டே வந்தோம். ஐந்நூறு அறுநூறு ஆண்டுகளுக்கு முன்பு 'புலால் அங்காடி'யாக இருந்த ஒரு குறுகிய தெருவை இன்னும் அதே பழைய தோற்றத்தோடு பாதுகாத்து வைத்திருக்கிருர்கள். ஒரு வீட்டு மாடியிலிருந்து கரங்களை நீட்டி எதிர் மாடியிலுள்ளவரோடு கைகுலுக்கலாம் போல் தோன்றுகிறது. அப்படிப்பட்ட ஒரு முடுக்கு அல்லது சந்து அது! அசுத்தம் ஏதும் இல்லாமல், விநோதக் காட்சியாக அதை இன்றளவும் காத்து வருகிருர்கள்.

யார்க் நகரத்தில் நான் பார்த்த முக்கிய இடங்களில் மிகவும் சிறப்பானது அவ்வூர்க் கோவில். கிறிஸ்து பெருமானுக்குக் கட்டப்பட்டுள்ள இந்தக் கோவிலின் விசாலமும் சிற்ப அழகும் மிக மிகப் பெருமை வாய்ந்தவை! கிழக்குச் சாளரம் என்ற கண்ணுடி ஜன்னல் ஒரு 'டென்னிஸ் கோர்ட்' அளவு பெரிதாயிருக்கிறது. இந்தச் சாளரத்தைச் செய்த கலைஞர் மூன்று ஆண்டுகள் இதே வேலையாக உழைத்தாராம். இதிலுள்ள வர்ண ஓவியங்கள் கிறிஸ்துவ புராணக் காட்சிகளை மிருந்த அழகோடு சித்திரிக்கின்றன. புராணத்திலும், கிறிஸ்துவ வேதத்திலும் ஆங்கில மக்களுக்கு அத்தனை ஈடுபாடு இருக்கிறது, இன்றைக்கும்!

யார்க் நகரத்துக்கே ஒரு தனியான அழகைத் தருகிற நதியில், ரம்யமான ஒரு படகில் ஏறி ஒரு சுற்றுச் சுற்றி விட்டுப் புகை வண்டி நிலையத்திலே மறுநாள் என்னுடைய பிரயாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலாம் என்று சென்றேன். நிலையத்து வாசலில் புடவையும் அதற்கு மேல் கம்பளிக் கோட்டும் அணிந்த ஒரு பெண்மணியும் அவரோடு அவருடைய கணவரும் நடந்து வந்து கொண்டிருந்தார்கள்! நான் தயங்கினேன். அவர்களும் தயங்கினுர்கள். ''வணக்கம்!'' என்று தனித் தமிழிலே ஓங்கி ஒரு போடு போட்டேன்! இருவரும் கைகூப்பிக் குவித்துக் கொண்டே அருகில் வந்து விட்டார்கள். தமிழும் தமிழ் முகமும் செய்த வேலை அது! அவர்களோடு அங்கே நின்று பேசியதில் அவர்கள் இருவரும் இலங்கைத் தமிழர்கள் என்றும், அவர் யார்க் நகரத்துப் பெரிய ஆஸ்பத்திரியில் டாக்டர் என்றும் அறிந்து மகிழ்ச்சி யடைந்தேன்.

''செவ் நாட்டார் தாங்கள். தாய்நாட்டைச் சேர்ந்த ஒரு டாக்டரும் இவ்வூரில் இருக்கிருர்! டாக்டர் சிவராமன் என்று பெயர். சந்திக்கிறீர்களா?'' என்று சொல்லி அவருடைய விலாசமும் கொடுத்தார் இலங்கை டாக்டர்.

விடுதிக்குத் திரும்பியதும் டாக்டர் சிவராமன் அவர்களுடைய வீட்டுக்குத் தொலைபேசி மூலம் பேசினேன். தமிழ் அம்மணி மறுமொழி பேசினுர்.

''யார்க் நியூஸ் பத்திரிகையில் இன்று காலை தான் செய்தி படித்தேன். கட்டாயம் வாருங்கள். அவர் ஆஸ்பத்திரியிலிருந்து இன்னும் சற்று நேரத்துக்கெல்லாம் வந்து விடுவார்! இன்றிரவு இங்கேயே சாப்பிடலாம்!'' என்று அன்போடு கூறினுர் அந்தச் சகோதரி.

டாக்டர் சிவராமன் செட்டி நாட்டைச் சேர்ந்த நண்பர். யார்க் நகரத்தின் பெரிய ஆஸ்பத்திரியில் டாக்டராகப் பணி புரிகிருர். அவருடைய ஆஸ்பத்திரிக்கும் சென்று பார்த்தேன். தமிழர் ஒருவர் அங்கே பதவி வகித்து நல்ல செல்வாக்கோடு விளங்குவது எனக்கு மிகவும் பெருமையாக இருந்தது!

மறுநாட் காலை யார்க்கிலிருந்து எடின்பரோ நோக்கிப் புறப்பட்டேன். ஸ்காட்லாந்தின் தலைநகரான எடின்பரோவில் ஆண்டு தோறும் நடைபெறுகிற 'அகில உலக நாடக இசைத் திருவிழா' அப்போது நடந்து கொண்டிருந்தது. உலகின் பல பாகங்களிலுமிருந்து இசைக் கலைஞர்களும், நாடகக் குழுவினரும் அங்கே ஒன்று கூடி மூன்று வாரம் 'ஜே ஜே' என்று நடத்துகிற திருவிழா அது! நம் திருவையாறு தியாகராஜ உற்சவம் போன்றது. எனவே இந்தத் திருவிழாவை யொட்டி ஒரு வாரம் அந்த ஊரில் தங்கத் திட்டமிட்டிருந்தேன்.

எடின்பரோவில் எனக்காக அமர்த்தப்பட்டிருந்த இடம், ஓர் ஆங்கிலேயரின் வீடு. 'க்ரே' என்று பெயர். அவருடைய விலாசத்தை இங்கிலாந்தின் செய்தித் துறையினர் ஏற்கெனவே எனக்கு அனுப்பி யிருந்தார்கள். ஆகையால் ரயில் வண்டி எடின்பரோவுக்குப் போய்ச் சேர்ந்ததும் நேரே அவருடைய வீட்டுக்குச் சென்றேன்.

நான் சென்ற சமயம் மிஸ்டர் க்ரே வீட்டில் இல்லை. அவருடைய மனைவி நான் யார்க் ரயில் வண்டியில் வந்து சேருவேன் என்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தார். எனக்காக ஒதுக்கப்பட்டிருந்த மாடி அறையைக் காண்பித்தார். அந்த விசாலமான வீட்டில் அப்போது வேறு யாருமில்லை. க்ரேயின் மனைவியான மூதாட்டியார், தம்முடைய மகள் மிஸ்டர் க்ரேயோடு ஆஸ்பத்திரிக்குச் சென்றிருந்ததாகச் சொன்னுர்.

''உங்களைச் சந்தித்தால் மிஸ்டர் க்ரேயும் என் மகளும் மிகவும் மகிழ்ச்சி அடைவார்கள். நீங்கள் வருவது பற்றி ஸ்காடிஷ் இன்பர்மேஷன் ஆபீஸிலிருந்து எங்களுக்குத் தகவல் கிடைத்த விநாடியிலிருந்து. உங்களையும்

சிறுகதைகளையும், நாவல்களையும் ஆர்வத்துடன் படிக்கும் பல்லாயிரக் கணக்கான வாசக நேயர்கள் அவற்றைப் படைத்த ஆசிரியர்கள் அந்தக் கதைகளை உருவாக்கியது எந்தச் சூழ்நிலையில் என்பதையும் அறிந்து கொள்ள விரும்புவது இயற்கை தானே!

'அடுத்த கல்கி இதழில் நாவல் பிறக்கிறது

என்ற தலைப்பின் கீழ் திரு அகிலன் எழுதிய கட்டுரை வெளியாகிறது. இதே தலைப்பின் கீழ் இன்னும் சில பிரபல கதாசிரியர்களின் கட்டுரைகளும் கல்கியில் தொடர்ந்து வெளியாகும்.



மேயர் தம்பதிகளும் ஷெரீப் தம்பதிகளும்

உங்கள் நாட்டையும் பற்றியே மிஸ்டர் க்ரே பேசிக் கொண்டிருந்தார் !'' என்றார் அந்த அம்மையார்.

அன்று இரவு நான் சாப்பிடச் சென்ற போது மிஸ்டர் க்ரே திரும்பவில்லை. காலையில் அவரைச் சந்தித்துக் கொள்ளலாம் என்று நினைத்து என்னுடைய அறைக்கு வந்து விட்டேன். அத்தகைய அதிர்ச்சியை நான் எதிர் பார்க்கவில்லை !

மறுநாட் காலை எழுந்து குளிப்பை யெல்லாம் முடித்துக் கொண்டு 'ப்ரேக்பஸ்ட்' மேஜைக்கு நான் சென்றபோது, எனக்காக எல்லா உணவு வகைகளும் சித்தமாக இருந்தன. நான் போய் உட்கார்ந்து பாரிட்ஜ் கலக்கிக் கொண்டிருக்கும்போது, க்ரே அம்மையார் காப்பிப் பாத்திரத்துடன் 'குட்மார்னிங்' சொல்லிக்கொண்டே வந்தார். மிஸ்டர் க்ரேயின் சந்தடியே அங்கு இல்லை.

''குட்மார்னிங் !'' என்று சொல்லிவிட்டுப் பாரிட்ஜ் சாப்பிட ஆரம்பித்தேன். அன்று காலையில் வழக்கத்துக்கு அதிகமாக வெயில் இருக்கவே, ''இன்று பொழுது நன்றாக விடிந்திருக்கிறதல்லவா !'' என்று அந்த அம்மையாரிடம் சொன்னேன். ''ஆமாம்'' என்று சொல்லிக்கொண்டே முகத்தில் புன்சிரிப்பை வரவழைக்க முயன்றார். அப்பொழுது அந்த முகத்தை உற்றுப் பார்த்தேன். ஆழமான துயரத்தைச் சாமர்த்தியமாக உறை போட்டு மறைக்கிறார் என்பதைப் புரிந்து கொண்டேன்.

''மன்னிக்க வேண்டும். மிஸ்டர் க்ரேயைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்கு இன்னும் ஏற்படவில்லையே !'' என்று இழுத்தேன்.

இதுவரையில் அடக்கிக் கொண்டிருந்த துயர வெள்ளம் அணைக்கட்டைப் பெயர்த்துக் கொண்டு பாய்ந்தது.

''மிஸ்டர் க்ரே இதய நோயினால் இன்று காலை மூன்று மணிக்கு ஆஸ்பத்திரியிலே இறந்து விட்டார் !''

அவ்வளவுதான்; மேஜையை விட்டு எழுந்து விட்டேன்.

''ஐயய்யோ ! எழுந்திருக்கிறீர்களே. நீங்கள் சாப்பிட்டு முடித்த பிறகு சொல்லியிருக்க வேண்டும் நான். என்ன முட்டாள்தனம் செய்து விட்டேன் !'' என்று கைகளை உதறினார் அந்த அம்மையார்.

''அம்மா ! என்னை மன்னிக்க வேண்டும். உங்களுக்கு என் தாயாரின் வயது ஆகிறது. உங்கள் துயரத்தைவிட அதை நீங்கள் இது வரை ஒரு விருந்தாளிக்காகத் தாங்கிக் கொண்டு, எனக்கு இந்த உணவையும் சமைத்து வைத்து எனக்காக இந்நேரம் வரை காத்துக் கொண்டிருந்தீர்களே, அதை நினைத்துப் பார்த்தாலே என்னால் தாங்க முடியவில்லை !''

இப்படி நான் சொல்லும்போது கையெடுத்துக் கும்பிட்டு விட்டேன். அவர் சொன்னார்:

''இன்று காலை அவர் இறந்தபோது என் மகள் அவரோடு இருந்தாள். பிற்பகலிலே உடம்பை இங்கே எடுத்துக் கொண்டு வருவார்கள். நீங்கள் வெளியே போய்விட்டு இரவு திரும்புவதற்குள் சடங்கெல்லாம் முடிந்துவிடும். நீங்கள் தங்குவதற்கு எவ்விதத் தொந்தரவும் இராது !'' என்று அதற்கு மேலும் தொடர்ந்தார் அந்த அம்மாள்.

எனக்கு ஒரு வினாடிகூட அங்கே இருப்புக் கொள்ளவில்லை.

''அம்மா ! உங்களுடைய பண்பாடும், விருந்துக்கு வந்த ஒரு அன்னிய தேசத்தவனை நீங்கள் நடத்துகிற முறையும் என் உள்ளத்தை உருக்குகின்றன. அதற்குத் தலைதாழ்ந்து வணங்குகிறேன். ஆனால் விருந்துக்கு வந்தவனிடமும் ஒரு இதயம் இருக்கிறது. என்னுடைய மனச்சாட்சி என்னை வேதனை செய்கிறது. நான் வேறு ஒரு விடுதிக்குச் சென்று தங்குவதற்கு என்னை அனுமதியுங்கள் !''

நீண்ட நேரம் தர்க்கம் செய்து சமாதானம் சொல்லி, அனுமதி பெற்றேன். அங்கிருந்து செய்தித் துறையினருக்குத் தொலைபேசியிலே சொல்லி வேறொரு விடுதி அமர்த்திக்கொண்டு, எடின்பரோ பால்கன் தெருவிலுள்ள 55ம் எண்ணுள்ள மிஸ்டர் க்ரேயின் வீட்டிலிருந்து புறப்பட்டேன்.

அந்தத் தெருவையும், அந்த வீட்டின் இலக்கத்தையும் அடிக்கடி என் மனத்துக்குள் ஞாபகப்படுத்திக் கொள்ளுகிறேன். ஏனென்றால் ஏதோ கதைகளில் காணும் நிகழ்ச்சியைப் போல் தோன்றுகிற இந்த அதிசய சம்பவத்தை நினைக்கும்போதெல்லாம், அந்த வீடும் அதன் தோற்றமுமே என் கண்முன் நின்று, இது கனவில்லை, மெய்யாகவே நடந்த நிகழ்ச்சி என்று உறுதிப்படுத்துகின்றன! (தொடரும்)





சங்கீத ஆசிரியர்கள் கல்லூரி

(இத்துறையில் உள்ள கல்லூரி இது ஒன்றே)

மியூஸிக் அகாடமி, சென்னை

115-, மோபரேஸ் ரோடு, ராயப்பேட்டை
சென்னை-14

★

சங்கீத கலாநிதி முடிகொண்டான் வெங்கடராம ஐயரிடமும் ஸ்ரீமதி டி. ஐயம்மாளிடமும் சுத்தமான கர்நாடக சங்கீதத்தைக் கற்றுக்கொள்ளும் அரிய வாய்ப்பு கிடைக்கிறது.

சங்கீத சாஸ்த்ர (தியரி) வகுப்பு, சங்கீத போதனாமுறை (பெடகாஜி) வகுப்பு இவைகளிரண்டும் விசேஷத் திறமை வாய்ந்த சங்கீத உபாத்தியாயர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

26-6-1961-ந் தேதி யன்று கல்லூரி திறக்கப்படுகிறது


விசேஷத் திறமையுடன் தேர்வுபெறும் மாணவர்களுக்கும், இளம் வித்வான்களுக்கும், மற்றும் சங்கீதத்தில் தேர்ச்சி பெற்று மேலும் தங்கள் கலையை அபிவிருத்தி செய்து கொள்ள விரும்புகிறவர்களுக்கும், விசேஷ வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இரண்டாவது வருஷத்தில் அரிய சாஹித்தியங்களும், ராகம், தானம், பல்லவி இவைகளில் விசேஷப் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன.


சம்பளச் சலுகையும் உபகாரச் சம்பள வசதியும் உண்டு

மாடல் பள்ளிக்கூடம்

சர்க்கார் லோயர், ஹையர் வகுப்பு சங்கீதப் பரீட்சைகளுக்கு மாணவர்கள் பயிற்சி அளிக்கப்படுகிறார்கள்.

பிராஸ்பக்டஸுக்கும் பாடதிட்டங்களுக்கும் கரெஸ்பாண்டெண்டுக்கு மனுச் செய்து கொள்ளவும்.


நரிவேட்டை
8
கதை: ஜெயந்தி
சித்திரம்: விநு
'கயிறு இறுகுகிறது' என்ற இரு வார்த்தைகளைப் படித்ததுமே ஷியாமா அலறித் துடிக்கிறாள். ஆபத்தான சூழ்நிலையில் அடியெடுத்து வைத்த தன் கணவனுக்கு ஏதோ தீங்கு நேர்ந்துவிட்டிருக்கிறது என்பதை வின்யி அனுப்பிய 'தந்தி' அவளுக்கு உணர்த்துகிறது...
ஐயோ! அவரை என்ன அபாயம் சூழ்ந்திருக்கிறதோ! இப்போது என்ன செய்வது?
ஏறக்குறைய இதே நேரத்தில், முன்பொருநாள் குமாரிடமிருந்து அவன் ஈடுபட்டிருக்கும் காரியம் பற்றிய ரகசியக் குறிப்புகளைக் கவர்ந்து கொண்ட ரவி, தனக்குக் கிடைத்த தந்தியை நிதானமாக மடித்துப் பைக்குள் பத்திரமாக வைக்கிறான்.
பல்தேவ் சிங்... அவருக்கு ஏதேனும் விவரம் தெரியாமலா இருக்கும்? போய்ப் பார்த்து விட்டு வருவோம்.
அன்றைக்கு அவன் மண்டையைப் பதம் பார்த்தபோதே தீர்த்துக் கட்டியிருக்க வேண்டும் நான். தொல்லை கொடுக்கிறானே!
தலைவர் லாஷா தந்தியில் குறிப்பிட்டிருக்கும் விலாசம் குமாருடையது. ஷியாமா அவன் மனைவியாகத்தான் இருக்கும். அவளைக் கண்காணிக்க வேண்டுமாமே!



BALDEV SINGH
MINISTRY OF DEFENCE
அவருக்கு என்ன நேர்ந்தது? உண்மையைச் சொல்ல மாட்டீர்களா?
இவ்வளவு கவலைப் படும் படியாக ஒன்றுமே யில்லை
போலீஸ் இவ்வளவு சீலாக அவனைக் கைது செய்தது வாஸ்தவம். விடுவிக்குமாறு உத்தரவு அனுப்பி விட்டேன்.
ஆனால் நான் எழுதிக் கொடுத்தபடி குமார் நடந்து கொள்ளாதது -தான் வியப்பா யிருக்கிறது.
அதில் அதிசய மொன்று மில்லை; அந்தக் குறிப்புக் கள் அவர் படிக்கு முன்னரே திருட்டுப் போய் விட்டன!
நிஜமாகவா?... அதை என்னிடம் கூற அவனுக்கு வெட்கமாய் இருந்திருக் -கும்!
குமாருடைய திறமையில் எனக்கு நம்பிக்கை உண்டு. உனக்குப் பயமே வேண்டாம்.
நான் போய் வருகிறேன்


நேற்று அவர் சிறையி லிருக்க நேர்ந்த தென்றால் நாளை இன்னும் என்னென்ன விபரீதங்கள் நிகழுமோ?
கணவனைப் பற்றிய சிந்தனை யில் ஆழ்ந்திருக் கும் ஷியாமா,கூரிய விழிகள் தன்னை ஆராய்வதை உணரவில்லை.
எனக்கு இங்கே இருப்புக் கொள்ளாது. நானும் காலிம் பாங் போக வேண்டியது தான்.
ஷியாமா ரயிலேறுவதைக் கண்ட ரவி அவள் காலிம் பாங் போவதை ஊகித்து, அங்கே 'வரவேற்புக்கு ஏற்பாடு செய் யுமாறு தந்தி கொடுக்கிறான்.
ஸிலிகுரிக்கு வந்து சேருகிறாள் ஷியாமா.
SILIGURI
சிலிகுரி
இங்கிருந்து காலிம் -பாங் சென்றடைவது எப்படி? யாரை யேனும் விசாரிப் போமா?
உங்களைத் தான்! காலிம் -பாங் போகி றீர்களா?
ஆமாம். அது எப்படி உங்களுக்குத் தெரிந்தது!
ப்ளீஸ்! நீங்கள் மனம் வைத்தால் எனக்குச் செலவு பாதியாகக் குறைந்து ரொம்ப சௌகரியமாய்ப் போகும்.
இவ்வளவு தூரம் நீங்கள் வற்புறுத்தும் போது எப்படி இல்லை என்பது?
இதுவும் தான். டாக்ஸி அமர்த் திக்கொண்டால் செலவைப் பகிர்ந்து கொள்ள லாமே என்ற
ரொம்ப ரொம்ப தாங்க்ஸ்! ....ஏம்பா டாக்ஸியா அது? காலிம் பாங் வருகிறாயா?
ஓ! ரெடி!
தொடரும்

மணிபல்லவம்

இரண்டாம் பருவம்

ஞானப்பசி



மனத்தின் எல்லையில் அறிவு பெருகப் பெருக அதுவரையில் அந்த இடத்தை நிறைத்துக் கொண்டிருந்த அறியாமையின் அளவு நன்றாகத் தெரிகிறது. இந்தக் கதையின் நாயகன் உடலின் வனப்பைப் போலவே மனத்தின் வனப்பையும் வளர்க்க விரும்பி அறிவுப் பசியோடு புறப்பட்டு அந்தப் பசி தீருமிடத்தை அடைந்த சில திங்களிலேயே அவனுடைய அக உணர்ச்சிகள் மலர்ந்து மணம் பரப்புகின்றன. வில்லினும், மல்லினும், போர் தொடுத்து வென்றும் வீர முரசறைந்தும் பெறும் புகழ்போல் சொல்லினும் சுவையினும் அடைகிற அறிவின்பம் அவனுக்கு மிக்கதாகத் தோன்றுகிறது. அறிவு என்பதே பேரின்பமாக இருக்கிறது 'நல்லதின் நலனும் தீயதின் தீமையும் உள்ளவாறு உணர்தல்' - என்று அறிவுக்கு வரையறை கூறியிருக்கிறார்கள் பெரியவர்கள். ஒவ்வொரு பொருளிலும் அதனதன் மெய்யைத் தெரிவதில் ஓரின்பம் இருக்கத்தான் செய்தது என்பதை இந்தக் கதையின் நாயகனான இளங்குமரன் பரிபூரணமாக உணர்கிறான். வீரமும், உடல் வலிமையும், கைகளால் முயன்று வெல்லும் வழியை அவனுக்குக் கற்பித்திருக்கின்றன. ஞானமோ, மனத்தினாலேயே உலகத்தை வெல்ல வழி கூறுகின்றது. வயிற்றுப் பசி போல் உண்டதன் பின்னும் தீர்தலின்றி உண்ண உண்ண மிகுவதாக இருக்கிறது ஞானப் பசி. 'இன்னும் உண்ண வேண்டும். இதுவரை உண்டது போதாது'- என்று மேலும் மேலும் மனத்தைத் தூண்டும் புதிய ஞானப் பசியை அவன் மிகவும் விரும்புகிறான். அந்தப் பசி ஏற்பட்டுக் கொண்டேயிருக்க வேண்டுமென்று தணியாத தாகத்துடன் பெரு வேட்கை பெறுகிறான்.

எனவே அவனுடைய பெரு வாழ்வில் இந்தப் பருவம் அறிவு மயமாக மலர்கிறது. வளர்கிறது. மணம் விரிக்கிறது. மனிதர்களுக்கு உடலின் செழுமையாலும், தோளின் மினுமினுப்பாலும், அவயவங்களின் அழகாலும் வருகின்ற கவர்ச்சி நிலையற்றது. ஆனால் அறிவினால் வருகிற அழகு நிலையானது. உயர்ந்தது. இணையற்றது. ஏற்கனவே பேரழகனான இளங்குமரன் இப்போது அறிவின் அழியா அழகையும் எய்தப் போகிறான். அந்த அறிவழகின் மலர்ச்சியில் அவன் முழுமையான மனிதனாக எழுச்சி பெற்று நிற்கும் நிலையை அடையப் போகிறான். அந்தப் புதிய எழுச்சியின் பயனாக அவன் வாழ்வில் மலரும் இரண்டாவது பருவம் இது :—

1. முதல் நாள் பாடம்

நிலத்தைப் போல் தன்னை அடைந்தவர்களைத் தாங்கும் பொறுமையும், மலையைப் போல் நிலை கலங்காமல் தன்னிடமிருந்து கொள்ளக் குறையாத வளமும், மலரைப் போல் மென்மையும், துலாக்கோலைப் போல் நடுநிலை பிறழாத தன்மையும் உடையவர்கள்தாம் பிறருக்குக் கற்பிக்கும் ஆசிரியராகத் தகுதியுடையவர்கள் என்று இளங்குமரன் பலமுறை பலரிடம் கேட்டிருக்கிறான். ஆனால் அத்தகைய முழுமையான ஆசிரியர் பெருந்தகை ஒருவரை நேற்றுவரை அவன் சந்திக்க நேர்ந்ததில்லை. நீலநாக மறவர் அவனுக்குப் போர்த் துறைக் கலைகளைக் கற்பித்த ஆசிரியரானாலும் அவரிடம் நாங்கூர் அடிகளிடமிருந்ததைப் போன்ற மென்மையையும், குழந்தையுள்ளத்தையும் அவன் கண்டதில்லை. நீலநாக மறவர் வீரத்தின் ஆசிரியராக அவன் கண்களுக்குத் தோன்றினாரேயன்றி ஞானாசிரியராகத் தோன்றியதில்லை. கல்லைப் போல் உடம்பும், மனமும், இறுகிப் போன மனித

நா. பார்த்தசாரதி

ரான அவரிடம் நாங்கூர் அடிகளின் மென்மையை எதிர்பார்க்க இயலாது என்பதையும் அவன் இன்று தன் மனத்துள் ஒப்பிட்டுப் பார்த்து உணர்ந்தான். அப்படிப்பட்ட இரும்பு மனிதரும் நாங்கூர் அடிகளின் மாணவர் தாம் என்பதை நினைக்கும்போது அவனுக்கு வியப்பாயிருந்தது.

அருட்செல்வ முனிவர் பெரிய ஞானியாயிருந்தாலும், அவரிடமே வளர்ந்ததனால் அவர் மேல் அவனுக்கு அன்பும், பாசமும்தான் உண்டாயின. அவரிடமிருந்து அன்புக்காகவும், பாசத்துக்காகவும் அவன் மனம் ஏங்கியதே அல்லாமல் ஞானத்துக்காக ஏங்கியதே இல்லை. ஞானத்துக்காக ஏங்குகிற மனப் பக்குவமும் அப்போது அவனுக்கு இல்லை. ஆயிரம் கதிர் விரிக்கும் ஞாயிற்றொளி அலைகடற் கோடியில் மேலெழுந்து விரிவதுபோல் நாங்கூர் அடிகளின் முகத்தில் கண்டு கனிந்த ஞான மலர்ச்சியை இதற்கு முன் தான் யாரிடமும் கண்டதாக நினைவே இல்லை இளங்குமரனுக்கு.

''அறியாமையையும், ஆணவத்தையும் தவிர என்னோடு வேறெவற்றையும் நான் கொண்டு வரவில்லையே, ஐயா!'' — என்று அந்தப் பேரறிஞருக்கு முன் தலை வணங்கி ஒடுங்கித் தளர்ந்து தான் கூறியபோது அவர் மறுமொழியாகக் கூறிய வார்த்தைகளை நினைத்து நினைத்து மகிழ்ந்தான் இளங்குமரன். நம்பிக்கையளிக்கும் அந்தச் சொற்கள் அவன் மனத்திலேயே தங்கி ஒலித்துக் கொண்டிருந்தன.

''உன்னையே எனக்குக் கொடு! என்னுடைய ஞானத்தைப் பயிர் செய்யும் விளைநிலமாக நீ இரு. அதுவே போதும்.'' இந்தச் சொற்களை எவ்வளவு குழைவாக, எவ்வளவு தணிவாக வெளியிட்டார் அந்த ஞானச் செல்வர்! அவர் வாய் திறந்து நிதானமாகப் பேசிய போது இந்தச் சொற்களில்தான் எத்தனை நிறைவுடைமை!

உலகத்தை யெல்லாம் விலை கொள்ளும் பெரிய ஞானமும், கள்ளங்கபடமில்லாத பச்சைக் குழந்தை போன்ற மனமும், பழுத்த சொற்களாகத் தேர்ந்து முத்துத் தொடுத்தது போல் கவிதை நயமுள்ள பேச்சும், - கண்டு இளங்குமரன் அவருக்கு ஆட்பட்டான். அவர் கேட்டுக் கொண்டாற்போல் தன்னையே அவன் அவருக்குக் கொடுத்து விட்டான். காவிரிப்பூம் பட்டினத்தில் நேற்றுவரை கழிந்த தன் நாட்கள், அந்த நாட்களோடு தொடர்புடைய நிகழ்ச்சிகள், நிகழ்ச்சிகளோடு தொடர்புடைய மனிதர்கள், - அவர்களுடைய உறவுகள் - எல்லாம் மெல்ல மெல்ல நீங்கி நாங்கூர் அடிகள் என்னும் ஞானக் குழந்தைக்கே விர வணக்கம் புரியும் மற்றொரு ஞானக் குழந்தையானான் அவன்.

இளங்குமரன் அங்கு வந்து சேர்ந்த மறுநாள் வைகறையின்போது விடிகையிலேயே அவனுடைய புது வாழ்வும் விடிந்தது. பறவைகள் துயில் விழித்துக் குரல் எழுப்பும் பனி புலராத நேரத்தில் நாங்கூர் அடிகள் அவனை எழுப்பினார். அவர் அருகில் வந்து நின்றதுமே அவன் விழித்து எழுந்து விட்டான்.

அந்தப் பெரியவர் அருகில் வந்து நின்றாலே விழிப்பும், எழுச்சியும் தானே உண்டாகும். அவர் நிற்கிற இடத்தில் பச்சைக் கர்ப்பூரமும், பவழமல்லிகையும் சேர்ந்து மணப்பதுபோல் ஒரு புனித மணம் நிலவும். மூப்பும், தளர்ச்சியும், ஒடுக்கியிருந்த அந்த உடம்புக்கே அத்தனை காந்தியானால் பல ஆண்டுகளுக்கு முன்பு அவர் எப்படி விளங்கியிருப்பார் என்று கற்பனை செய்தான் இளங்குமரன்.

விலகும் இருளும், புலரும் ஒளியும், சந்திக்கும் சிற்றஞ் சிறு காலை நேரத்தில் இளங்குமரனை எழுப்பி, ''என்னோடு வா!'' என்று அழைத்துக் கொண்டு மலர் வனங்களிடையே நடந்து புறப்பட்டார் அவர். இளங்குமரன் அடக்கமாகப் பின்தொடர்ந்து சென்றான். இரண்டு பக்கங்களிலும் வழியை ஒட்டி மலர்ப் பொழில்களாதலால் காற்றே மண மண்டிலமாகி வீசியது. அந்த நேரத்தில் அந்த வழியில் காற்று, பனி, ஆகாயம், பூமி எல்லாமே மணந்தன. பக்கத்துச் சிற்றோடைகளில் நீர் சிரித்தது. வாகை மரக்கிளைகளில் காகங்கள் கரைந்தன. கீழே நடந்து செல்லும் வழியில் மண் ஈர மணம் கமழ்ந்தது.

சிறிது தொலைவு அமைதியாக நடந்து சென்ற பின் ''உன்னுடைய மனமும் இப்போது இந்த நேரத்தைப்போல் இருக்கிறதல்லவா? இருளை அழித்துப் போக்கி விடுவதற்கும் ஒளியை வளர்த்துப் பெருக்கிக் கொள்வதற்கும்தானே தவிக்கிறாய் நீ'' என்று இளங்குமரனைக் கேட்டார் அடிகள். இளங்குமரன் சிரித்தவாறு பதில் கூறினான்:

''ஆனால் ஒளியின் அருகே ஒளியைப் பின்பற்றித்தான் நான் இப்போது நடந்து கொண்டிருக்கிறேன், ஐயா!''

''நல்லது, தம்பி! முதலில் நீ ஒன்று தெரிந்துகொள்ள வேண்டும். என்னிடமே என்னைப் பற்றி அடிக்கடி நீ புகழ்ந்து சொல்லக் கூடாது. உலகத்தில் நல்ல அறிவாளிகள் எல்லாரும் முதலில் தாங்கள் அத்தகைய பேரறி

வைச் சுமந்துகொண்டிருப்பவர்கள் என்ற நினைவே இன்றிக் குழந்தைகள் போல் இருக்கிறார்கள். பாமரர்கள் அவர்களிடமே அவர்களைப் புகழ்ந்து சொல்லிச் சொல்லி இழக்கக் கூடாத அந்தக் குழந்தைத் தன்மையை அவர்கள் இழக்கும்படி செய்துவிடுகிறார்கள். புகழைக் கேட்டுக் கேட்டு மனம் மூப்படைந்து விடுகிறது. அதனால் நான் அதை விரும்புவதே இல்லை. என்னுடைய ஞானத்துக்காக எல்லாரும் என்னைப் புகழ்ந்து கொண்டிருக்க வேண்டுமென்று நான் நினைப்பதேயில்லை. நான் வெறும் வாய்க்கால்தான். ஏரியிலிருந்து வாய்க்கால் வழியாகப் பாய்ந்து நிலத்துக்கு நீர் போவதில்லையா? ஞானம் எங்கோ நிரம்பியிருக்கிறது. அதைப் பாய்ச்ச வேண்டிய விளைநிலம் வேறெங்கோ கிடக்கிறது. அந்த விளைநிலத்தைத் தேடி அதில் போய்ப் பாயும்படி செய்யும் வாய்க்காலுக்குத் தனிப் பெருமை கொள்ள என்ன இருக்கிறது? எங்கிருந்தோ வருகிற நீர்! எங்கோ பாயப் போகிற நீர்! வாய்க்காலுக்கு ஏது பெருமை?''


ஞானப் பசியோடு வந்திருந்த இளங்குமரனுக்கு முதல் பாடம் கிடைத்து விட்டது. 'தன்னை வியந்துகொள்ளும் மனத்திலிருந்து குழந்தைத்தன்மை போய் விடும்! புகழுக்கு ஆட்பட்டுத் தவிக்கிற மனத்தில் இளமை குன்றி மூப்புச் சேரும்.'

இருவரும் மறுபடி சிறிது தொலைவு வரை மௌனமாக நடந்தனர். சிறிது சிறிதாக ஒளி பரவி விடிந்து கொண்டிருந்தது. தாங்கூர் அடிகள் மீண்டும் அவனை நோக்கிக் கூறினார்:-

''தம்பீ! உன்னையும், என்னையும் சுற்றி இத்தனையாயிரம் பூக்கள் மலர்ந்து மணம் பரப்புகின்றனவே; இவ்வளவு அழகையும், இவ்வளவு மணத்தையும் இவற்றுக்கு அளித்திருப்பவனை யார் புகழ முடியும்? எப்படிப் புகழ முடியும்?''

அவர் கூறுவனவற்றைக் கேட்கக் கேட்க இன்பமாக இருந்தது இளங்குமரனுக்கு. வழியில் ஒரு பெரிய தாமரைப் பொய்கை வந்தது.

''வா! நீராடி விட்டுச் செல்லலாம்'' என்று இளங்குமரனையும் உடனழைத்துக்கொண்டு நீராடச் சென்றார் தாங்கூர் அடிகள். படிகம்போல் தெளிந்த அந்தப் பொய்கையின் நீர்ப்பரப்பில் சிறுபிள்ளை போல் நீந்தி விளையாடிக் குளித்தார்



அடிகள் இருவரும் நீராடி முடிந்தபின் வந்தவழியே திரும்பி நடந்து சென்றார்கள். அடிகள் தம் பூம்பொழிலை அடைந்ததும், "இங்கே நீ கற்கவேண்டிய சுவடிகளை யெல்லாம் காண்பிக்கிறேன் வா. என்னுடைய பூம்பொழிலில் மலர்களுக்கு அடுத்தபடி அதிகமாக இருப்பவை ஏட்டுச் சுவடிகள் தாம். இங்குள்ள மலர்களுக்கு மணம் அதிகம். திருநாங்கூர் மண்ணுக்கே மணம் மிகுதி. இங்குள்ள ஏட்டுச் சுவடிகளிலோ, அறிவின் மணம் கொள்ளக் குன்றாமல் நிறைந்திருக்கிறது" என்று இளங்குமரனைத் தம்முடைய 'கிரந்த சாலைக்கு' (சுவடிகள் நிறைந்திருந்த சாலை) அழைத்துச் சென்றார் அவர். உடலில் ஈரம் புலராத ஆடையும், நீராடிய பவித்திரமுமாகக் கிரந்தசாலைக்குள் அவரோடு நுழைந்தான் அவன். வரிசை வரிசையாய்ப் பிரித்து அடுக்கியிருந்த ஆயிரக்கணக்கான சுவடிகளைப் பார்த்ததும், 'இவற்றை யெல்லாம் கற்று ஞானப்பசிக்கு நிறைவு காண என்னுடைய வாழ்நாள் போதுமா?' என்ற மலைப்பு அவன் உள்ளத்தில் உண்டாயிற்று.

"இவை எழுத்திலக்கணச் சுவடிகள், இவை சொல்லிலக்கணச் சுவடிகள், இவை பொருளிலக்கணச் சுவடிகள், இவை செய்யுளிலக்கணச் சுவடிகள். இதோ, இவையெல்லாம் தர்க்கம், இவையெல்லாம் சமய நூல்கள், இவை வைத்திய நூல்கள், இவை அலங்கார நூல்கள்" என்று ஒவ்வோர் அடுக்காகக் காண்பித்துச் சொல்லிக் கொண்டே போனார் அடிகள். அவர் முகத்தில் அவற்றை யெல்லாம் கற்பிக்கத் தகுதியான மாணவன் கிடைத்த உற்சாகம் தெரிந்தது.

அப்போது அந்தக் கிரந்த சாலையில் தூபப் புகை நறுமண அலைகளைப் பரவச் செய்து கொண்டிருந்தது. நெய்யிட்டு ஏற்றிய தீபங்களின் ஒளி அங்கங்கே பூத்திருந்தது. தணிவாகக் கூரை வேய்ந்திருந்த சாலையாதலால் எப்போதும் தீப ஒளி தேவையாயிருந்தது போலும்.

"இவ்வளவு சுவடிகளுக்கும் மீறி அறிவைப் பற்றிய சிந்தனைத் தலைமுறை இன்னும் வளர்ந்துகொண்டிருக்கிறது. தம்பி! 'இவ்வளவையும் எந்தக் காலத்தில் கற்று முடிப்பது?' என்று நீ மலைப்பு அடையாதே. தைரியத்தை அடைவதற்காகத்தான் கல்வி 'துணிந்து கற்க வேண்டும். கற்றுத் துணிய வேண்டும்."

"அந்தத் துணிவைத் தாங்கள்தான் எளியேனுக்குத் தந்தருள வேண்டும்." அவருடைய கால்களில் விழுந்து வணங்கினான் இளங்குமரன். 'இந்தப் பாதங்களை விட்டுவிடாதே! இவற்றை நன்றாகப் பற்றிக்கொள்' என்று போகும்போது நீலநாக மறவர் கூறிய சொற்களை இப்போதும் நினைத்துக்கொண்டான் அவன். அவனைத் தம் கைகளாலேயே எழுப்பி நிறுத்தி, "இந்தா! இதைப் பெற்றுக் கொள்" என்று முதற் சுவடியை அளித்தார் அடிகள்.

2 சுரமஞ்சரியின் அச்சம்

சீனத்துக் கப்பலிலிருந்து இறங்கி நடந்தபோது, 'உங்கள் கருணை எனக்குத் தேவையில்லை. என் மாளிகைக்குப் போய்ச் சேரும் வழி எனக்குத் தெரியும்' என்று சீற்றத்தோடு அலட்சியமாக இளங்குமரனிடம் பேசியிருந்தாலும் சுரமஞ்சரியின் மனம் அதன் பின்னரும் அவனுக்காகவே ஏங்கியது. அவனுக்காகவே தவித்தது. அதை அவளால் தவிர்க்க முடியவில்லை.

அவள் அவனைப் பிரிந்து சிறிது தொலைவு செல்வதற்குள்ளேயே அந்தப் பக்கத்தில் துறைமுக வாயிலின் அருகே கூடி நின்றுகொண்டிருந்த அவளுடைய தந்தையாரின் கப்பல் ஊழியர்கள் ஓடி வந்து சூழ்ந்துகொண்டார்கள். அவர்கள் முகங்களில் ஆர்வ வெள்ளம்.

"எல்லார் வயிற்றிலும் பாலை வார்த்தீர்கள், அம்மா! நேற்று நீராட்டு விழாவில் நீங்கள் காணுமற் போனதிலிருந்து நமது மாளிகையே கவலையில் ஆழ்ந்திருக்கிறது. நீங்கள் காணுமற் போன செய்தி தெரிந்த உடனே நேற்று மாலை கழார்ப் பெருந்துறையிலிருந்து காவிரியின் சங்கு முகம் வரை தேடிப் பார்ப்பதற்காகப் பல படகுகளை அனுப்பினார் உங்கள் தந்தையார். வெகுநேரம் தேடிவிட்டுப் படகுகள் திரும்பி விட்டன. உங்களைத் தேடுவதற்காக நம் ஆட்கள் எல்லாப் பகுதிகளுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். உங்கள் வரவை இப்போதே ஓடிப் போய் மாளிகையில் தெரிவிக்கிறோம். தெரிவித்துவிட்டு உங்களை அழைத்துச் செல்வதற்குத் தேரும் கொண்டு வருகிறோம். அதுவரை இதோ இங்குள்ள நமது பண்டசாலையில் அமர்ந்திருங்கள்" என்று கூறிச் சுரமஞ்சரியை அழைத்துப் போய்த் துறைமுக வாயிலின் பக்கத்திலிருந்த அவள் தந்தையாரின் பண்டசாலையில் அமரச் செய்து

விட்டு மாளிகைக்கு விரைந்தார்கள் அந்த ஊழியர்கள்

அப்போது, 'என்னை அழைத்துச் செல்வதற்காக எனது மாளிகையிலிருந்து வரப்போகும் தேரிலேயே இளங்குமரனையும் ஏற்றிக் கொண்டு போய் அவர் தங்கியிருக்கும் ஆலமுற்றத்துப் படைக்கலச் சாலையில் விட்டுச் சென்றால் என்ன?' என்று நினைத்தாள் கரமஞ்சரி. உடனே எழுந்திருந்து போய், 'அவர் நிற்கிறாரா' என்று துறைமுக வாயிலிலும் பார்த்தாள் அங்கே 'அவரை'க் காணவில்லை. 'அவர் நடந்து புறப்பட்டிருப்பார்' என்று நினைத்துக் கொண்டு ஏமாற்றத்தோடு திரும்பிப் பண்டசாலைக்குள் மீண்டும் வந்து அமர்ந்தாள். அவள் கண்கள் எங்கும் அவனைத் தேடின. பண்டசாலையில் வந்து அமர்ந்த பின்பும் எதிர்ப்புறம் தெரியும் துறைமுக வீதியையே கவனித்துக் கொண்டிருந்தாள் அவள்.

'பெண்ணே! என்னுடைய கருணையை நீ அடைய முடியும். ஆனால் அன்பை அடைய முடியாது' என்று அவன் திருப்பித் திருப்பி இரண்டு மூன்று முறை தன்னிடம் வற்புறுத்திக் கூறிய அந்தச் சொற்கள் இன்னும் அவள் செவிகளில் ஒலித்துக் கொண்டுதான் இருந்தன. கப்பலிலிருந்து இறங்கியதும் அவன்தான் அவளிடம் கோபித்துக் கொண்டு விலகி வந்தானே தவிர, அவள் மனம் அவனிடமிருந்து விலகி வரவில்லை. அவள் மனத்தின் நினைவுகளும் கனவுகளும் அவனைப் பற்றியே இருந்தன. அவள் சிந்தனைகளுக்கு இளங்குமரனே இடமாகவும், எல்லையாகவும் இருந்தான். பண்டசாலையின் முன்புறம் இரண்டு அலங்காரத் தேர்கள் வந்து நின்றன தேர்கள் வந்து நின்ற ஒலியில் சிந்தனை கலைந்து நிமிர்ந்து பார்த்தாள் கரமஞ்சரி.

ஒரு தேரிலிருந்து நகைவேழம்பரும் அவள் தந்தையாரும் இறங்கினார்கள். மற்றொரு தேரிலிருந்து அவளுடைய தாயார், சகோதரி வானவல்லி, வசந்தமாலை ஆகியோர் இறங்கினார்கள்.

"பாவிப் பெண்ணே! இப்படி எங்களையெல்லாம் கதிகலங்கச் செய்யலாமா?" என்று நெஞ்சம் நெகிழ்ந்து கதறியவாறே ஆவலோடு வந்து தழுவிக் கொண்டாள் கரமஞ்சரியின் அன்னை. "என்ன நடந்தது? எப்படித் தப்பிப் பிழைத்தாய்? யார் காப்பாற்றினார்கள்?" என்று எல்லாருமே தூண்டிக் கேட்டார்கள்.

'யாரோ ஒரு படகோட்டியின் உதவியால் கப்பல் கரப்புத் நிலை அடைந்ததாகவும், காலையில் அங்கிருந்து ஏதோ ஒரு கப்பலில் இடம் பெற்றுத் துறைமுகத்தை அடைந்ததாகவும்' உண்மையைச் சற்றே மாற்றிக் கூறினாள் கரமஞ்சரி. தந்தையாரையும், நகைவேழம்பரையும் அருகில் வைத்துக் கொண்டு, இளங்குமரன் தன்னைக் காப்பாற்றியதைச் சொல்வதற்கு அவள் விரும்பவில்லை. அந்தச் சமயத்தில் அவள் கூறியதில் யாரும் அவநம்பிக்கை கொள்ளவும் இல்லை

"எப்படியானாலும் மறுபிறப்புப் பிறந்ததுபோல் நீ உயிர் பிழைத்து வந்தாயே, அதுவே போதும் காவிரித் தாய் உன்னைக் காப்பாற்றியிருக்கிறாள். அந்தப் படகோட்டியும், கப்பல் தலைவனும் யாரென்று சொன்னால் உனக்கு உதவியதற்காக அவர்களுக்கு வேண்டிய பரிசுகளை வாரி வழங்கச் சித்தமாயிருக்கிறேன், மகளே!" என்றார் தந்தையார்.

'சமயம் வாய்க்கும்போது அவர்களை உங்களுக்குக் காண்பிக்கிறேன், அப்பா!" என்று பதில் கூறினாள் கரமஞ்சரி.

'சந்தர்ப்பம் எப்படி நேர்கிறது, பார்த்தாயா? பெரிய பெரிய கப்பல்களுக்கு உரிமையாளனான என்னுடைய மகள் எவனுடைய கப்பலிலோ இடத்துக்குப் பிச்சை யெடுக்க வேண்டியதாய் நேர்ந்



திருக்கிறதே?'' என்று தம் மனைவியிடம் கூறினார் எட்டிப் பட்டம் பெற்ற பெரு நிதிச் செல்வர். அவருக்கு எப்போதுமே தம்முடைய பெருமைதான் நினைப்பு.

சிறிது நேரத்தில் பண்டசாலையி லிருந்து எல்லாரும் மாளிகைக்குப் புறப் பட்டார்கள். தந்தையாரோடு தேரில் ஏறிக் கொண்டிருந்த நகைவேழம்பர் தேர் புறப்படுவதற்குச் சில விநாடி களுக்கு முன்பு கீழே இறங்கி விட்டதைச் சுரமஞ்சரி மற் றொரு தேரிலிருந்து பார்த்தாள்.

''ஏன் இறங்கி விட்டீர் கள்? நீங்கள் மாளிகைக்கு வரவில்லையா ?'' என்று தந்தையார் கேட்டதற்கு, '' நான் துறைமுகத்துக் குள் சென்று வரவேண் டும். அங்கே போய் இன்று காலையில் துறை சேர்ந்த கப்பல்கள் எவை எவை என்று அறிந்து, அவற்றில் உங்கள் தவப் புதல்வியாருக்கு உதவி செய்த கப்பல் எது என் றும் தெரிந்து கொண்டு அப்புறம் மாளிகைக்கு வருகிறேன். வரும்போது சுரமஞ்சரிதேவிக்கு உதவி செய்த கப்பலின் தலை வனையும் கண்டுபிடித்து அழைத்து வருகிறேன். இன்றே அவ னுக்கு நம் நன்றியைத் தெரிவித்துப் பரிசும் அளித்து விடலாம்'' என்று நகை வேழம்பர் கூறிச் செல்வதைக் கேட்டுத் திகைத்தாள் சுரமஞ்சரி.

'ஐயா, நகைவேழம்பரே! அதற்கு இப் போது அவசரம் ஒன்றுமில்லை' என்று சொல்லி அவரைத் தடுக்கவும் அந்தச் சமயத்தில் அவளுக்குத் துணிவில்லை.



அதற்குள் தேர்களும் மாளிகைக்குப் புறப்பட்டு விட்டன. நகைவேழம்பர் துறைமுகத்துக்குள் நுழைவதையும் விரைந்து செல்லும் தேரிலிருந்தே அவள் பார்த்தாள். கலக்கம் கொண்டாள். 'சீனத்துக் கப்பல் தலைவனை நகைவேழம்பர் சந்தித்து மாளிகைக்கு அழைத்து வந்து விட்டால், தன்னோடு ஓர் இளைஞரும் கப்பலில் வந்ததை அவர் கூறுவார். அதையே அவர் வேறு விதமாகப் புரிந்து கொண்டிருக்கும் பட்சத்தில், 'உங்கள் பெண்ணும் உங்கள் பெண்ணின் காதலர் போல் தோன்றிய ஓர் இளைஞரும் கப்பல் கரப்புத் தீவிலிருந்து இன்று காலை என் கப்பலில் இடம் பெற்று வந்தார்கள்' என்று தந்தையிடம் கூறினாலும் கூறுவாரே! அப்படிக் கூறிவிட்டால் நான் என்ன செய்வது?' என்று எண்ணி அச்சம் கொண்டாள் சுரமஞ்சரி.

(தொடரும்)

வட்டமேஜை

பிரச்னைக்குக் காரணம்

கல்கி இதழில் ஓர் அம்மையார் வட்ட மேஜைக்கு ஒரு கடிதம் எழுதி யிருந்ததைப் பார்த்தேன். புதிய காலனியில் தண்ணீர்ப் பஞ்சம் என்று எழுதியிருக்கிறார்கள். இதுவோ கோடைகாலம். அதிலும் நெய்வேலியில் பூமியி லுள்ள தண்ணீரை வெளியேற்றினால் தான் கரி எடுக்க முடியும் என்ற நிலை வேறு. ஆகையால் தண்ணீர் போதிய அளவு கிடைக்கவில்லை. அதற்கு நிர்வாகத்தார் என்ன செய்வார்கள்? அவர்களும் எவ்வளவோ முயற்சிகள் செய்து வருகின்றனர். இயற்கையிலேயே தண்ணீர் சிறிதுதான் வரும். அப்படியும் சிலர் தண்ணீர் லைனை உடைத்து ரப்பர்க் குழாயை மாட்டித் தோட்டத்துக்குப் பாய்ச்சுகின்றனர். இவ்வாறு செய்தால் எவ்வாறு எல்லோருக்கும் போதிய அளவு தண்ணீர் கிடைக்கும்?

மற்றொரு பிரச்னை பால். இங்கேயே பால் பண்ணைவைத்துள்ளனர். அதுபோதாமல் தினந்தோறும் புவனகிரி பால் வழங்கும் யூனியனில் இருந்து லாரியில் பால் எடுத்து வந்து விநியோகிக்கிறார்கள். கரி எடுப்பதற்கு முன்னேயே இந்தச் சில்லறைப் பிரச்னைகள் கிளம்புகின்றனவே? இன்னும் கரி எடுத்தால் எவ்வளவு பிரச்னைகள் நமக்குக் காத்து நிற்கின்றனவோ!

நெய்வேலி
18-5-61

ரா. கோவிந்தசாமி

முதல் மலர்!

திரு வி. சுவாமிநாதனின், ''முதல் மலர்'' என்ற கதையை மே 21-ந் தேதி இதழில் படித்தேன். இதுவரை படித்துள்ள கதைகளில் சில, நினைவுக்கு வந்தபோதிலும், பொதுவில் மிக நன்றாக இருந்தது. உணர்ச்சிக் குவியல்களின் பெருவரை என்றுதான் சொல்ல வேண்டும். அப்பப்பா! படிக்கும் பொழுதே, மெய் சிலிர்க்கிறது. அன்பின் குணமே, இப்படி மெய் சிலிர்க்கச் செய்வதுதானோ?

அந்தஸ்தினாலும், ஆணவத்தினாலும், அழிக்க முடியாததும், புனிதமான தெய்வீக உறவை ஏற்படுத்தக் கூடியதுமான அவ்வன்பென்னும் அருமையைத் தன் உள்ளத்தில், வளர்த்துக் கொண்டு, அதற்காகத் தன் வாழ்வின் இன்பத்தையே துறந்து விட்ட பேதைப் பெண் கன்யாவுக்காக, என்னை அறியாமல் இரண்டு சொட்டுக் கண்ணீரை உதிர்த்தன என் கண்கள், உணர்ச்சி வசப்பட்டதின் விளைவாக. அன்பர் திரு வி. சுவாமிநாதன் அவர்களுக்கு என் இதயங்கலந்த பாராட்டுதல்கள்.

செங்கற்பட்டு
19-5-61

வி. இராமமூர்த்தி

அன்பே ஆரமுதே

திரு தி. ஜா. அவர்கள் எழுதும் 'அன்பே ஆரமுதே' பார்த்து மனம் நிறைவு கொண்டேன். அத்தியாயம் ஆறே வெளிவந்துள்ள தென்றாலும், முதல் ஆரம்பமே 'கலாவதி' யின் 'ஜீவ களை' கட்டிச் சிந்தனைகளுக்கும், கற்பனைகளுக்கும் இடம் வைத்து அமிர்தப் பிரவாகமாக வருகிறது. மேல் நாட்டிலா யிருந்தால் ''நோபல் பரிசு'' பெற்று விடும்.

என் போன்றவன் அவர்களுக்கு மானசீகமாகக் கனகாபிஷேகம் செய்யவே இயலும்.

ஹைதராபாத்
17-..-61

நெ. சிவசங்கரன்


சதுரங்கம்

கல்கி 21-5-61 இதழில் ''சதுரங்கம்'' நாடக விமரிசனம் கண்டேன். நன்றாகத்தான் எழுதப்பட்டிருக்கிறது.

ஆனால், வர்ணத் துணிகளைத் தொங்க விட்டு, இதுவும் ஒரு வீடு என்று காட்டும் ஒரு கலையமைப்பு நிர்வாகியைப் பற்றிப் பக்கம் பக்கமாக எழுதும் நிறம் பெற்ற திரு காந்தன் அவர்களுக்கு, ஓர் இளைஞர், தம் முழுத் திறமையையெல்லாம் காட்டி, ''சதுரங்கம்'' நாடகத்துக்கு அரங்க அமைப்பு செய்து, கலை நுணுக்கத்தோடு, ஒலி ஒளி இவைகளையெல்லாம் பிரமாதமான முறையில் செய்து, 'நாம் ஒரு தமிழ் நாடகம் பார்க்கிறோம்' என்ற நினைவே எழ விடாமல், நாடகத் துறையில் மிக மிக முன்னேற்றம் அடைந்துள்ள வெளி நாட்டு நாடகத்தைப் பார்ப்பது போன்ற உணர்ச்சியை ஏற்படுத்தியிருப்பது போற்றத் தக்க விஷயமாகப் படவில்லை போலிருக்கிறது. நாடகங்களின் முதல் எதிரி 'பத்திரிகை' என்று ஓர் ஆங்கில ஆசிரியர் சொல்லியிருப்பது எவ்வளவு உண்மை என்பதை இந்த விமரிசனம் தெளிவுபடுத்துகிறது.

சென்னை
18-5-61

எஸ். தேசிகன்



பத்துலட்சம் டன் எஃகு தயாரிக்கும் உருக்காலை பூர்த்தியாகிவிட்டது.

துர்க்காபூரில் கூட்டுப்பணி

துர்க்காபூர் உருக்காலையில் உருக்கும் பகுதியில் திறந்த வாது உலைகள் எட்டும், பூர்த்தியாக்க ஒப்பந்தம் செய்துகொண்ட தேதிக்கு வெகு முன்பாகவே, உற்பத்தி செய்யத் தயாராகிவிட்டன.

அவைகளில் ஏழு உலைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வடிப்பிற்கும் 200 டன் எஃகு தயாரிக்கக்கூடியவை. எட்டாவது உலை ஒவ்வொரு வடிப்பிலும், இந்திய ரயில்வேக்களுக்கு சேர்க்கைச் சக்கரங்கள் வார்ப்பதற்கான 100 டன் விசேஷ எஃகு தயாரிக்கும்.

இஸ்கான்

இந்தியன் ஸ்டீல் ஒர்க்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்


தி வெல்மென் ஸ்மித் ஓவன் என்ஜினீரிங் கார்ப்பரேஷன் லிமிடெட், டேவி & யுனைடெட் என்ஜினீரிங் கம்பெனி லிமிடெட், ஹெட் ரைட்ஸன் & கம்பெனி லிமிடெட், ஸைமன்-கார்வ்ஸ் லிட், தி மிஸ்ஸிடேஷன் கம்பெனி லிமிடெட், அசோசியேட்டட் எலெக்ட்ரிகல் இண்டஸ்ட்ரீஸ் (ரக்பி) லிட், தி இங்கிலீஷ் எலக்ட்ரிக் கம்பெனி லிமிடெட், தி ஜெனரல் எலக்ட்ரிக் கம்பெனி லிமிடெட், அசோசியேட்டட் எலெக்ட்ரிகல் இண்டஸ்ட்ரீஸ் (மான்செஸ்டர்) லிமிடெட், ஸர் வில்லியம் ஆர்ரோல் & கம்பெனி லிமிடெட், அசோசியேட்டட் எலக்ட்ரிகல் கம்பெனி லிட், டோர்மென் லாங் (பிரிட்ஜ் & என்ஜினீரிங்) லிட், ஜோஸப் பார்ஸன் & ஸன் லிமிடெட், க்ளீவ்லண்ட் பிரிட்ஜ் & என்ஜினீரிங் இஸ்கான் கேபிள் குரூப்.

இந்தியாவுக்காக வேலை செய்யும் பிரிட்டிஷ் கம்பெனிகள்

ISCON-35 TM

பெண்ணெனும் தெய்வம்

பிலஹரி



ஊர் விழித்துக் கொள்வதற்கு முன்னரே அவ்வீடு விழித்துக் கொண்டு விட்டது.

வழக்கம்போல் இன்றும் இடி இடித்து, புயல் வீசி, பிரளயம் பிறந்து விட்டது அங்கே. வழக்கமான நேரம், வழக்கமான குரல், வழக்கமான வழக்குதான்.

''ஏய்!...விடிஞ்சதும் விடியாததுமா அநாவசியமா என்னைக் கிளறுதே!... அப்புறம்... ஆமாம்!...''

வழக்கமான புலியின் உறுமல் அந்த இருட்டறையிலிருந்து வெளிவந்தது.

பதிலுக்கு,சன்னமான குரலில்-பிறர் செவிகளுக்கு எட்டாதவகையில்-நாலைந்து வார்த்தைகள் வெளிவந்தன.

''ராத்திரி எங்கேயோ போயிருந்தேன். நீ யார் அதைக் கேட்க?...என் இஷ்டம், எங்கேயாவது போவேன், வருவேன்!..மகாராணி அம்மாகிட்டே உத்தரவு வாங்கணுமோ?...பல்லைத் தட்டிடுவேன், தட்டி!''

உறுமல் உருமாறி ஊளையாக வெளிவந்தது இப்போது.

சற்று நேரம் பேச்சேயில்லை. இதயத்தைத் தொடும் விம்மல் நிசப்தத்தைக் கலைத்தது.

''சனியன்! காலடியிலே உட்கார்ந்து ஏன் அழறே? இப்போ எழுந்து போய், காரியத்தைக் கவனிக்கப் போறியா, இல்லை...''

விம்மல் வெடிக்கும் ஒலி. அதைத் தொடர்ந்து 'பளர் பளர்' என்று நாலு அறை விழுந்தது.

புலியாக உறுமியவன், சிங்கமாகச் சீறியவன், இப்போது பேயாக மாறி 'நாலு வாங்கு' வாங்கி விட்டான்.

''சை! தரித்திரம்! தரித்திரம்! உன்னை ஒழிச்சால்தான் விடு உருப்படும்! என் கழுத்தைக் கட்டிண்டு மாரடிக்கறயே!''

அடுத்த நிமிடம், அரைக்கை பனியனும், தோள்பட்டையில் கட்டம் போட்ட துண்டுமாக அந்த ராட்சஸன் வெளியேறி விட்டான்.

வீட்டின் முற்பகுதியில் உள்ள இரண்டு குடித்தனக்காரர்களும் நிம்மதியாகப் பெரு மூச்சு விட்டனர். அரை மணிக்கு மேலாகப் பின்கட்டுவாசிகளிடமிருந்து எழுந்த ஓலமும், ஓசையும் அவர்களையும் அப்போதே தட்டி எழுப்பி விட்டன.

கிழவி ஒருத்தி—முன் பக்கத்துக்காரர் ஒருவரின் தாயார்—பூனைபோல் பின் பக்கம் சென்றாள். குளியலறையை யொட்டி அமைந்துள்ள அந்த இருட்டறைக்குள் இலேசாகத் தலையை நீட்டினாள்.

சின்னஞ் சிறிய அறைதான் அது. அங்கு இருப்பவர்களுக்கு அதுதான் சமையலறை, சாப்பிடும் இடம், படுக்கை அறை—எல்லாம். ஆறு ரூபாய் வாடகைக்குப் பின்னே அரண்மனையா கிடைக்கும்? அந்தப் பிள்ளையாண்டானுக்கு—அதுதான் சற்று முந்தி சாத்துமுறை செய்துவிட்டுப் போனானே அவனுக்குத்தான்—எங்கோ மில் ஒன்றில் வேலையாம். ஐம்பதோ, அறுபதோ சம்பளம் இருக்கும். அந்த வரும் படியில் இதைவிட அதிகம் கொடுத்து, அகலக் கால் போட முடியுமா?

"இந்தாடி பொண்ணே—சிவகாமி—உள்ளே தானே இருக்கே?..."

நீட்டி முழக்கிக் குரல் கொடுத்தாள் கிழவி.

"இருக்காம எங்கே போறேன் பாட்டி?.." இருளும் பதில் குரல் கொடுத்தது.

தைரியமாக இரண்டு அடி எடுத்து, உள்ளே வந்தாள் அந்தக் கிழவி. "ஒரே புகையா போட்டிருக்கியேடி!...." என்றாள்.

"குளிக்க வெந்நீர் போட்டிருக்கேன், பாட்டி!..."

பாட்டி சிரித்தாள்.

"மொண்டு மொண்டு பச்சைத் தண்ணியா கொட்டிப்பியே!... இன்னிக்கு என்னடிம்மா வெந்நீர்?... கணவன் கொடுத்துட்டுப்போன அடிக்கு ஒத்தடம் போடவா?..."

பதில் மொழி பிறக்கவில்லை. கிழவி, உட்கார்ந்து கொண்டாள்.

"இந்தாடி!...நானும் கேட்க வேண்டாம், கேட்க வேண்டாம் என்றுதான் இருக்கேன் இத்தனை நாளும்!.....ஆமாம்!......இவன் அக்கிரமத்துக்கு எல்லை உண்டா, இல்லையா?.. சகிக்காமல்தான் கேட்கிறேன்!...ம்..."

இதற்கும் பதில் கிடையாது.

"இங்கே குடித்தனம் வந்து ஆறு மாதம் ஆகிறது!... வந்தது முதல் இன்று வரை பொழுது விடிஞ்சதும் விடியாததும் உன்னைப் போட்டு மொத்தறானே!...கேள்வி முறை கிடையாதா?...ம்... ஒருநாள் கைநீட்டாமல் இருக்கானா?... எப்போ பார்த்தாலும் நாய் மாதிரி குரைச்சுண்டு, பேய்மாதிரி அறையறதுக்கா அவனுக்கு வாழ்க்கைப்பட்டே?..."

"நான் வந்த வழி பாட்டி அது!..." கண்ணீரில் கரைந்து வந்தது பதில் குரல்.

"வந்த வழியாவது, போன வழியாவது!.. குடும்பம்னு முன்னே பின்னேதான் இருக்கும். இல்லேன்னு சொல்லல்லே!...ஏதோ வெளியே அலைஞ்சுட்டு வர்ற ஆம்பிளைக்குக் கோபதாபம் வரத்தான் வரும். ஏதோ கூச்சல் போடுவா! இல்லே—ரொம்ப மிஞ்சிப் போனா—இரண்டு தட்டுத் தட்டட்டும்!...இப்படியா எப்போப் பார்த்தாலும், அடிக்கிறது, வையறது, அலற வைக்கிறது...?...ம்...இல்லே, என்னதான்டி, அவன் மனசிலே நினைச்சிண்டிருக்கானாம்?... வாயைத் திறந்தே கேட்டுடேன்!......இப்பேர்ப்பட்ட கணவன்கிட்டே வாழத்தான் வேண்டாமே!... பெரிய பாறுங்கல்லாப் பார்த்து, வயித்திலே கட்டிண்டு, 'சிவனே'ன்னு கிணத்திலே குதிச்சுட்டுப் பிராணனை விட்டுடலாம்!..."

சிவகாமி விக்கினாள். பாட்டி ஏதோ நா அசைப்பதற்காகப் பேசவில்லை. அவள்மேல் கொண்டுள்ள அளவற்ற பரிதாபம்தான் அப்படிப் பேச வைத்தது. அவ்வார்த்தைகளில் எது தப்பு? இப்படி அடியும் உதையும் படவா அவள் அவனுக்கு வாழ்க்கைப் பட்டிருக்கிறாள்? ஒருநாள் சுமுகமாக—மனம் குளிர, முகம் மலர, வாய் நிறைய—பேசியிருக்கிறானா? தாய் தந்தையை விழுங்கிவிட்டு, தூர உறவினரால் வளர்க்கப்பட்டவளுக்கு இவனைவிட நல்ல வரனாகக் கிடைக்கவில்லையா வளர்த்தவர்களுக்கு? அவர்கள் கண்டார்களா, இவன் இப்படி அரக்கனாக இருப்பானென்று? ஏதோ மில்லில் உத்தியோகம், நன்றாக வைத்துப் படைப்பான் என்றுதான் எதிர்பார்த்தார்கள். ஐம்பதோ, அறுபதோ அது எவ்வளவு என்று கூட இந்த விநாடிவரையில் அவளுக்குத் தெரியாது,—சம்பளமாம். 'என்ன சம்பளம்?' என்று அவள் தான் வாய் திறந்து கேட்டிருப்பாளா? கேட்டால், இவ்வளவு நேரம் அந்த நாக்குதான் இருந்திருக்குமா?

எவ்வளவோ சம்பாதிக்கட்டும்; ஒழியட்டும். அதைப் பற்றி அவளுக்கு என்ன கவலை? ஒரு காரியம், ஏதோ சத்தியத்துக்குக் கட்டுப்பட்டாற் போல் செய்கிறான். முதல் தேதி பிறந்தவுடன், மாதத்துக்கு வேண்டிய சாமான் வாங்கிப் போட்டு விடுவான். இருபது தேதி வரை அதுவும் ஈடு கொடுத்து வரும். அப்புறம் பத்து நாட்கள் முன்னே பின்னேதான் இருக்கும். போதுமே! இதுவாவது ஒழுங்காக வாங்கிப் போடுகிறானே என்று பெருமைப் பட்டால் போதாதா? அதோடு சரி. அப்புறம் சினிமா, நாடகம் என்று வேண்டாம், காக இல்லாமல் புருஷன் பெண்சாதி போகக் கூடிய கோவிலுக்குக் கூடவா பஞ்சம்? அதெல்லாம் நினைக்கக் கூடாது; பேசக் கூடாது. 'யாரடா அது இங்கே? மனித வாடை வீசுறதே!' என்று அந்தக் காலத்தில் ராட்சசர்கள் கேட்டுக் கொண்டே வருவார்கள் என்று பாட்டிமார் கதை சொல்கிறாற்போல்தான், வெளியிலிருந்து வருவான். அவன் 'என்' என்பதற்கு முன், அவளும், 'என்னெ'யாக இல்லையா? கூடிய மட்டும் அவளும் அவனை அநுசரித்துப் போகிறாளே! இவ்வளவு திட்டு வாங்கி, உதை தின்றும் எதிர்த்துப் பேச முடியுமா? அப்படித் தப்பித் தவறி ஒரு வார்த்தை வந்து விட்டால், மயக்கம் போடும் வரையில் அறைந்து வீழ்த்தி விட்டுப் போய் விடுவானே? ஏன்? போயிருக்கிறானே!

"என்னடி பெண்ணே! ஒண்ணும் பேசாமல் விக்கிண்டே இருக்கிறயே!"

"என்னத்தைப் பாட்டி நான் பேசறது?" சிவகாமி கேட்டாள் விரக்தியோடு.

"ஏதாவது ஏமெட்டுக் கின்னாவது படிச்சிருக்கியாடியம்மா? வாத்தியார் வேலைக்குச் சிவனேன்னு போயிடலாமே!"

வேதனையுடன் சிரித்தாள் அவள்.

"சிவனேன்னு போகாமல், அந்தச் சிவன் கிட்டேயே போயிடலாம், பாட்டி!"

எழுந்து நின்றாள் கிழவி.

"ம்! அழுததுக்காக உன் புருஷன் மாறிடுவானு? எழுந்திருந்து ஏதாவது அந்த ராட்சஸனுக்குப் படைச்சு வை! அதற்கு வேறு வந்து உன்னைக்கொல்லப் போறான்!" கிழவி போய் விட்டாள்.

நடுப் பகல். வெளியே வெய்யில் வார்த்தெடுத்த சமயமாகத் தகித்துக் கொண்டிருந்தது. காலையில் போனவன், இப்போதுதான் திரும்பி வந்தான்.

ஏற்கெனவே பட்டப் பகலிலும் விளக்குப் போட்டால்தான் வெளிச்சம் வரும் அறை. வெளியேயிருந்து வந்தவனுக்கு, அறைக்குள் வந்ததும் ஒரே இருட்டாகத் தெரிந்தது. பரபரப்புடன் உள்ளே நுழைந்தவன், காலில் ஏதோ இடறவே, இரண்டடி தட்டுத் தடுமாறி, நர்த்தனம் செய்து....நல்ல வேளை, விழாமல் தப்பினான். நிலைப்படியில் தலையை வைத்துப் படுத்திருந்த சிவகாமி அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்தாள்.

"பீடை!... சனியன்!... நந்தி மாதிரி குறுக்கே படுத்துக் கொண்டிருக்கிறயே!... புருஷன் வந்தால், இருட்டிலே கால் தடுக்கி, கீழே விழுந்து, உயிர் போகட்டும்னு நினைப்பா?...ம்?" அவள் நடுங்கினாள்.

"கேட்டால் பதில் சொல்லித் தொலை வேண்டி, பீடை!" பனியனைக் கழற்றியபடியே உறுமினான் அவன்.

அவன் கேட்ட கேள்விக்குப் பதில் வேறு சொல்ல வேணுமா?

"ஒழியட்டும்! என்ன சமைச்சிருக்கே? பசி அடிவயிற்றைக் கிள்ளறது!" என்றபடியே அமர்ந்து கொண்டான்.

"மிளகு ரஸம் வைச்சு, அப்பளம் கட்டிருக்கேன்!" என்று ஈனமான குரலில் பதில் சொன்னாள் சிவகாமி.

'சட்' என்று கையை உதறிவிட்டு, வேகமாக எழுந்து நின்றான் அவன்.

"ஏன்? கொஞ்சம் எலிப் பாஷாணமும் ரசத்திலே கலந்துடக்கூடாதோ! ஒரு வழியா முடிஞ்சுடுமே! மிளகாம், அப்பளமாம்! சை! ஒரு ஞாயிற்றுக்கிழமை—லீவு நாளாகப் பார்த்து—வாய்க்கு ருசியானதைச் சாப்பிடலாம்னு வந்தா...."

விடிந்ததும் விடியாததுமாகச் சண்டை போட்டு விட்டுப் போனவனுக்கு, அவியல் பொரியல் பண்ணிப் போட வில்லையாம்! பண்ணிப் போட அவள் தயார்தான். அதற்கு வேண்டிய பதார்த்தம் ஏதாவது வாங்கிக் கொடுத்து, 'இதைச் செய்' என்றால், அவள் செய்யாமல் இருந்திருப்பாளா? காய்கறி வாங்கக்கூடச் சில்லறை இல்லாமல், முன் பக்கத்துக் கிழவியிடம் இரண்டு அப்பளம் வாங்கிச் கட்டு வைத்ததற்கு இந்தப் பலன்.

"எல்லாத்தையும் நீயே கொட்டிக்கோ! பீடை! நான் ஒழிஞ்சு போறேன்!"

அவன் போய் விட்டான், வந்த வேகத்தில்.

சிவகாமி அழவில்லை. கண்ணீர் விடவில்லை. இந்த இரண்டுக்கும் இனிமேல் அவளிடம் இடம் இல்லை. பேசாமல், அந்தப் பழைய இடத்திலே – நிலைப்படியில் தலைவைத்து – படுத்து விட்டாள். சாதமும், ரசமும், அப்பளமும்—அப்படியே இருந்தன. அவள் வாழ்க்கைப்பட்ட பரிஷுக்குச் சாப்பாடு தான் குறைச்சலாக்கும்?

மாலை நேரம்.

சுவாமி படத்துக்கு விளக்கேற்றி, வணங்கி எழுந்தாள் சிவகாமி. பிறகு முற்றத்திலிருந்த துளசி மாடத்துக்குச் சென்று வலம் வந்து வணங்கினாள். முகம் கழுவி, தலைவாரித் திலகமிட்ட அவள் தோற்றமே இன்று மிக மிக மாறுதலுடன்தான் இருந்தது. அவளுடைய பிழைப்புக்கு இது ஒருகேடா என்று கூடத் தோன்றும்படியான அலங்காரம்.

மத்தியானம் கோபித்துக் கொண்டு அவன் வெளியேறியவன் தான், இன்னும் திரும்பவில்லை. வந்தால் மட்டும் என்ன வாழப் போகிறது? வழக்கமான வசவும் திட்டும் தானே? மங்கிய ஒளியில் அழுது வடிந்து கொண்டிருந்த அந்தச் சிறு அறையை—தன்னுடைய இருப்பிடத்தை – சுற்றிச் சுற்றி ஏதோ அதிசயப் பொருள் ஒன்றைப் பார்ப்

உற்பத்தித் திறனை அதிகரிப்பது குறித்துப் பல அரிய விஷயங்களை அறிந்து வருவதற்காக இந்திய தேசிய உற்பத்தித் திறன் குழுவினர் பத்து அங்கத்தினர்கள் கொண்ட ஒரு கோஷ்டியை ருஷ்யா, செக்கோஸ்லோவேகியா ஆகிய நாடுகளுக்கு இம்மாதம் 5-ந் தேதியன்று அனுப்பி வைக்கின்றனர். ருஷ்ய உதவி பெறும் இக் கோஷ்டியினர் எட்டு வாரங்கள் சுற்றுப் பிரயாணம் செய்து இயந்திரத் தொழில் பற்றிய பல நுணுக்கங்களைக் கற்று வருவர். இந்தக் கோஷ்டியில் ஒரே தமிழராகவும், அரசாங்கத்தின் ஒரே பிரதிநிதியுமாகத் தொழிற்சாலை சீனியர் இன்ஸ்பெக்டர் திரு பி. பெரியநாயகம் அவர்கள் இடம் பெற்றிருக்கிறார் என்பது பெருமைக்குரிய விஷயமாகும்.



பதுபோல் பார்த்தாள் சிவகாமி. உள்ளத்திலிருந்து ஆழ்ந்த பெருமூச்சுகள் கிளம்பின.

ஆயிற்று: இன்னும் சில நிமிட நேரங்கள் தான் இந்த அறைக்கும்—ஏன், இந்த உலகுக்கும் — அவளுக்கும் தொடர்பு இருக்கப் போகிறது! அதன் பிறகு...?

இந்த அறையை, இந்த வீட்டை, இந்த வீதியை, இந்த உலகை—தொட்டுத் தாலி கட்டிய அவனையுமே விட்டுப் போகிறாள்.

"கிணற்றிலே சொம்பு விழுந்துவிட்டது அம்மா! தெருவிலே தார் வாருகிறவன் போனால் கூப்பிட்டு இறங்கச் சொல்லணும்! நாலு ஆள் ஆழம் உள்ள கிணறு நம்ம வீட்டுக் கிணறு!" என்று மாலையில் எப்போது, அந்தக் கிழவி பேச்சு வாக்கில் கூறினாளோ, அப்போதே அந்தத் தீர்மானம் அவள் இதயத்தில் இடம் பெற்றுவிட்டது. நேரம் ஆக ஆக அதுவே வலுப்பெற்றும் விட்டது.

போதும்; 'எட்டுப் பிறவிகளுக்குப் போதும் இந்த வாழ்க்கை. கேவலம் ஒரு வாய்ச் சோற்றுக்காக அவள் வாழ்ந்துதான் தீர வேண்டுமா? நாயும்தான் சாப்பிடுகிறது; பன்றியும்தான் வயிற்றை நிரப்புகிறது. அவைகளுக்கும் அவளுக்கும் என்ன வித்தியாசம்? ஆசை, அன்பு, அரவணைப்பு என்று எப்போதாவது உண்டா? இந்த அவல வாழ்வு வாழ்வதைவிட, அந்தக்கிணற்றிலேயே தன் விதியை ஒப்புவித்து விட்டால்...?

முதன் முதலில் இந்த எண்ணம் ஏற்படுத்திய சிலிர்ப்பும் பயமும் இப்போது அவளுக்கு ஏற்படவில்லை. பயத்தை விழுங்கி, சிலிர்ப்பைச் சிதறடித்து, ஜடப் பொருளாக அவள் மாறி நின்றபோது, சாவுக்குப் பயமாவது?

நடுங்கும் கைகளால் குடத்தை எடுத்துக் கொண்டாள். திடீரென்று எவராவது எதிர்ப்பட்டால் சந்தேகப்படக் கூடாதே! முப்பது அடிக்கு அப்பாலிருந்தது அந்தக் கிணறு.

இடுப்பில் குடத்துடனும், இதயத்தில் கனத்துடனும் நடையை எட்டிப் போட்டாள் கிணற்றை நோக்கி.

"ஏய்...! எங்கே போறே...?"

நாலடி நடந்தவள், சடேரென்று திரும்பினாள். அவன்தான்! அந்த ராட்சஸனேதான்!

● 'ஹிந்து' பத்திரிகையில் உதவி ஆசிரியராக நீண்ட காலம் சேவை புரிந்த ஸ்ரீ வி. பாஸ்கரன் அவர்கள் மே 18-ந் தேதி தமது அறுபத்தியேழாவது வயதில் காலமான செய்தி கேட்டு வருந்துகிறோம். இனிமையும், கவர்ச்சியும் வாய்ந்த தம் எழுத்தின் மூலம், அந்த நாளில் கிரிக்கெட், டென்னிஸ் முதலிய ஆட்டங்களில் அநேகம் வாசகர்களுக்கு ஆர்வத்தை உண்டாக்கியவர் ஸ்ரீ பாஸ்கரன். அபாரமான சங்கீத ரசனை படைத்திருந்தவர். பத்திரிகை, கலை, விளையாட்டு இவற்றில் ஈடுபாடுள்ளோருக்கு ஸ்ரீ பாஸ்கரனின் மறைவு ஈடுசெய்ய முடியாத நஷ்டமாகும். ●

"என்னடி இடிச்ச புளியாட்டம் நிக்கறே? கூப்பிடறது காதிலே விழலலே? இங்கே வந்து தொலேயேன்!"

அதே அதட்டல். அதே ஆத்திரம்.

சிவகாமியின் உள்ளம் ஊமையிட்டது. வாழ வகை இல்லாவிட்டாலும், சாகவும் உரிமை கொடுக்காத பாவியா இருக்கிறானே!

"நான் பாட்டுக்குக் கூப்பிட்டுண்டே இருக்கேன். மரமாட்டம் நிக்கறியே! உம்!" என்று கூறி அவளை நோக்கி வந்தான்.

"ஏது? அலங்கார மெல்லாம் அமர்க்களப்படறது! உம்... கொஞ்சம் திரும்பி நில்லு!"

அவளோ ஆடாமல் அசையாமல் நின்றாள். அவனே அவள் தோள்பட்டையில் கை வைத்து ஒரு சுற்றுச் சுற்றிவிட்டான். அடுத்த விநாடி பிடரி குறுகுறுக்கவே பின்னந்தலையில் கைவைத்துப் பார்த்தாள் சிவகாமி.

உலகமே இருண்டு வந்தது அவளுக்கு.

பூவா? அவளுக்கா? அவனா?

"கடைத் தெருப் பக்கம் வந்தேன். வாசனை மூக்கைத் துளைச்சது. ஒரு முழம் வாங்கி உனக்குக் கொடுக்கத் தோணித்து. சரி! சரி! உள்ளே வா! பசி காதை அடைக்கிறது!"

வாயடைத்து நின்றாள் சிவகாமி. இப்படி ஒரு மாறுதலா? மாறுதலாக இருக்கமுடியாது. நாய் வால் நிமிராமல் இருக்கலாம். அது ஆண்டவன் கொடுத்த சாபமோ என்னவோ? மனித மனம் ஏன் மாறக்கூடாது? ஒருவேளை, இன்றிலிருந்தே — இந்தப் பொழுதிலிருந்தே — அவள் கைப்பிடித்தவன் மாறமாட்டான் அல்லது கொஞ்சம் கொஞ்சமாக மாறி வரமாட்டான் — என்பது என்ன நிச்சயம்?

"ஏய்! இப்போ வரப்போறியா இல்லையா? எனக்கும் சோறு போட்டுட்டு, நீயும் கொட்டிக் கோயேன்! காலையிலே வடிச்ச சாதமும், ரசமும் அப்படியே இருக்கு போலிருக்கே. நான் கோவிச்சுண்டு போனா, உன் வயிற்றை ஏன் வாட வைக்கிறே? வந்து தொலே!..."

அறைக்குள்ளிருந்து அவன் குரல், வழக்கமான! அதிகார ஆணவத்துடன் எழுந்தது. ஆனால் இத்தனை நாட்கள் அந்தக் குரலில், அதட்டலில் தான் கண்டிராத, இன்னதென்று புரிந்து கொள்ள முடியாத ஒரு பேருண்மை பொதிந்திருப்பதை இன்று கண்டாள் சிவகாமி. அவள் உடல் சிலிர்த்த சிலிர்ப்பில், அவளுடைய பழைய தீர்மானம் சிதறி விட்டது.

கிணற்றடியிலே அவளுக்காகக் காத்துக் கிடந்த காலனுக்கு ஏமாற்றத்தை அளித்துவிட்டு, வெறும் குடத்துடன், கணவனின் வயிற்றை நிரப்ப, அறையை நோக்கி நகர்ந்தாள் அந்தப் பேதை.

"இதோ பாருடா பசங்களா! அடித்தாலும், அணைத்தாலும், வைதாலும், வாழ்த்தினாலும், கடைசியிலே — தெரிஞ்சோ தெரியாமலோ ஒருத்தன் ஒரு துளசி இலையை எடுத்து ஆண்டவன் கிட்டே போட்டா, அந்தப் பைத்தியக்கார தெய்வம்—பட்ட கொடுமையை மறந்து—பல்லைக்காட்டிச் சிரிக்கும்டா, பாவம்!" என்று நீட்டி முழக்கி வாசற்புறத்துக் கிழவி தன் பேரக்குழந்தைகளுக்குக் 'கதை' கூறிக் கொண்டிருந்தது. அவ்வீடு முழுமையும் எதிரொலித்துக் கொண்டிருந்தது.


இலவசம்!
நல்லதொரு
முகக் கண்ணாடி
உங்களுக்கே
ஹிமாலயா
புக்கே
டாய்லெட் பவுடர்
அடங்கிய இவ் விசேஷ டப்பாவிலே !
சரக்குகள் தீர்ந்துவிடுமுன் முந்துங்கள் !

தெருங்குக் கதை

வானம் இருண்டது

கல்யாணசுந்தரி ஜகந்நாத்

வெகு தூரத்தில், வயற்புறத் தருக வான வெளியில் வெள்ளைச் சிறு மேகக்குஞ்சு ஒன்று ஓடிக் கொண்டிருந்தது.

பாக்கியம் தோளில் இருந்த நீர்த் தவலையைத் தாழ்வாரத்தில் இறக்கி வைத்தாள். அவளது மனத்திலே அமிர்தத் திவலைகள் பொழிவது போன்ற பெருமித உணர்ச்சி ஏற்பட்டது.

அதைத் தொடர்ந்து திடுமென்று உள்ளத்தின் ஒரு மூலையிலே பயமும் தோன்றியது.

'அட கடவுளே! அவன் என்ன எண்ணியிருப்பானோ? நான் எதற்காக அப்படிச் சிரிக்கணும்? சிரிப்பை அடக்கிக் கொண்டு நிதானித்துப் பேச வேண்டும் என்பது எனக்கு ஏன் அப்பொழுது தெரியாமற் போய் விட்டது? இந்த யோசனையே எனக்குச் சற்றுப் பொறுத்தல்லவா உதயமாயிற்று! அதற்குள்ளாக அவன் கவனித்திருப்பான். இல்லாவிட்டால் அப்படி ஆச்சரியப்பட்டிருப்பானோ? மனத்தில் என்ன நினைத்துக் கொண்டானோ?'

பத்து நிமிஷங்களுக்கு முன் தண்ணீர்த் துறையில் நடந்ததெல்லாம் அவள் நினைவுக்கு வந்தது! அப்படியே வாசற்படித் தூணைப் பிடித்துக் கொண்டு நின்று விட்டாள்!

தண்ணீர்த் துறையில், நீர் மொண்டு கொண்டு அவள் தவலையைத் தூக்கித்தோளில் வைத்துக் கொள்வதற்காக முழங்கால்களுக்கிடையே நிறுத்தி நிமிர்ந்தபொழுது எதிரே சேஷய்யா நின்று கொண்டிருந்தான். அவளும் அவனும் நின்றுகொண்டிருந்த முறையிலேயே, 'அவர்கள் இருவரும் வெவ்வேறு கரைச் சேர்ந்தவர்கள்: அங்கு பிரியும் பாதையிலே பிரிந்து போகப் போகிறவர்கள்' என்பது தெளிவாகத் தெரிந்தது.

சேஷய்யாவும் பாக்கியமும் சிறு வயதில் சேர்ந்து விளையாடியவர்கள்தான்; நெருங்கிப் பழகியவர்கள்தான். எத்தனையோ முறை நரிப்பயறு பிடுங்கப் போய் வயற்காட்டிலே அவள் கோஷ்டிக்கும் அவன் கோஷ்டிக்கும் சண்டை கூட நடந்திருக்கிறது; பேச்சுத் தடித்திருக்கிறது. ஆனால் வயது வந்தபின், பாக்கியம் அந்தச் சேஷய்யாவோடு பேசுவதை அறவே விட்டு விட்டாள்; அவனும் நிறுத்தி விட்டான். பேச்சை நிறுத்திப் பல நாட்கள் ஆனவன் இன்று நின்றுவிட்டானே! அதுவும் அவள் எதிரில்! பாக்கியம் தலைகுனிந்து முழங்கால்களில் முட்டுக் கொடுத்து நிறுத்தியிருந்த தவலையைத் தூக்கித் தோளில் வைத்துக் கொள்ளப் போனாள்.

"பெத்திராஜு" வந்துக்கிட்டிருக்கான்!" என்றான் சேஷய்யா.

பாக்கியத்தின் முகம் மலர்ந்தது. என்ன சொல்வதென்றே அவளுக்கு விளங்கவில்லை. வைத்த கண் வாங்காமல் அப்படியே பிரமித்து நின்றாள் ஒரு கணம்.

பிறகு திடீரென்று அவள் பக்கென உரக்கச் சிரித்தாள். சட்டென்று அவளுக்குத் தன் நிலை நினைவு வந்தது. நொடியில் முகத்தைக் கம்பீரமாக்கிச் சரி செய்து கொண்டாள்.

கணத்துக்குக் கணம் மாறும் அவள் முக பாவத்தைக் கண்ட சேஷய்யா வியந்தான். 'இதென்ன அசட்டுக் காரியம்?' என்று எண்ணியபொழுது அவனுக்கும் சிரிப்பு வந்தது. இருந்தாலும் அடக்கிக்கொண்டு தன் வழியே நடக்கலானான்.

நான்கு எட்டுகள் எடுத்து வைத்தவன் சட்டென்று திரும்பிப் பார்த்து, "ராமகிரிப் பேட்டை பஸ் ஸ்டாண்டிலே முதலாளியைப் பஸ் ஏற்றிவிட்டு, இன்று மாலை நான் கட்டாயம் ஊருக்குப் போய்ப் போகிறேன்" என்று சொல்லிக் கொண்டிருந்தான். நான் அவனுக்குக் குரல் கொடுத்தேன். பஸ் ஸ்டாண்டு இரைச்சலில் நான் குரல் கொடுத்துக் கூப்பிட்டது அவன் காதில் விழவில்லை. அதனால் என்னைத் திரும்பிப் பாராமலே அவன் போய் விட்டான். இருந்தாலும் இங்கே உன்னைப் பார்த்ததும், விசயத்தைச் சொல்லலாம்னு தோணிச்சு. சொன்னேன்!" என்று சொல்லிக் கொண்டே தன் ஊருக்குப் பிரியும் பாதையிலே இறங்கி விட்டான்.

இந்தச் செய்தியைக் கேட்டபின், இனமும் மெழுகாகக் கனக்கும் தண்ணீர்த் தவலை துளிக்கூடக் கனக்கவே இல்லை. காற்றில் ஊசலாடும் பூப்போல இலேசாகத் தோன்றியது.

'வீடு போனதும், முதற் காரியமாக அவருக்குப் பிடித்த சமையலாகச் செய்ய வேண்டும். பாத்திரம் - பண்டங்களைச் சுத்தமாகத் தேய்த்துக் கழுவி அந்த அந்த இடத்திலே கவிழ்க்கணும். வீட்டைப் பெருக்கி மெழுகித் துப்புரவாக வைக்கணும். அவரோ நகர்ப்புறத்திலிருந்து வருகிறார். அவளைச் சுத்தப் பட்டிக்காடு என்று எண்ணவிடக் கூடாது!'

இப்படி யோசனை செய்துகொண்டே அவள் வீட்டை நோக்கி நடந்தாள். அவள் மகிழ்ச்சிக்கோர் அளவேயில்லை. நடக்கும்பொழுது கால் தரையில் பாவினால்தானே? அந்தப் பாழாய்ப் போகிற சந்தோஷந்தானே வெட்கத்தை விட்டு அவளைச் சேஷய்யாவுக்கெதிரே அப்படிச் சிரிக்கும்படி செய்து விட்டது!

வீட்டுக்குப் போனதும் அடுப்பை மூட்டி முறத்திலே அரிசியைப் போட்டாள்.

பக்கத்து வீடு கிராமத்து மணியக்காரரின் வீடு. அதன் புறக்கடைப் பக்கத்திலிருந்து மாடுகளின் மணியோசையும், பண்ணையாள்

அவற்றை அதட்டும் சத்தமும் கேட்டன. உழவு மாடுகளுக்குத் தீனி வைத்துக் கொண்டிருக்கிறார்கள் போலும் என்று எண்ணினாள்.

கையில் துடைப்பத்தை எடுத்துப் பாக்கியம் வீடுகூட்டத் தொடங்கினாள். அவளுக்கிருந்த மகிழ்ச்சியில், அவளை யறியாமலே ஒரு பாட்டு அவள் உள்ளத்திலிருந்து எழுந்து உதடுகள் வழியே வெளி வந்தது.

"ஊசிபோல மின்னிமின்னி
ஊர்செழிக்கப் பெயுமழை"

அந்தக் காலத்திலே அவள் மாமியார் இந்தப் பாட்டைத்தான் பாடுவாள். ஆனால் முழுப்பாட்டும் நினைவு வரவில்லை.

"காசுபோல மின்னிமின்னி
காடு செழிக்கப் பெயுமழை
பணந்தப் போல மின்னிமின்னி
பட்டணமெல்லாம் பெய்யுமழை."

பிறந்த வீட்டுக்கு வந்திருந்த கிராம மணிபக்காரரின் மகள் சுப்புலட்சுமி, "என்னக்கா, பிரமாதமாப் பாட்டுப் பொறந்திடிச்சு! அத்தான் வரப்போகிறாரா, என்ன?" என்று புறக்கடைக் குட்டிச்சுவரின் வழியாக எட்டிப் பார்த்துக் கேட்டாள்.

பாக்கியம் இலேசாக இளநகை புரிந்து தலையைத் தாழ்த்திக் கொண்டாள்.

"மெய்யாகவா? சொல்லவே இல்லையே நீ?"

பாக்கியம் தலையை நிமிர்த்தினாள்.

"என்ன பாக்கியம்! இப்படி இளைச்சுப் போயிட்டியே!" வியப்புடன் கேட்டாள் சுப்புலட்சுமி. "என்னதான் நீ இளைச்சாலும் அழகு அழகுதான். 'யானை படுத்தாலும் குதிரை மட்டம்' என்று சொல்லக் கேட்டதில்லையா?" என்றாள்.


நம்ம அத்தானும் இப்படி இளைச்சுப் போயிருப்பாரோ?

பாக்கியத்தின் நினைவு இப்படி ஓடியது.

பட்டணத்திலே அத்தானுக்கு யார் வாய்க்கு வகையாகச் சமைத்துப் போடுவார்கள்? தனக்கு இது பிடிக்கும், அது பிடிக்கும் என்று சொல்லிக் கேட்டு வாங்கிச் சாப்பிடுபவர் கூட இல்லையே! எதையும் மனத்துக்குள்ளேயே வைத்துக் கொண்டல்லவா குமைவார்! — ஆமாம்! நாமும்தான் நல்ல சேலையாகக் கட்ட வேண்டுமென்று எத்தனை நாட்களாக ஆசைப் பட்டுக் கொண்டிருக்கிறோம்! — சுப்புலட்சுமி உடுத்தியிருந்த சேலையைப் பார்த்ததும் அவளுடைய அந்தப் பழைய ஆசை மீண்டும் தலை தூக்கியது. கறுப்பு நிறத்திலே கைத்தறிப் புடவை. சந்திர வளையம் போல் ஜரிகை வேலை செய்திருக்க வேண்டும். இப்படி ஒரு புடவை வாங்க வேண்டும் என்று வெகு நாட்களாகவே அவளுக்கு ஆசை. அத்தானும் அவள் ஆசையை நிறைவேற்றுவதாகத்தான் சொல்லியிருந்தார்; அவள் கேட்ட மாதிரியே புடவை வாங்கித் தருவதாகத்தான் கூறியிருந்தார்.

சமையல் வேலையில் ஈடுபட்டிருந்த அதே நேரத்தில் அவள் மனமும் பழைய வாழ்க்கையைப் புரட்டிப் பார்ப்பதில் ஈடுபட்டிருந்தது. அவள் அந்த வீட்டிலே குடித்தனம் செய்யத் தொடங்கியது, அவள் மாமியார் இறந்து போனது - எல்லாமே ஒன்றுகூட விடாமல் அவளுக்கு நினைவு வந்தன.

ஒரு வருஷம் வானம் கண் திறக்காமல் அடைமழை பொழிந்தது. அதனால் பயிர்கள் நீரில் மூழ்கி அழுகிப் போயின. அதுவும்



அவன் நினைவுக்கு வந்தது. ஆமாம், அதற்கடுத்த ஆண்டுகூட அப்படியேதானே ஆயிற்று!

அதற்குப் பின் பெரு வெள்ளம் வந்தது. அதுவும் தொடர்ந்தாற்போல் இரண்டு வருஷங்கள். சொல்லப்போனால் அந்த வருஷம் வெள்ளம் வரும் என்பது பாக்கியத்துக்கு முன்கூட்டியே தெரியும். பருவ மழைக்கு முன்னால் பக்கத்து ஊரில் இருக்கும் உறவினர்களைப் பார்த்து வருவதற்காகப் பாக்கியம் போய் வந்தாள். அப்பொழுது 'கொல்லேரி' வறண்டு கிடந்தது. அங்கங்கே பள்ளங்களில் சிறிது நீர் தேங்கியிருந்தது. நாணல் புல் ஆள் உயரத்துக்கு வளர்ந்திருந்தது. பெத்தி ராஜு அவற்றைச் சுட்டிக் காட்டினான். கொக்குகள் நாணலின் உச்சியில் கூடுகள் கட்டியிருந்தன. அவற்றைப் பார்த்த பெத்தி ராஜு அப்படியே அயர்ந்து நின்றுவிட்டான், பிரமை பிடித்தவன் போல.

"இந்த வருசம் வெள்ளம் வரப் போவுது. நம்ம கதி என்ன ஆகப் போவுதோ? கொக்குங்க இந்த வருசம் எம்மாம் உயரத்திலே கூடு கட்டியிருக்குது, பார்த்தியா?" என்றான்.

பாக்கியம் இடிந்து போனாள்.

"நம்ம நஞ்சைப் பள்ளத்துக்கு இந்தத் தடவையும் இதே கதிதானா? வெள்ளம் வந்தால் முழுகத் தவறாதே!" என்று அருகில் நின்ற இன்னொருவன் சொன்னான் - பாக்கியத்திடம்.

இப்போதுதான் நினைவுக்கு வருகிறது. சொன்னவன் சேஷய்யாதான். அவர்கள் வீட்டுக்குப் போய் வந்தபொழுதுதான் வழியனுப்ப அவனும் கூடவே வந்திருந்தான். ஆமாம், அப்பொழுது அத்தான்கூட வெறித்துப் பார்த்தாரே! சேஷய்யாவிடம் பேசுவது அத்தானுக்குப் பிடிக்கிறதேயில்லை. பார்க்கப் போனால் பாக்கியம் சேஷய்யாவோடு பேசுகிறதும் இல்லை. அவன் வழியனுப்ப வந்தபொழுது ஏதோ சந்தர்ப்பம் வந்தது; பதில் சொல்லும்படி



யாயிற்று. ஆம், சொன்னான்: அதுவும், அத்தான் பக்கத்தில் இருக்கிறாரே என்ற தைரியத்தில். அவன் பதிலைக் கேட்டுச் சேஷய்யா சிரித்தான். அத்தானோ? வந்த கோபத்தை வெகு சிரமப்பட்டு விழுங்கினார். வீட்டுக்கு வரும்வரை யாரும் எதுவும் அதிகமாகப் பேசவில்லை. சேஷய்யா பெரிய ஏரிக் கரையில் பாதை பிரியும் இடத்தில் நின்று, 'பத்திரமாகப் போய் வாங்க!' என்று சொல்லி விடைபெற்றுக் கொண்டான்; வந்த வழியே ஊருக்குத் திரும்பிவிட்டான்.

கேட்கப் போனால் அத்தானுக்கு நான் யாரோடு பேசினாலும் பிடிக்கிறதில்லை. அவர் குணமே ஒரு மாதிரி. மற்ற விஷயங்களில் அவர் தெய்வம்தான்.

பாக்கியம் உள்ளத்திலே பூரிப்பும் உதட்டிலே புன்முறுவலுமாகத் தலை குனிந்த வண்ணம் காய்கறிகளை நறுக்கிக் கொண்டிருந்தாள்.

முன்பு ஒரு சமயம் அத்தான் சந்தைக்குப் போனார். அப்போது மறுநாள் தான் திரும்பி வருவேன் என்று சொல்லிப் போனார். அப்பொழுது நடந்த தெல்லாம் இப்பொழுது அவளுக்கு நினைவு வந்தது.

எதற்கும் கையோடு இருக்கட்டுமே என்று ஒரு தம்ளரில் பாலைக் காய்ச்சி ஜன்னலில் எடுத்து வைத்திருந்தாள். கிராம மணியக்காரரின் மனைவி அன்று தன் தோட்டத்தில் பூத்த சாமந்திப் பூவில் இரண்டு அவள் கையிலே கொடுத்தாள். அதை ஆசையோடு பாக்கியம் தலையில் சூடிக் கொண்டாள்.

கிடாரிக் கன்று வாங்கச் சந்தைக்குப் போயிருந்த பெத்திராஜு, பேரம் குதிராமற் போகவே அன்று விளக்கு வைத்த சிறிது நேரத்துக்கெல்லாம் திரும்பி விட்டான். காய்ச்சி வைத்திருந்த பாலையும், தலையில் அவள் சூடியிருந்த பூவையும் பார்த்ததும் அவன் முகம் போன போக்கைச் சொல்லி முடியாது. பாக்கியத்துக்கு எதுவும் விளங்கவில்லை. அவன் முகத்தில் அப்படி எள்ளும் கொள்ளும் வெடிப்பானேன்?

பால் விஷயத்தையும் பூ விஷயத்தையும் பெத்திராஜுவுக்குப் புரிய வைப்பதற்குள்ளே பாக்கியத்துக்குப் போதும் போதுமென்றாகி விட்டது. அன்றிரவு கண் மூடாமலேயே கடைசி ஜாமக் கோழி கூவிவிட்டது. தான் கொண்ட சந்தேகத்துக்குப் பெத்திராஜு பெரிதும் வருத்தப்பட்டான்; வேதனைப்பட்டான்.

அவன் மன வேதனையை உணர்ந்த பாக்கியம் ''என்ன அத்தான் இது பைத்தியக் காரத்தனம்? நீங்க கோவிச்சுக்கல்லேன்னா வேறு யாரு என்னை இப்படிக் கோவிச்சுக்கப் போறாங்க இத்தனை சுவாதீனமாக?'' என்றாள்.

இருந்தாலும் ஒரொரு சமயம் அவளுக்கும் கோபம் வரத்தான் செய்தது. 'இல்லாதற்கெல்லாம் இப்படியா ஒருவர் சந்தேகப் படுவார்?' என்று. அதைத் தொடர்ந்தே இன்னொரு நினைப்பு: 'இனிமேல் நம் மனத்திலே கோபத்துக்கு இம்மியும் இடம் கொடுக்கக்கூடாது. அத்தான் எத்தனை சந்தேகப்பட்டாலும், நாம் பொறுமையாகத்தான் இருக்கணும். இரண்டு கை கொட்டினால்தானே ஓசை!' அத்தான் வந்ததும் தன் தீர்மானத்தைச் சொல்லிவிட வேண்டும் என்று உறுதி பூண்டாள் பாக்கியம்.

முறைப் பெண்ணான அவளை எடுத்து வளர்த்துத் தன் மகனுக்கே மணமும் முடித்துக் கொண்டாள் அவன் அத்தை. பிறந்த வீட்டுக்காரர்கள் இல்லாத குறை தெரியாமலே பெத்திராஜுவும் அவளைப் பார்த்துக் கொண்டிருக்கிறான் — ரச எலுமிச்சம் பழமாகப் பொத்திப் பொத்தி அவளைப் பாது காத்து வந்திருக்கிறான்.

ஒரு சமயம் மணியக்காரர் மனைவி இரண்டு தாமரைக் காய் கொடுத்தாள். ''எனக்கு இது ரொம்பப் பிடிக்கும், சித்தி!'' என்றாள் பாக்கியம். உள்ளே நீராகாரம் அருந்திக் கொண்டிருந்த பெத்திராஜுவின் காதுகளில் இது விழுந்திருக்க நியாயமில்லை. ஆனால் மறுநாள் ஒரு கூடைக் காய் வீட்டிலே வந்து விழுந்து கிடந்தது. அவள் மனம் நீராக உருகிவிட்டது. விழித்திரையிலே நீர் கோத்து நின்றது. 'அத்தானுக்கு நீர்க் கண்டம் இருப்பதாக அத்தை சொல்லி யிருந்தாளே!'

எல்லாமே நினைவுக்கு வந்தது அவளுக்கு.

கனகம் - அவர்கள் வீட்டுப் பசு - மணியக் காரர் வீட்டுக் கொட்டிலிலிருந்து 'அம்மா' என்று குரல் கொடுத்தது.

கடைசியிலே கடனை அடைப்பதற்காக வேண்டித் தங்கள் வீட்டுப் பசு கனகத்தையே அல்லவா அவர்கள் வீட்டுக்கு ஓட்டிவிடும்படி யாகிவிட்டது! அப்பப்பா! ஒரு கஷ்டமா, இரண்டு கஷ்டமா? வெள்ளம் விளைவித்த கொடுமை, வெள்ளாமை இல்லாமை-இவற்றினால் பாக்கியமும் பெத்திராஜுவும் கடனில் மூழ்கி விட்டார்கள். அதன் பலனாக, வேறு வழியின்றிக் கூலிவேலை தேடிப் பெத்திராஜு ராமலிங்கப்பேட்டை நகரத்துக்குப் போகும்படி யாகிவிட்டது. ஊரைவிட்டு, உறவை விட்டு,— பூ விற்ற ஊரிலே கரி வியாபாரம் செய் என்றால் மனம் கேட்குமா? சொந்தமாக நிலபுலன்களை வைத்துக் கொண்டு ஆண்ட ஊரிலே, ஒருவருக்குக் கைகட்டிச் சேவகம் செய்ய மனம் இசையுமா? அதனால்தான் நாலு காசு சம்பாதிக்க அவன் நகரத்தை நோக்கி நடந்தான். 'இடுப்பு ஒடிய வேலை செய்தாவது பணத்தைச் சேர்த்து வந்து கடனைத் தீர்க்க வேண்டும். அப்புறம் நம் வயற்காட்டுக்கு நாமே ராஜாவாக இருந்து கொண்டு நிலத்திலே பொன் விளைவிக்க வேண்டும்' என்ற உறுதிப்பாட்டுடன்தான் அவன் புறப்பட்டிருந்தான்.

நாட்கள் சென்றன. பருவ மழையும் பொய்க்காமல் நீர் நிலைகள் நிறைந்து வழிந்தன. தடாகங்களில் தாமரை மலர்கள் பூத்துக் குலுங்கின. கதிர்கள் முதிர்ந்து பொன்னிறம் பெற்றன. பயிர்கள் கனம் தாளாமல் தலை வணங்கி நின்றன. அறுப்புக் காக நீரை வெளியேற்றி மடை வாயை அடைத்து வயல்களைச் சோர விட்டிருந்தார்கள்.

ஊரைவிட்டுப் புறப்படும்பொழுது பெத்திராஜு, பக்கத்து வீட்டு மணியக்காரரிடம், '' அறுப்பு—இறுப்பு, தாளடி—ஓடி எல்லாவற்றையும் என் ஸ்தானத்தில் நீங்களே

பார்த்துக் கொள்ளுங்கள். நெல்லே உங்கள் பத்தாயத்தில் போட்டு வைத்துக் கொள்ளுங்கள். ஆண்டவன் அருளில் நான் சீக்கிரமே திரும்பி வந்துவிடுகிறேன்'' என்று சொல்லி விட்டுப் போனான்.

அன்றையக் காட்சி பாக்யத்தின் கண்ணெதிரே நிழற் படமென வந்து நின்றது. பெத்திராஜு அன்று முழுதும் ஒரு மாதிரியாக இருந்தான். முகத்திலே வார்த்தைகளால் விண்டு சொல்ல முடியாத வேதனைக் குறி ஒன்று இருப்பதாகத் தோன்றியது.

அன்றைய அவன் முகபாவத்தை இன்று நினைத்தாலும் அவளுக்கு வயிற்றை என்னவோ செய்தது.

அன்று உணவருந்தும்பொழுது, '' ஏய் ! நீ தனியாயிருப்பியா ?'' என்று திடீரென்று கேட்டான் அவன்; தன் இயல்பான வறண்ட குரலில்தான்.

'' நானும் உங்க கூட வந்துடறேனே !'' என்றாள் பாக்கியம், துணிவை வரவழைத்துக் கொண்டு.

பெத்திராஜு அவளே விழித்து வெறித்துப் பார்த்தான். '' ஊஹும். நகரத்தை நம்பக் கூடாது. வேண்டாம்'' என்றான் குரலில் உறுதி தொனிக்க.

பாக்யம் பதில் சொல்லவில்லை. சுப்பு லட்சுமி முதலியவர்களெல்லாம் நகர்ப் புறத்திலே போய் இருக்கவில்லையா ? அத்தானுக்கு இஷ்டமில்லே, அவ்வளவுதான் ! மனத்தைத் தேற்றிக் கொண்டாள் அவள்.

'' ஏதாவது தப்புத்தண்டாவா நடந்துக் கிட்டே, என் முகத்திலே விழிக்க முடியாது. நான் கண்காணாத தேசாந்திரத்துக்குப் போயிடுவேன் !'' என்றான் மீண்டும்.


பாக்யத்தின் நெஞ்சு 'பக் பக்' கென்று அடித்துக் கொண்டது. '' என்ன அத்தான் இது....'' பதறினாள் பாக்கியம்.

பெத்திராஜு இலேசாகச் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு, '' பயப்படாதே ! எனக்கு எப்பவுமே கோபம் கொஞ்சம் அதிகம் !'' என்றான்.

பாக்கியத்துக்கு மனம் மேலும் கனத்தது. அன்றையப் பகல் பொழுது அப்புறம் இருவருக்குமிடையே பேச்சு வார்த்தை நிகழாமலே கழிந்தது.

அன்று மாலே பெத்திராஜு தன் பெட்டியில் துணிமணிகளே மடித்து வைத்துக் கொண்டிருந்தான். பாக்கியம் மேலுக்குச் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு '' நாளேக்கு இந்நேரம் நீங்க நகரத்திலே இருப்பீங்க, இல்லேயா அத்தான் ? இந்த நாட்டுப்புறம் நினைவு இருக்குமா? எங்க நினைவு வருமா ?'' என்று கேட்டாள்.

தலையைத் தூக்காமலே தன் வேட்டிகளே மடித்துக் கொண்டு அவன், '' ஜரிகையிலே சந்திர வளையம் போட்ட கறுப்புப் புடவை கட்டாயம் வாங்கியாறேன்'' என்றான், கடும் வறட்சிக் குரலில். இயற்கையான சுபாவம் போகுமா ? நாய் வாலே நிமிர்த்த முடியுமா ?



'' நமக்கு ஒரு டிக்கட்டு தாப்பா !''
'' நான் இரட்டைத் தலையான், வார் !''

சில கணங்கள் சென்றன. '' இந்தச் சிரமமெல்லாம் நான் படுவானேன் ? எல்லாம் உனக்காகத்தானே ? நாமென்ன, எப்பொழுதும் இப்படியேயா இருந்துவிடப் போகிறோம் ? அதிகமா இல்லாது போனாலும்கூட நம்ம பெரியவங்க நமக்கு வெச்சிட்டுப் போனதையாவது நமக்குப் பின்னுலே வர்றவங்களுக்கு நாம் விட்டுட்டுப் போக வேண்டாமா ?'' என்றான் பட்டும் படாமலும். பாக்யத்தின் உள்ளம் உருகிப் போயிற்று. அத்தான் சுபாவமே இப்படித்தான். மேலுக்குக் கொட்டாங்கச்சி. உள்ளுக்கு இனிமையான தேங்காய் !

மறுநாள் கிழக்கு வெளுப்பதற்கு முன்னுல் பஸ் ரோட்டுக்குப் புறப்பட்டான் பெத்திராஜு. மணியக்காரரும் தம் வெள்ளிப் பூண் போட்ட தடியை எடுத்துக் கொண்டு வழியனுப்பிவரப் புறப்பட்டார்.

தெருக்கோடி வந்ததும், '' நீ நில், பத்திரம் !'' என்றான் பெத்திராஜு.

'' நான் பஸ் ஏத்திட்டு வர்றேன். நீ வீட்டுக்குப் போம்மா !'' என்றார் மணியக்காரரும்.

அவள் அங்கேயே நின்று விட்டாள் தெருக்கோடியில். அவளால் பேச முடியவில்லை. தொண்டையை அடைத்தது. தன் இருதயத்தை யாரோ பலவந்தமாகப் பிடுங்கிக் கொண்டு போவது போலிருந்தது அவளுக்கு.

இருவரும் நடந்து கொண்டிருந்தார்கள். அவர்களது உருவம், நிழலுருவமாகித் தெருத் திருப்பத்தில் திரும்பி மறைந்த பின்தான் அவளுக்குப் பேச நா எழுந்தது. '' சுகமாகப் போய் லாபமாகத் திரும்பிவாங்க'' என்றாள்.

மறையப் போகும் விடிவெள்ளி ஒன்று மட்டுமேதான் அவளது இந்த வாழ்த்தைக் கேட்டது.

அன்று முதல் அவளுக்கு வாழ்வு பெரும் சுமையாகப் பட்டது. தன் ஒன்றிக்காகப் பிடிசோறு வடித்துச் சாப்பிடவே அவளுக்குப் பிடிக்கவில்லை. வயிற்றுப்பாட்டை உத்தேசித்து நாலு அரிசியைக் கொதிக்க வைக்கும் பொழுதெல்லாம், அவள் மனமும் கொதித்தது உலேயிலிட்ட அரிசியாக. 'அத்தான் சாப்பிட்டாரோ இல்லேயோ ? எப்படி இருக்கிறாரோ ? ஏதாவது வேண்டுமென்றால் அங்கே யாரைக் கேட்பார் ? அவர் அப்படிக் கேட்கக் கூடிய ஆளும் இல்லேயே.' அத்தானை நினைக்க நினைக்க அவளுக்கு விழிகளில் நீர் ஊற்றாகப் பெருக்கெடுத்தது.

அறுவடை, தாளடி எல்லாம் வந்தன. ஏற்கெனவே சாரமில்லாத பூமி. பதர்—இதர் எல்லாம் போகச் சாப்பாட்டுக்கே போதும் போதாததாக நெல் வீட்டுக்கு வந்து சேர்ந்தது. மணியக்காரர் தம் வீட்டுப் பத்தாயத்தில் அதைப் போட்டு வைத்துக் கொண்டார்.

வேண்டும்பொழுது அவனுக்கு எடுத்துக் கொடுக்கலாம் என்று.

அப்படியும் உள்ளச் சுமை இறங்கவில்லை அவனுக்கு. அன்றாடம் சூரியன் கிழக்கே உதித்து மேற்கே மறைந்து கொண்டிருந்தான். நேற்று-இன்று என்ற பாகுபாடின்றிப் பாக்கியத்துக்குப் பொழுது போய்க்கொண்டிருந்தது. அவனுக்கு வாழ்க்கையில் ஒரு சுவை, ஒரு பற்று இருந்தால் தானே?

புறக்கடையிலே இலவமரம் பூப் பூத்துக் காய் காய்த்தது. கோடை கழிந்து கொண்டிருந்தது.

சம்பாத்தியம் இல்லாவிட்டால் என்ன, நிலம் போனால் என்ன? இருவரும் ஒரு கூட்டில் இருந்தாலே போதும் என்று எண்ணிய பாக்கியம் மணியக்காரரிடம் சொல்லி ஒரு காகிதம் போடலாமா என்றுகூட நினைத்தாள்.

பெத்துராஜு இதையெல்லாம் சுலபமாகக் காதில் வாங்கிக் கொள்கிற மனிதன் இல்லை. கடனைத் தீர்த்தாலொழிய அவனுக்குத் தூக்கம் வராது. கடன் சுமை அவன் உள்ளத்தை அரித்தெடுத்துவிடும்.

இடையில் மணியக்காரருக்கு நான்கு ஐந்து தடவை அவன் தபாலில் பணம் கூட அனுப்பியிருந்தான். அதில் பாக்கியத்துக்குக் கைச் செலவுக்கு ஏதாவது கொடுக்கச் சொல்லி எழுதியும் இருந்தான்.

உழவு காலம் நெருங்கவே, மணியக்காரர் தம் வயல்களோடு பெத்துராஜுவின் வயல்களிலும் வேலை தொடங்கி விட்டார். ஏரு அடித்து உழவும் நடந்து கொண்டிருந்தது.

எதிர்பாராமலே இன்று அவள் அத்தான் வருகிறான்.

இந்த மகிழ்ச்சி மிதப்பிலேயே சமையல் வேலை முடிந்துவிட்டது. வெளியிலே சிறு தூறல் தொடங்கியிருந்தது. ஏற்றி வைத்திருந்த ஹரிக்கேன் விளக்கைச் சுற்றிப் பூச்சிகள் 'ஙொய்' என்று வட்டமிடத் தொடங்கி விட்டன.

பக்கத்து மணியக்காரர் வீட்டுப் பசுமாட்டுக் கொட்டிலில் கொசுக்களுக்காகப் போட்டிருந்த புகை கூட்டம் அவள் வீட்டையும் நிறைத்தது.

சாப்பிடும் தட்டுகள் இரண்டையும் எடுத்துத் துப்புரவாகக் கழுவினாள்.

பக்கத்தில் பக்கத்தில் மனைகள் போட்டு இரண்டு தட்டுக்களையும் எடுத்து வைத்தாள்.

தன்னுடைய தைரியத்தை நினைத்துத் தானே வியந்தாள்.

கல்யாணமென்று ஆகிக் குடித்தனம் வைத்த பிறகு கணவன்-மனைவி இருவரும் சேர்ந்தாற்போல் உட்கார்ந்து சாப்பிட்டதே யில்லை. கல்யாணமான புதிதில், சம்பிரதாயத்தை யொட்டி இருவரும் சேர்ந்து அமர்ந்து சாப்பிட்டார்களே, அதோடு சரி.

இரண்டு தம்ளரில் தண்ணீர் மொண்டு வைத்தாள்.

இரண்டு பேரும் தானே பரிமாறிக் கொள்ளலாம். சுப்புலட்சுமியும் அவள் புருஷனும் நகரத்தில் இப்படித்தான் செய்வார்களாம்! சுப்புலட்சுமி எத்தனையோ தடவைகள் சொல்லியிருக்கிறாள்.

சுப்புலட்சுமி அனுப்பியிருந்த வெற்றிலைப் பாக்கை எடுத்துக் கட்டிலில் வைத்தாள். இருவரும் அன்யோன்யமாகப் பேசிக் கொண்டே சுண்ணாம்பு தடவிச் சொன்னலாம்; வாய் சிவக்க...

'அட கடவுளே' அத்தான் சந்தேகப்படுவாரே! தான் இப்படிச் சந்தேகப்பட்டதற்காக அவளுக்கே சிரிப்பு வந்தது. அப்படி அவர் சந்தேகப்பட்டால், தான் இப்படிச் சந்தேகப்பட்டதைச் சொல்லி ரம்பவும் அவரைச் சிரிக்க வைத்து விடலாம்.

இப்படி ஒரு முடிவுக்கு வந்தபின், தனது என்றிருந்த இரண்டு ரவிக்கைகளையும் எடுத்து மாற்றி மாற்றிப் போட்டுக் கொண்டு அழகு பார்த்துக் கொண்டாள்.

சாப்பிட்டபின் வெல்லத் துண்டு ஒன்றை வாயில் அடக்கிக் கொள்ளும் வழக்கம் உண்டே அத்தானுக்கு. அட... வீட்டிலே துளி கூட வெல்லமில்லையே!

தெருக் கோடியிலே பூஷணத்தின் வீட்டில் வெல்லம் விற்பார்கள். ஆனால் அவள் அங்கு போனதே கிடையாது. மழை வேறு தூறிக் கொண்டிருந்தது. வெல்லம் இல்லையே! அதற்கு என்ன செய்வது? இத்தனை நாட்கள் கழித்து வீட்டுக்கு வரும் அத்தானுக்கு வெல்லம் இல்லையென்றால் நன்றாயிருக்குமா?

அவன் வந்தால் வழி தெரிவதற்காக ஜன்னல் கதவுகளைத் திறந்து வைத்து விட்டு

வீட்டுக் கதவைத் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டு மழையையும் பொருட்படுத்தாமல் புறப்பட்டாள்.

“எங்கேயம்மா இந்த மழையிலே வந்தாய்? வா, வா!” என்று சொல்லி வரவேற்ற ஜானகியம்மாள் அவளுக்கு உட்காரப் பாயைக் காட்டினாள். ஜானகியம்மாள் பூஷணத்தின் மனைவி.

பாக்கியத்தின் ஆடை அலங்காரத்தைப் பார்த்து விவரத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்டதும், அவள் கையில் வெல்லத்தைக் கொடுத்து நெற்றிக்குத் திலகமிட்டுத் தன் சின்ன மகளை அவளுக்குத் துணையாகவும் அனுப்பி வைத்தாள் ஜானகியம்மாள்.

மழை சற்று வலுத்தது. வீட்டுக் கதவைத் திறந்தவுடன் ஹரிக்கேன் விளக்கு ‘கப் கப்’ என்று குதித்தது காற்றில்.

பஸ் ரோட்டைப் பார்த்துக் கொண்டு விட்டு இடைகழிக்குள் கதவில் சாய்ந்தவண்ணம் உட்கார்ந்தாள் பாக்கியம். எதேச்சையாக வீட்டுக்குள் திரும்பிப் பார்த்தவளுக்கு ஜன்னல் வழியாக மழைச் சாரல் அடித்திருக்கிறது போல் இருந்தது. விளக்கடி நிழல் அதன் காரணமாக மேலும் கறுப்பாகத் தெரிந்தது. எழுந்து போய்ச் சாரல் அடிக்காமல் இருக்க அவள் ஜன்னல் கதவைச் சாத்தியிருக்கலாம். ஆனால் அவள் விரும்பவில்லை. ஏனெனில் கதவைச் சாத்திவிட்டால், அத்தானுக்கு வழி தெரியாதே?

மழை மேலும் வலுத்தது. காற்று கடுமையாகியது. மின்னல் வெட்டிய பொழுதெல்லாம் பஸ் ரோடு பளிச்சிட்டது. வழி மேல் விழி வைத்த வண்ணம் அப்படியே பார்த்துக் கொண்டிருந்தாள். தூக்கம் துளிக்கூட வரவில்லை.

இருட்டி இரண்டு ஜாமம் ஆகிவிட்டது. காற்று ‘ஹோ’வென்ற இரைச்சலுடன் வீசியது. பாக்கியத்துக்குப் பயமாகப் போய் விட்டது. ‘இன்றிரவு இனி அத்தான் வர மாட்டார். வந்தால் இனி நாளைதான். இந்தப் பாழாய்ப் போன மழையில் நனைந்து கொண்டு வருவதைக் காட்டிலும்...’ என்று எண்ணினாள் பாக்கியம்.

சாரல் நடு அறை வரை ஜன்னல் வழியாக விசிறி அடித்தது. பாக்கியம் எழுந்து ஜன்னல் கதவை மூடப் போனாள்.

ஜன்னலடி நிழலிலே காலுக்குக் கீழே ஏதோ மெத்தென்றது. பாக்கியம் திடுக்கிட்டுச் சட்டென்று பின் நகர்ந்தாள். அவள் வெல்லம் வாங்கிக் கொண்டு திரும்பி வீட்டுக்கு வந்த பொழுது கறுப்பாகத் தோன்றியது இதுதான்; மழைச் சாரலின் ஈரம் இல்லை. விளக்கு நிழலில் அது ஈரமாகத் தோன்றியிருக்கிறது.

விளக்கை எடுத்து வந்து கிட்டத்தில் போய்ப் பார்த்தாள். ஒரு சின்னத் துணி மூட்டை. அவள் அதை மெதுவாகக் கையில் எடுத்தாள். அத்தானின் நீலச் சொக்காயில் பொட்டணமாக முடிந்து வைத்திருந்த அதற்குள் துணி போல் ஏதோ தட்டுப்பட்டது.

‘ஆ! அத்தான் வந்து விட்டார்! எங்கே அவர்? ஒருவேளை மணியக்காரர் வீட்டுக்குப் போயிருப்பாரோ? ஆம். அப்படித்தான் இருக்க வேண்டும்! நான் வீட்டில் இல்லாத பொழுது வந்திருப்பதானால், வந்து வெகு நேரம் ஆகியிருக்க வேண்டுமே! இவ்வளவு நேரம் அவர்கள் வீட்டில் என்ன செய்து கொண்டிருப்பார்?’

வாசல்படிக்குச் சென்று பக்கத்து வீட்டை எட்டிப் பார்த்தாள். கதவு எல்லாம் சாத்தியிருந்தது. விளக்கு வெளிச்சமே இல்லை. எல்லோரும் நன்றாகத் தூங்கி விட்டார்கள் போலிருக்கிறது.

பாக்கியத்துக்குக் கைகால் ஓடவில்லை. யோசனை தீவிரமடைந்தது. ஏதோ நினைத்துக் கொண்டவள் வீட்டுக்குள் ஓடினாள். நிதானமாக மூட்டையைப் பார்த்தாள். மெதுவாக அவிழ்த்தாள். அதற்குள் அத்தான் எடுத்துப் போன பழைய வேட்டி துணிமணிகளும் புதுப் புடவை ஒன்றும் இருந்தன. விளக்கின் ஒளியிலே புடவையின் ஜரிகை பளபளத்தது. ஜரிகையிலே சந்திர வளையம் போட்ட கறுப்புப் புடவை. யாருக்காக? அவளுக்காக! எத்தனை நினைவு வைத்துக் கொண்டு அத்தான் வாங்கி வந்திருக்கிறார்! அப்படியானால் கட்டிலின் மேல் வைக்காமல் ஜன்னலின் கீழ் ஓரத்தில் ஏன் வைக்கணும்?

பாக்கியத்துக்குப் பைத்தியம் பிடித்தாற் போலிருந்தது. தலையைச் சுற்றியது. அப்படியே தொப்பென்று உட்கார்ந்து விட்டாள்.

அடுத்த கணம் இரண்டு தட்டுக்களுக்கு மிடையே ஏதோ வாரி இறைந்து கிடப்பதைக் கண்டாள். காலடியிலே அத்தானின் மணி பர்ஸ் கிடந்தது. கையில் எடுத்தாள் அதை. கனத்தது. ஒரு பஸ் டிக்கட், ஒரு பழைய ரசீது, ஒரு சிறிய பென்சில் துண்டு ஆகியவை இதே கிடந்தன.

பாக்கியத்துக்குச் சட்டென்று அதன் பொருள் விளங்கியது. அத்தான் வெளியில் இருந்த வண்ணமே ஜன்னல் வழியாக வீசி எறிந்திருக்கணும். இவற்றை யெல்லாம், கோபத்தோடு போட்டிருக்கிறாற் போலிருக்கிறது. எதற்காகக் கோபம்? இவற்றை இப்படி வீசி எறிந்து விட்டு எங்கே போய் விட்டார்? தலைவெடித்து விடும் போலிருந்தது பாக்கியத்துக்கு.

வெளியிலே வான் நீர் ஜன்னல் பக்கமாகத் தரதர வென்று ஒரே தாரையாகக் கொட்டிக் கொண்டிருந்தது. காற்று பேயெனச் சீறிக் கொண்டிருந்தது. மழை வலுத்துவிட்டது ஒரேயடியாக. கன மழை, பெரு மழை, அடை மழை. வானம் பொத்துக்கொண்டு விட்டதுபோல.

பாக்கியத்தின் முதுகிலே சாரல் அடித்தது. பாக்கியம் அசைந்து கொடுக்கவில்லை. நிலைக் குத்தலிட்டு ஒரேயடியாக வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். இருட்டும் வெளிச்சமும் அவளைப் பொறுத்த வரை ஒன்றாகி விட்டன. அவள் விழிகள் நீரில் முழுக்காடின.

அடுத்த கணம் அவளுக்குப் பின்னாலிருந்து ஒரு பெரு மின்னல் மின்னியது. அந்த மின்னல் ஒளியில், அவள் கண்ணெதிரே நன்றாகத் தேய்த்து வைத்திருந்த இரு தட்டுக்களும் தம்ளர்களும் பளிச்சிட்டன.

அவள் மனத்துள்ளே பெரும் புயல்!

வெளியே பெரு மழையின் பயங்கர ஓலம்!

—தமிழாக்கம்: ரா. வீ.



உலக சமாதானத்துக்காகப் பாடுபட்டதற்கான சமாதானப் பரிசு இரண்டு பேராசிரியர்களுக்குக் கொடுக்கப் பட்டது.

—முதல்நாள் செய்தி

சமாதானப் பரிசைப் பங்கிட்டுக் கொள்வதில் இரண்டு பேராசிரியர்களுக்கிடையே ஏற்பட்ட தகராறில் ஒருவர் கொல்லப்பட்டார்; மற்றவர் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்! —மறுநாள் செய்தி

★



பேச்சாளர்: (பிரசங்கத்தைப் பாதியில் நிறுத்திவிட்டு) கொஞ்சம் தண்ணீர் வேண்டும்.

தலைவர்: யாராவது நாலு அரசியல் தலைவர்களைத் தாக்கிப் பேசுங்கள், சார்! சோடாவே கிடைக்கும். கூட்டத்திலிருந்து வீசுவார்கள்!

★


"நீங்கள் அனுப்பிய சீர்வரிசைகளைப் பார்த்தேன். தங்கச் சங்கிலி கோத்த கைக்கடிகாரம் அழகாயிருந்தது. மோட்டார் சைக்கிள், கண்ணாடி பதித்த தேக்குமர பீரோ எல்லாமே கொள்ளை அழகு. உங்கள் மகளைத் தவிர.

—ஒரு மருமகன் மாமனாருக்கு எழுதிய கடிதத்திலிருந்து.



★

"ஏன் சார்! காரில் ஏதாவது ரிப்பேரா?"



"ஹி ஹி!.... அதெல்லாம் ஒன்றுமில்லை. இப்படி ஆட்களை வைத்துத் தள்ளினால் பெட்ரோல் செலவைவிடக் குறைவாக ஆகிறது. அதனால்தான்!"

பெண் பார்க்க வந்தவர்கள் பெண்ணுக்குப் பாட, ஆடத் தெரியுமா என்று சரமாரியாகக் கேள்வி கேட்டார்கள். எல்லாவற்றுக்கும் பொறுமையாய் பதிலளித்த பெண்ணின் தந்தை கடைசியாக அவர்களைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார்:

"உங்கள் பிள்ளைக்கு எங்கள் பெண் செய்யும் சமையலை முகம் சுளிக்காமல், வாந்தி எடுக்காமல் சாப்பிடத் தெரியுமா?"



★




டாக்டர் ஒரு குறிப்பிட்ட மருந்தையே எல்லா நோயாளிகளுக்கும் எழுதிக் கொடுக்கிறார் என்றால் என்ன அர்த்தம் தெரியுமா?

நோய் குணமானாலும் தானும் அந்த மருந்தை வாங்கிக் குடிக்கலாமே என்றுதான்!

— நர்ஸிங் ஹோமும், கட்டிலுமாகக் கிடக்கும் ஒரு நோயாளி கண்டுபிடித்த உண்மை

★



"பாடலுக்குப் பின்னணியில்தான் பாடிப் பழக்கம்!" —ஏ. எஸ். சுந்தரராஜன்

★

ஒரு நகைக்கடை. ஓர் அம்மாள் வந்து விலை விசாரிக்கிறாள்.

"அதோ அந்த நெக்லேஸ் என்ன விலை?"

"டேய், பையா! அம்மாவுக்கு ஓடிப் போய் ஒரு பாதாம்கீர் வாங்கி வா."

"நெக்லேஸ் இருக்கட்டும். இந்தக் கம்மல் என்ன விலையாகிறது?"

"ரொம்பவும் குறைவுதான், அம்மா! 450 ரூபாய் ஆகிறது. பையா! பாதாம்கீர் வேண்டாம், ரோஸ்மில்க் வாங்கி வா!"

"சரிதான் இந்த மூக்குத்தி?"

"85 ரூபாய். இரு! இரு! ஜூஸ் கிரஷ் போதும்!"


"இவ்வளவு விலையா? இருக்கட்டும். நான் கல்யாணத்துக்குப் பரிசளிக்க ஒரு வெள்ளி டம்ளர்தான் வாங்க வந்தேன். சீக்கிரம் எடுக்கிறீர்களா...?"

"பையா! இன்னுமா போகவில்லை? உடனே சென்று ஒரு டம்ளர் ஐஸ் வாட்டர் கொண்டு வந்து கொடு. எவ்வளவு களைப்பாக இருக்கிறார்!" —என். ஆர். கருணாநிதி



மிக நல்ல விசிறிகள் மிக நல்ல பொறி இயல் நிபுணத்துவ மூலம் உருவாக்கப்படுகின்றன.

அதுவே
ஓரியண்டின்
திறமை!



ஓரியண்ட்
விசிறிகள்

உருவ அமைப்பிலும் உயர்தர
உழைப்பிலும் பல வருடங்கள்
முன்னதாகத் திகழ்கின்றன

ஓரியண்ட் ஜெனரல் இண்டஸ்ட்ரீஸ் லிட்,
கல்கத்தா-11

ASP-OG1-7



படித்துப் பாருங்கள்



அழகின் ரகசியம்

அழகு என்ற சொல்லுக்குக் கலை என்றுதான் பொருள். அழகாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படாத பிறவிகளே கிடையாது. அதிலும் பெண்கள் ஆயுள் முழுதும் அழகாக இருக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்திலேயே இருப்பார்கள். எனவே வயது, மனக் கவலை, பொதுவாய் சில தவறான பழக்கங்கள் முதலியவற்றின் காரணமாக ஏற்படும் நரைகளையும், திரைகளையும் மறைக்க முயற்சி செய்வார்கள். அவர்கள் செய்யும் முயற்சி வெற்றி அளிக்கவில்லை என்பது மற்றவர்களுக்குத் தெரியும்; அவர்களுக்குத் தெரியாது. இக் காரணத்துக்காக விலை உயர்ந்த தைலத்தையும், விளம்பர மருந்துகளையும் உபயோகிப்பார்கள். எதிர்பார்க்கும் அழகு கிட்டாத கவலையில், இன்னும் அழகு குன்றிவிடுவார்கள்.

''அழகின் ரகசியம்'' என்ற புத்தகத்தில் இம்மாதிரி பயனற்ற செயற்கை அழகு முறைகளை எழுதவில்லை. அழகாக இருப்பதின் அடிப்படை ரகசியம் நன்றாக எழுதப்பட்டிருக்கிறது. அன்றாடம் மஞ்சள் பூசுவது, சத்துள்ள எளிமையான ஆகாரம் அழகாக இருப்பதற்கு எவ்வளவு அவசியம் என்பன போன்ற பல விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. எந்த எந்தச் சத்துக் குறைவினால் கூந்தல், சருமம், பல், நகம் இவை பாதிக்கப்படுகின்றன என்பதும் ஆங்காங்கு குறிக்கப்பட்டிருக்கிறது. சோர்வு, அகால வயோதிகம், நோய்கள், இவைகளைத் தவிர்க்க வேண்டிய முறைகளையும் எடுத்துக் காட்டியிருப்பது பாராட்டத் தக்கது.

இந்தப் புத்தகத்தை வாங்குபவர்கள் மூன்றே நாளில் அழகுப் பிம்பங்களாக மாறக் கூடிய மாயா ரகசியம் இதில் இருக்கிறது என்று ஏமாற வேண்டாம். அழகின் உண்மைத் தத்துவமும் அதற்குத் தேவையான பழக்க வழக்கங்கள் பற்றியும் எளிய தமிழில் அழகாக எழுதப்பட்டிருக்கிறது.

ஆசிரியை: சரோஜினி சங்கர்; அருணா வெளியீடு, தியாகராயநகர், சென்னை — 17; விலை: ரூ. 1—50.

அருமைத் தங்கைக்கு

உலகில் நிமிஷத்துக்குப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகள் பிறக்கின்றன. மக்கள் பேறு முற்றிலும் இயற்கையானதே. ஆனாலும், பெண்கள் ஏன், ஆண்களும் கூட, பிரசவம் ஓர் ஆபத்து என்று கருதுகிறார்கள். சில பெரியோர்கள் ''பெற்றுப் பிழைக்க வேண்டுமம்மா'' என்ற கவலையுடன் ஆசி கூறுகிறார்கள். இதைக் கேட்கும் கர்ப்பிணியின் மனம் கலங்குகிறது. தனக்கு ஓர் ஆபத்து இருக்கிறது என்ற உணர்வு மனத்தில் நிலைத்து விடுகிறது.

மிருகங்களுக்கும் பக்ஷிகளுக்குங் கூட இப் பேறு இருக்கிறது. ஆனால் அவை இயற்கை அறிவுடன் மட்டும் இருப்பதால், பிரசவம் சர்வ சாதாரணமாக இருக்கிறது. மனிதர்கள் இயற்கையை அவ்வப்பொழுது எதிர்ப்பதால் பிரசவங்கள் கோளாறாக ஆகிவிடுகின்றன. ஆனால் இன்றைய விஞ்ஞான உலகில், கோளாறான பிரசவங்கள்கூட ரண சிகிச்சையினால் காப்பாற்றப் படுகின்றன. ''அருமைத் தங்கைக்கு'' என்ற இந்தப் புத்தகத்திலுள்ள கடிதங்கள் முதன்முதலாகத் தாய்மைப் பேறடையும் தங்கைக்குப் பிரபல டாக்டர் ஒருவர் எழுதியவை எனக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இது இரண்டு மூன்று பிரசவங்கள் ஆன சில பெண்களுடைய அறியாமையைப் போக்க உதவும்படியும் அழகாக எழுதப்பட்டிருக்கிறது.

கருத்தரித்த முதல் வாரத்திலிருந்து தோன்றும் சின்னங்கள், தாயின் மாறுதல், சிசு நன்றாக வளர்ந்து, தாயும், சேயும் நன்றாக ஆரோக்கியமாக இருக்க வேண்டியதற்குச் செய்ய வேண்டிய கடமைகள்; இப்படி அருமையான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. இந்தப் புத்தகம் பெண்களுக்கு ஒரு வரப்பிரசாதம்.

ஆசிரியர்: டாக்டர் நந்தி; தமிழ்ப் புத்தகாலய வெளியீடு, 393, பைகிராப்ட்ஸ் ரோட், சென்னை-14; விலை: ரூ. 1—00.

குடும்பக் கலை (முதல் பாகம்)

முன் காலத்தில் நோய்கள் உண்டானால் மருந்தும், விருந்தும் மூன்று நாள் என்று சொல்லிக் கடுமையான சிகிச்சை செய்வார்கள். வியாதி குணமாகும். பின்னால் 'வருமுன் காப்பு என்ன? உடலுக்கு எத்தகைய சத்துகள் தேவை? எந்த நோய் என்ன சத்துக் குறைவால் வருகிறது?' என்றெல்லாம் அறிஞர்கள் ஆராய்ச்சி செய்தார்கள். அப்பொழுதுதான் நாம் 'வைட்டமின்' என்ற வார்த்தையையும் தெரிந்து கொண்டோம்.

குழந்தைகள் குடும்பச் செல்வங்கள் மட்டுமல்ல; நாட்டின் வருங்கால நன்மக்கள். தாய்மார்கள் குழந்தைகளைப் பெற்றுச் சிறு வயதில் உடலையும், நினைவு தெரிந்த பிறகு மனத்தையும் வளர்த்து விட்டால் மட்டும் போதாது. சின்னஞ்சிறு ஆல விதையில் பின்னால் மன்னன் மக்களோடு நிழலுக்குத் தங்கும் அளவு கொப்பும், கிளையும், இலையும் வளரும் சக்தி இருக்கிறது. அதுபோல் ஒரு சிசுவின் சக்தியும் அபாரமானது. ஒருகுழந்தை உடல் வளர்ச்சி, மன வளர்ச்சி, ஆத்ம வளர்ச்சி ஆகியவற்றை ஒருங்கே பெற்றுப் புகழோடு நாட்டின் நல்ல பிரஜையாக வாழ வேண்டுமானால் தாய் கருத்தரித்தது முதல் பொறுப்புடன் இருக்க வேண்டியதன் அவசியம் இந்நூலில் விவரிக்கப்பட்டிருக்கிறது. சிசுவின் பலதரப்பட்ட நிலைகளும் படங்களுடன் விளக்கப்பட்டிருக்கின்றன.

பிறந்த குழந்தையின் தேவை, தாயின் கவனம், ஒரு மாதம் முதல் விளையாட்டுப் பருவத்தின் எல்லா நிலைகள்—இவை புத்தகத்தில் தெளிவாக இடம் பெறுகின்றன. குழந்தைகளுக்கு நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொடுப்பது எப்படி? என்ன உணவுகள் கர்ப்பிணிகள் சாப்பிடக் கூடியவை? குழந்தைகள் சத்துள்ள உணவு எது என்பது போன்ற எல்லா விஷயங்களும் எழுதப்பட்டிருக்கின்றன.

பின் பாதியில் நம்முடைய அன்றாடச் சமையல் திட்டம் குறிக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் சத்து குறையாமல் சமைக்கும் முறை, உணவுப் பொருளை எப்படி வாங்கவேண்டும், எவ்விதம் காப்பாற்ற வேண்டும் என்றெல்லாம் ஒரு பெண்ணுக்குத் தேவையான அறிவுரைகளைச் சொல்லுகிறது இப்புத்தகம்.

குடும்பக்கலை (இரண்டாம் பாகம்)

பூப்பது ஆண்டுகளுக்குமுன் நம் நாட்டில் மனை இயல் கல்விமுறை டில்லியில் லேடி இர்வின் கல்லூரி ஒன்றில் தான் பாடமாக இருந்தது. இன்று எல்லா மாகாணங்களிலும் மனை இயல் கல்விமுறை இருக்கின்றது. ஆண்டு தோறும் ஆயிரக்கணக்கான மாணவிகள் படித்துத் தேர்வும் பெறுகிறார்கள்.

ஆனால் எல்லோருக்கும் பெண்களைக் கல்லூரியில் சேர்த்துப் படிக்க வைப்பது சாத்தியமில்லை. பல காரணங்களால் அந்த வாய்ப்பு கிடைக்கப் பெறாத பெண்களுக்கு, 'குடும்பக்கலை' இரண்டாம் பாகம், ஒரு வரப்பிரசாதம். ஒரு பெண் தோன்றின நாள் முதல் அறிவு, ஆற்றல், ஆண்மை, பண்பிலும் வளர்ச்சி பெற்றுக் கொண்டே இருந்தால்தான் அவள் குடும்பத்திலும் சமூகத்திலும் தெய்வமாக மதிக்கப் பெறுகிறாள். "மனை இயல்" பாடத்தை - இரண்டு ஆண்டுகள் கல்லூரியில் படிப்பதை - சுருக்கமாகக் கருத்துடன் இந்தப் புத்தகத்தில் எழுதி யிருக்கிறார் இதன் ஆசிரியை.

ஆரோக்கியம், வீட்டு வைத்தியம் வீட்டில் உதவி இம்மூன்று தலைப்புக்களின் கீழுள்ள விஷயங்கள் ஒரு பெண்ணுக்குத் தன்னையும் குடும்பத்தையும் ஆரோக்கியமாக வளர்க்கக் கற்றுக் கொடுக்கிறது.

அடுத்த பகுதி குடும்பப் பெண் தன் வருவாய்க்கு ஏற்ப என்ன உடைகள் வாங்குவது, எப்படிப் பாதுகாப்பது என்றெல்லாம் அறிவிக்கிறது.

மூன்றாம் பகுதியில் ஒக்கிய குடும்பம், இன்பகரமான சூழ்நிலை அமைப்பது எவ்விதம், குடும்ப நிர்வாகம், மிகவும் சிக்கலான வரவு செலவுத் திட்டம், மனை அலங்காரம், இப்படி முக்கியமான கருத்துக்கள் இடம் பெறுகின்றன.

அடுத்த பகுதியில் இசைப் பாட்டங்களை, பூஜை, பிரார்த்தனை, கோவிலுக்குப் போவது போன்ற ஆன்ம வளர்ச்சிக்குரிய விஷயங்களும் அழகாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

இப் புத்தகத்தில் ஆங்காங்கு விளக்கப் படங்கள் சேர்க்கப்பட்டிருப்பது போதனை முறைக்குப் பயன்படும்.

ஆசிரியை: ராஜம்மாள் பி. தேவதாஸ்; பாரிநிலையம், 59, பிராட்வே சென்னை — 1; முதல் பாகம் ரூ. 2-50. இரண்டாம் பாகம் ரூ. 2—75.

—வசுமதி ராமசாமி

உதயசந்திரன்

வரலாற்றுப் புதினம் எழுதும் ஆசிரியருக்குப் பல சிரமங்கள். வரலாற்றிலிருந்தும் நழுவாமல் இருக்க வேண்டும். கதையைச் சுவாரசியமாகவும் கொண்டு செல்ல வேண்டும். ஒன்றை மற்றது மிஞ்சி விட்டாலோ கதை ரசப்படாது. சமையல் ருசியாக இருக்க வேண்டுமென்றால், எந்த எந்தப் பொருள் எவ்வளவு எவ்வளவு தேவையோ அவ்வளவுதானே போட வேண்டும்? உப்பு அதிகம் என்று ஆகி விட்டால், சமையல் நன்றாயிருக்குமா? அதே போலத்தான் வரலாறு தழுவிய புதினத்திலே, வரலாற்று விவரம் அதிகமாகக் கொடுக்கப்பட்டு விட்டாலும் ரசிப்பதில்லை. வரலாறே இல்லாதது போல எழுதினாலும் 'ஏதோ கதை அளக்கிறார்' என்று ஆகிவிடும்.

அதற்கு இடம் கொடாமல் ஆசிரியர் விக்கிரமன் 'உதய சந்திர'னின் கதையைச் சுவைபடச் சித்திரிக்க முயன்றிருக்கிறார்.

'உதயசந்திரன்—அப்பாடா! அவர் இல்லாது போனால் இந்த ராஜ்யம் இரட்டர்களோடோ, சாளுக்கியர்களோடோ, பாண்டியர்களோடோ சேர்ந்திருக்காதா? எத்தனை வேடங்கள்! எத்தனை ராஜ தந்திரங்கள்! இரட்டர்களின் அரசனைச் சுருக்கமாக வரவேற்றுக் காஞ்சி மீது படையெடுக்கச் செய்து அவர் மகளையே அரசர்க்கு மணம் புரிய வைத்த பெருமையைப் புகழ்வதா? மாற்றான் சூழ்ச்சி ஒவ்வொன்றையும் எப்படியோ அறிந்து அதற்குத் தக்கபடி மாற்றுத் திட்டங்கள் தீட்டினாரே, அதைப் புகழ்வதா?

உதயசந்திரனில் காணும் ஆசிரியரின் எழுத்தாற்றல் நாளுக்கு நாள் வளர்ந்து பூரண சந்திரனாகப் பரிணமிக்கும் என்ற நம்பிக்கையை ஊட்டுகிறது.


வெளியிட்டோர்: ஜெமினி பிரசுரம், எல்லையம்மன் காலனி, சென்னை-6; விலை: ரூ. 4.

வைதிக தர்மவர்த்தனி

அருள் நோக்கோடு துலங்கும் காஞ்சி காமகோடி பீடம் ஆசாரிய சுவாமிகளை அட்டையில் தாங்கி வைதிக தர்மவர்த்தனியின் சித்திரை மலர் பக்தி மணத்தோடு வெளிவந்துள்ளது. நம் புராதனப் பண்பாட்டையும், தர்மத்தையும் பக்திச் செல்வத்தையும் விளக்கும் பல அரிய கட்டுரைகள் இம்மலரில் அடங்கியுள்ளன. லோக க்ஷேமத்துக்கான ஆசாரிய சுவாமிகளின் உபதேசத்தையும் இம்மலரில் காண்கிறோம்.

ஆசிரியர்: ஸோமதேவ சர்மா; கிடைக்குமிடம்: வைதிக தர்மவர்த்தனி காரியாலயம், கடவாசல், வடகால் போஸ்ட், (வழி) சீர்காழி; வருஷ சந்தா ரூ. 5.00; தனிப் பிரதி விலை: 44 காசுகள்.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited, at the Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor, T. Sadasivam.


Arvind
QUALITY FABRICS
வெள்ளை பாப்ளின்
கோல்ட் டிரிங்க்
கலர் பாப்ளின்
ப்ளூபெர்ட்
புட்டா
•SANFORIZED•
REGISTERED TRADE MARK
அரவிந்த் மில்ஸ் லிட்.
ஆமதாபாத்–2
REGISTERED USER OF THE TRADE MARK 'SANFORIZED'

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

